எனெஸ்கே பிலிம்ஸாரின்
மணமகள்
டைரக்ஷன்
N.S.கிருஷ்ணன்
திரைக்கதை.வசனம்
மு.கருணாநிதி
விரைவில்
வருகிறது
BALU BROS
விவரங்களுக்கு :- எனெஸ்கே பிலிம்ஸ், சென்னை-17.

பழையன கழிதலும் புதியன புகுதலும்





பெர்குஸன் வெற்றியின் மூலகாரணங்கள்

1. ஆழப்பாய்தல்,
2. இழுக்கும் சக்தி அல்லது டிராக்ஷன்.
3. மூடப்பட்டிருக்கும் பொருளிலிருந்து பாதுகாப்பு.
4. ஹைடராலிக் மெகானிஸத்தினால் ஏற்படும் திடம்.
5. உட்காருமிடத்திலிருந்தே கண்ட்ரோல்.
6. இலவச பயிற்சி.
7. 6 மாதத்திற்கு சர்விஸிங்.
8. எளிதாகக் கிடைக்கக் கூடிய ஸ்பேர் பார்ட்ஸ்.
9. விரைவான டெலிவரி.



விலை ரூ. 7,100/- ஸேல்ஸ் &
உள்ளூர் வரி தனி. F. O. R. சென்னை.

M/s. கமானி என்ஜினியரிங் கார்ப்பொரேஷன்
லிமிடெட்
"ஸாகர் மான்ஷன்" 2, ஜோன்ஸ் தெரு,
பிராட்வே, மதராஸ்–2.

K

SOLE DISTRIBUTORS
for WESTERN, CENTRAL AND SOUTHERN INDIA !

KAMANI ENGINEERING CORPORATION LTD., BALLARD ESTATE, BOMBAY.

K. B. Ltd. / F4

நெடுநாள் நீடித்து இருப்பதற்காக

ஏஸிஸி சிமெண்டால் கட்டப்பட்டது



தி பம்பாய் ஹாஸ்பிட்டல்.

★

ஸிமெண்டுகளின் உபயோகங்களையும் அவைகளை எப்படி பூசுவது என்கிற விஷயங்களைப் பற்றி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 9, மௌண்டு ரோடு, மதராஸிலிருந்து இலவசமாக ஆலோசனைகள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின் வியாபார மானேஜர்கள்

தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்



நான் பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயிலை உபயோகித்திருக்கிறேன். அது கேசத்திற்கு ஆரோக்கியம் அளிக்கும் ஓர் சிறந்த கூந்தல் தைலம். நல்ல கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவுவதுடன் தேகத்திற்குக் குளுமையையும் அளிக்கிறது.

(Sd.) T. R. Rajakumari

PRESIDENT VEGETABLE HAIR OIL

RATHOD TRADING Co.,
SOWCARPET, - MADRAS I.

தேடிய பொருள் காண்கிறாள்

அருணா

கர்ப்பாசய ரோகநிவாரணி

அவள் ஆர்வத்துடன் படிக்கும் பத்திரிகையில் அருணாவின் உபயோகத்தினால் பெண்மணிகள் அடையும் நன்மையை அறிந்து தானும் உடனே அதை வாங்க நிச்சயிக்கிறாள்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட்
மதராஸ் 17.

பரிசு ரூ 6000

முதற்பரிசு ரூ 3000
2வது பரிசு ரூ 2000
3வது பரிசு ரூ 1000

அதிர்ஷ்டப் பரிசு. (ஒரு ரூபாய்க்குமேல் கட்டணம் செலுத்தியவர்களின் பெயரைக் குலுக்கு சீட்டெடுத்து) ஒருவருக்கு ஒரு அழகிய வெள்ளித் தட்டு.

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

★ பிரவேசக் கட்டணம். கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே. ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் மேற்கொண்டு ஒரு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

முடிவு தேதி 12—9—51

		விடைகள் 1	2
1	......என்றால் சிறுவர்களுக்கு ஒரே குஷிதான்!	கலியாணம்	பிரயாணம்
2	பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க பற்பல வித......களைக் காணலாம்.	பிரசாரம்	பிரசுரம்
3	எதிர்பாராத சமயம் திடீரென விருந்தாளி வந்தால் நமக்கு இது உண்டாகக் கூடும்.	உவப்பு	தவிப்பு
4	ராணுவத்திலிருப்பவர்களுக்குப் பல......கள் இருக்கும்.	கடுமை	கடமை
5	குழந்தைகளின் உடம்பு ஆரோக்கியமாக வளர அவர்களுக்கு நல்ல இதுதேவை	ஊட்டம்	ஆட்டம்
6	இது கூர்மையாக இல்லை எனில் பயன் என்ன?	புத்தி	கத்தி
7	இது இல்லாமல் ஒரு கட்டுரை எழுதியனுப்பினால் பத்திரிகாசிரியர் எடுத்துக் கொள்வாரா?	அருத்தம்	பொருத்தம்
8	வக்கீல்கள் தம் கட்சியின் பாயின்ட்களை வீட்டிலேயே எழுதிக் கொண்டுவந்து கோர்ட்டிலே இது செய்வதுண்டு.	வாதித்தல்	வாசித்தல்
9	முன்னாட்களில் பாரத வீரர்கள் இத்துடன் போர் செய்தார்களாம்.	ஆண்மை	நேர்மை
10	குற்றம் செய்துவிட்டுப் பெற்றோர்களிடம் அகப்பட்டுக்கொண்ட உடன் சில குழந்தைகள் பயத்தால்.........சகஜம்.	அழுதல்	புளுகல்
11	பொதுஜன சேவை செய்வதற்கு இது இருக்கவேண்டும்.	தெம்பு	அன்பு
12	மக்களுக்கு.......ஊட்டவே பற்பல புராணக் கதைகளை புனைந்துள்ளனர் நம் பெரியோர்கள்.	பக்தி	புத்தி
13	மனைவி, மக்கள், ஒன்றும் இல்லாவிட்டால் வாழ்க்கையில்..... ஏது ஐயா!	இன்னல்	இன்பம்

மேலே உள்ள கட்டத்தில் பதிமூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டுஇரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம். அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். விடைகளை வார்த்தைகளாகவும் எழுதலாம், 1-2 என்ற எண்களை உபயோகித்தும் எழுதலாம், பர்முடேஷன் முறையும் அனுமதிக்கப்படும்.

கட்டணத்தை மணியாடர் மூலமேதான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்தனுப்பவேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம் கட்டாயம் எழுதவேண்டும். இப் போட்டியின் சரியான விடை புரட்டாசி இதழ் காவேரியில் வெளிவரும். நேயர்களுக்குத் தபால் மூலமும் அனுப்பப்படும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டபடிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டுவோர் எழுதவும்.

கூப்பன்களும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம் :- **மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி**
"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

போட்டி 17-ன் சரியான விடை :—(1) நியாயம் (2) இரசிகர் (3) விவசாயம் (4) இனிமை (5) கும்பல் (6) பிழைப்பு (7) பழமை (8) வாசித்தல் (9) வெட்டி (10) நிரக்கு (11) அன்பு (12) வண்டி (13) வலிமை. 2 2 1 1 1 2 1 1 2 2 2 2 1

போட்டி—16-ன் பரிசு விவரம்

முதற் பரிசு தலைக்கு ரூ. 320—0—0 விதமும் (விசேஷப் பரிசு பௌண்டன் பேனாவும்) 2-வது பரிசு தலைக்கு ரூ. 20—0—0 விதமும், 3-வது பரிசு தலைக்குரூ. 3—2—0 விதமும் வழங்கப்பட்டன. பரிசுகள் 24 & 26—7—51 தேதிகளில் அனுப்பப்பட்டன. முழு விவரங்கள் வரலக்ஷ்மி க்ராஸ் வோர்ட்ஸ் நெ. 18 இதழில் பார்க்கவும். இதழ் முற்றிலும் இலவசம்.

எங்கும் கலக்டர்கள் தேவை. நல்ல கமிஷனும் மெரிட் பரிசும் உண்டு.

மலேரியாவினால்
நான் சாகத்தான்
போகிறேன்
என்று எண்ணினேன்

இறுதியில்
'பாலுட்ரின்'
என்னை மீட்டுவைத்தது



சென்றதடவை நான் காரியமாக ஊருக்குப் போனபோது மலேரியா என்னை முடித்துவிடப் பார்த்தது. நாள் கணக்கில் அடித்த ஜுரம்தான் எத்தனைக் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டது! குணமாகும் என்கிற நம்பிக்கையையே இழந்துவிட்டேன். கடைசியில், ஒரு நண்பரின் யோசனையின்பேரில் தினம் ஒரு மாத்திரை வீதம் நான் 'பாலுட்ரின்' சாப்பிட ஆரம்பித்தேன். மூன்றே நாட்களில் ஜுரம் பறந்தோடிவிட்டது. நான் முற்றிலும் புதிய மனிதனாகவே மாறிவிட்டதாகக் கருதலானேன். அதுமுதலாக நான் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை உட்கொண்டு வருகிறேன். மலேரியாவும் என் ஜோலிக்கு வருவதில்லை.

ICI

பாலுட்ரின்*
டிரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

* அணுவுக்கு ஒரு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IX-P 138 TM

ஸ்டாண்டர்ட்

வான்கார்ட்



குடும்பத்திற்கேற்ற எங்கும் பிரசித்திபெற்ற கார்

கீழ்க்குறித்த குணாம்சங்களை கவனியுங்கள்:

★ சுருள் ஸ்பிரிங்குகளும் மெத்தையும் கூடிய சௌகரியம்

★ ஆறு பேர் தாராளமாக உட்காரலாம்

★ *17.8 H. P.* எஞ்சின்

★ *8"* க்ளியரன்ஸ்-நாட்டுப்புற ரஸ்தாக்களுக்கு இணையற்றது

★ மிக சிக்கனமான பெட்ரோல் செலவு

★ மோட்டார் சவாரியில் மிக நவீன வசதியனைத்தும் உடையது.

யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) லிமிடெட்,

மதராஸ் — பெங்களூர் — உதகமண்டலம்

jayant
THE MARK OF
FINE FITTINGS
AGENTS:
BEST & CO. LTD.,
MADRAS & BRANCHES.
BZ-40

காவேரி

பொருளடக்கம்

கர மலர் 11 | ஆவணி இதழ் 1

சுதந்திரமும் ஜனநாயகமும் ... 11

கதம்பம் ... 12

சுதந்திர பலிகள் ... 14
சபரி

ஸ்ரீ ஸ்துதி ... 23
ஏ. கே, ராகவாச்சாரியார்

மூலதனத்தின் அவசியம் ... 27
அ. வேணுகோபாலன்

மீட்சி ... 33
வசுமதி

எது இன்பம்? (தொடர் கதை) ... 43
வே. ரங்கராஜன்

காட்டில் இட்ட கூழ் ... 60
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

ஜீவித லக்ஷியம் ... 66
கே சுந்தராம்பாள்

வேசையர் ... 75
தி. சேஷாத்திரி

குறிப்பு:

'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள், அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு		
	ரு.	அ.	பை.	ரு.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ARMSTRONG
THE BETTER BICYCLE

சென்னை-600 008
199330

ஆம்ஸ்டிராங்.
சிறந்த பைசைகிள்



சிறந்த பைசைகிளாகிய **ஆம்ஸ்டிராங்** ஒன்று உங்களிடம் இருந்தால் போதும்; வேலை நிமித்த மாகவோ வேடிக்கையாகவோ எவ்வித தொந்தரவும் இன்றி நீங்கள் ராஜபாட்டை போல சவாரி செய்யலாம். ஒரு **ஆம்ஸ்டிராங்** வாங்குங்கள். சைகிள் தொழிலில் பிரசித்திபெற்ற தயாரிப்பாளர்களின் சிறந்த தயாரிப்பு உங்களுக்குச் சொந்தமாயிருக்கிறது என்கிற பெருமை உங்களுக்கு விரைவில் ஏற்படும். அதன் பெயரே குறிப்பிடுவதுபோல், வலிவாகவும், இந்தியாவின் கரடுமுரடான ரஸ்தாக்களில் நீடித்து நின்று வருஷக்கணக்கில் நம்பிக்கையளிக்கத் தக்கவாறு உழைப்பதாகவும் அது விளங்குகிறது. **ஆம்ஸ்டிராங்** — மிகவும் பிரபலமான பைசைகிள்—ரஸ்தாவில் அதை நம்புங்கள். அதற்குக் கொடுக்கும் விலை அதற்குத்தகும்.

விநியோகஸ்தர்கள்:

ராயல் சைகிள் அண்டு மோட்டார் கம்பெனி

13/14, பிராட்வே, தபால் பெட்டி நெ. 219, சென்னை-1.

ARMSTRONG
The BETTER BICYCLE
ARMSTRONG CYCLES LTD
BIRMINGHAM

காவேரி

கர ௵
மலர் 11

''சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''—பாரதியார்

ஆவணி
இதழ் 1

15 SEP 1951
MADRAS

சுதந்திரமும் ஜனநாயகமும்

சுதந்திரம் உதித்த நாள் இன்று. நாடெங்கும் மக்கள் குதூகலிக்கின்றனர். எனினும் பாமர மக்கள் சோர்வுற்றுத்தான் காணப்படுகின்றனர். பசிப்பிணியும், அகவிலை உயர்வும் மக்களை வாட்டுகின்றன.

ஆட்சி முறையில் ஊழல்கள் பன்மடங்கு அதிகரித்துமக்களைப் பெரிதும் பாதிக்கின்றன. காங்கிரஸ் என்ற கட்சிக்கே மாசுகற்பிக்கக் கிளம்பிவிட்டார்கள். காங்கிரஸ் ஸ்தாபனம் புதிய கைகளுக்கு மாறிவிட்டது.

ஜனநாயக ஆட்சியின் உட்கருத்தை நாம் உணரவில்லை. பெருவாரியான வோட் பெறுகிறவர் தலைவர் என்றானவுடன், விரும்பத்தகாத முறைகளில் கூட அந்த வோட்டைப் பெற்று, தலைவர் ஆகிவிடுகிறார்கள். ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவுடன் இத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் தொடர்பற்று விடுகிறது. மக்கள் மனதை அறிந்து ஆட்சி நடத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தம் போய், சட்ட சபை அங்கத்தினர்கள் மனம் நோகாதவாறு நடந்தால் போதும் என்று ஏற்பட்டு விட்டது. மேலும் கட்சிக் கட்டுப்பாடு என்ற பெயரால் தம்மை ஆதரிக்காத சிலரையும் இத் தலைவர்கள் அடக்கி விடுகிறார்கள். எனவே மக்களது மனம் மந்திரி சபைகளில் பிரதிபலிப்பதில்லை. சூழ்ச்சி முறையே ஆட்சி முறையாக மாறிவிட்டது. இதைச் செவ்வனே சாதிக்க ஜனநாயகம் உதவுகிறது. ஜனநாயகம் என்ற சொல்லுக்கு இன்று புதிய அர்த்தம். ஜனங்கள் ஆதரவால் ஓட்டைப் பெற்று, அவர்கள் புரியும் ஆட்சி என்று பறை சாற்றிக் கொண்டு, தங்கள் இஷ்டப்படி சட்ட சபை அங்கத்தினர்களுள் பெரும்பாலாருடைய ஆதரவைப் பெற்று ஆட்சி செய்வதுதான் இன்று ஜனநாயகம். முறையே, சட்ட சபை அங்கத்தினர்கள் மந்திரிகளுக்கு ஒத்துப்பாடி தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொண்டு சுகமே வீற்றிருப்பதுதான் தங்கள் ஜன நாயகக் கடமை என்று வாழ்ந்து வருகிறார்கள். பொதுத் தேர்தல்கள் நடந்த பிறகு எந்தச் சட்ட சபை அங்கத்தினராவது தம்மைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களைக் கூப்பிட்டு, தாம் செய்து வரும் காரியங்களையோ அல்லது தம் கட்சி ஆற்றும் பணியையோ எடுத்துக் கூறியதாக நாம் அறியோம்.

ஒருவிதத்தில் அவர்கள் மீதும் குற்றம் சாட்ட இடமில்லைதான். சட்ட சபை அங்கத்தினர்களில் பெரும்பாலானவர்களுக்கு அங்கு இயற்றப்படும் சட்டங்களைப் புரிந்து கொண்டு அதில் சீர்திருத்தம் செய்யும் ஆற்றலோ திறமையோ கிடையாது. இதற்கு வாக்காளர்கள்தாம் பொறுப்பாளி. ஒருவரைச் சமையல்காரராக நாம் அமர்த்த வேண்டுமென்றால் அவருக்குப் போதிய அனுபவமோ அல்லது ஞானமோ இருக்கிறதா என்று கவனியாமல் நாம் அமர்த்திக் கொள்வோமானால், பின்பு சமையல் மோசம், வாயிலெடுக்க வருகிறது என்று வருந்துவதில் பயனில்லை. இன்று அரசியலில் நடப்பது இதே; இதற்கு நாம்தான் பொறுப்பாளி.

நமது சுதந்திரம் ஏட்டளவில் மட்டுமல்லாமல், நம் வாழ்க்கையிலும் ருசிக்க வேண்டுமானால் கட்சிக் கட்டுப்பாடின்றி ஒழுக்கமும் திறமையும் ஒழுங்கே அமையப் பெற்ற பெரியார்களை ஆட்சிப் பீடத்தில் அமரச் செய்ய நாம் உதவ வேண்டும். அவர்களைக் காங்கிரஸ் காரியக் கமிட்டியோ தேர்தல் போர்டோ அழைத்து அவர்களைத் தேர்தலில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அல்லது மந்திரி சபை அமைக்குங்கால் அவர்களைச்சேர்த்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்தாலன்றி நாட்டில் ஆட்சிமுறை சீர்திருந்தாது; சுதந்திரம் தித்திக்காது. அடுத்த சுதந்திர தினத்திற்குள்ளாகவாவது இது கைகூட வேண்டுமென்று இறைவனை இப் புனித நாளன்று நாம் அனைவரும் வேண்டுவோமாக.

காவேரி ஆரம்பமாகிப் பத்து ஆண்டுகள் நிரம்பி, இவ்விதழ் முதலாகப் பதினோராவது ஆண்டு உதயமாகிறது. வாசகர்களின் ஆசி தொடர்ச்சியாக இருக்குமானால் **காவேரி** காலக் கிரமத்தில் மங்கைப் பருவம் அடைந்து, இலக்கியத் தொண்டை இடைவிடாது புரிந்து வருவாள் என்பது திண்ணம்.

கதம்பம்

பிச்சைக்காரத்தனம்!

பிச்சைக்காரர்கள் என்றால் பலர் கேவலமாக நினைப்பது உண்டு. உண்மையில் அவர்கள் போற்றுதலுக்குரியவர்கள். கவலையில்லாத ஆத்மாக்கள். வரும்நாளைப்பற்றி நினையாதவர்கள். பிச்சை எடுத்தாலும் எடுப்பார்களே தவிர ஒருவனுக்கு அடிமைப்பட்டு வேலை செய்யமாட்டார்கள். சுதந்திரதாகம் அதிகம் கொண்டவர்கள். மற்றவர்கள் புண்ணியம் சம்பாதிக்க உதவும் உத்தமர்கள். “பிச்சைக்காரர்களாகிய நாங்கள் இல்லாவிட்டால் பணக்காரனுக்கு மதிப்பேது?” என்று மார்தட்டிப் பேசும் ரோஷக்காரப் பிச்சைக்காரர்களும் உண்டு. பிச்சை எடுப்பதிலும் அதிகாரத்துடன் கேட்டு வாங்குபவர்களும் உண்டு.

இத்தகைய சிரேஷ்டமான மனிதப்பிறவிகளைச் சித்தூர் நகரசபையார் ஒருங்கே திரட்டி இல்லம் அமைத்து அவர்களுக்கு உடை, உணவு கொடுத்துப் போஷித்துவந்தார்கள். இந்த வாழ்க்கையில் பிச்சைக்காரர்களுக்குப் பிடித்தமில்லை. ஆகவே சொல்லாமல், கொள்ளாமல் இல்லத்திலிருந்து துணிகள் இன்னும் அவசிய சாமான்களை எடுத்துக்கொண்டு ஒருநாள் திடீரென்று மறைந்துவிட்டார்கள். ரூ, 470/- நகரசபைக்கு நஷ்டமாம் இதனால். “ஒரு பெரிய நகர சபை பிச்சைக்காரத்தனமாக இதை ஒரு நஷ்டமெனச் சொல்லிக்கொள்ளுகிறதே, வெட்கமில்லையா?” எனப் பிச்சைக்காரர்கள் பலர் கூடிப் பேசுவது நமது காதில் விழுகிறது!

வாதம்!

“பழைய பழக்கவழக்கங்கள் கால மாறுதலையொட்டி இல்லாமல் பிற்போக்குள்ளனவாயிருந்தால் அவற்றை ஞாயஸ்தலங்கள் அங்கீகரிக்க முடியாது. மகா புத்தரும் காளிதாஸரும் பழைய வழக்கம் என்பதற்காக மட்டும் மதிப்புக் கொடுக்கவேண்டியதில்லை என்று கூறியுள்ளார்கள்.

பகல் 1-45 மணிக்கு முன்னதாக ‘மாத்யானிகம்’ செய்ய ஒரு பிராமண நீதிபதி ஆசனத்தைவிட்டு இக்காலத்தில் அப்புறப்படலாமா? 6000 வருஷ வழக்கம் என்று அதைச் சொல்லிக்கொள்ளலாமா? பகல் 12 மணிக்குச் சாட்சிக் கூண்டில் விசாரணையிலிருக்கும் ஒரு முஸ்லீம் சாட்சி, அல்லா அவர்கள் ஆணையின்படி தான் பிரார்த்தனைக்குச்செல்லவேண்டும் என்று கூறலாமா? ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் தன் கண் முன்பாகக் கொலை நடந்தாலும் தான் ஒன்றும் செய்யமாட்டேன் என ஒரு கிறிஸ்துவப் போலீஸ் அதிகாரி சொல்லலாமா?”

இப்படியாகச் சென்னை உயர்தர நீதிமன்றத்தின் நீதிபதி கனம் ஏ. எஸ். பி. அய்யர் ஒரு வழக்கில் வாதம்செய்து தீர்ப்பு எழுதியுள்ளார்.

விஷயம் சிறியது. கணவனை இழந்த ஒரு விதவை, தன் கணவன் இறந்து நான்கு மாதங்களே ஆகிறபடியால் தான் குல ஆசாரப்படி நீதிஸ்தலத்துக்கு நேரில் ஆஜராக இயலவில்லை. தன்னை, தன் வீட்டில் ‘கமிஷன்’ மூலம் விசாரிக்கவேண்டுமென்று வேண்டினாள்.

விதவையின் வேண்டுகோள் காலத்துக்கேற்றதல்ல என்று நீதிபதி அவர்கள் சொல்லிவிட்டார்கள். விதவையின் கஷ்டங்கள் பல என்பதற்கு நீதிபதியின் தீர்ப்பும் ஒரு அத்தாட்சி.

வடக்கு மலையானுக்கு எச்சரிக்கை!

வரப்பிரஸாதி வடக்கு மலையானுக்கும் சோதனை! திருவேங்கடத்தானின் திருச்சக்தியைச் சோதிக்கத் திருவுள்ளம் கொண்டார் ஒரு திருத்தொண்டர். தனி ஆந்திர மாகாணம் எற்படும்வரை வேங்கடாசலபதி முன் உண்ணா விரதமிருந்து வைகுண்ட நாதனின் திருவடி சேரவும் துணிந்துவிட்டார்! ஸ்வாமி சீதாராம் என்ற அத் தொண்டருக்கு ஆத்திரம் கொண்ட ஆந்திரர்கள் ஆசி கூறுவது இயற்கையே!

ஆனால் அந்தக் கோவிந்தனுக்கும் ஒரு எச்சரிக்கை விடுகிறோம். பிரிவினையால் ஏற்படும் அல்லல்களை அவன் அறியாதவனல்ல. அவசரப்பட்டு வரம் கொடுத்து, ‘திருவேங்கடத்தான் குடியை கெடுத்தான்’ என்ற அவச்சொல்லுக்கு உள்ளாக வேண்டாம்!

இப்பொழுதே செய்!

சர்க்கார் காரியாலயங்களில் அவசரமாக எதுவும் செய்யப்படமாட்டது! ஆமைவேகத்தில்தான் நடைபெறுவது வழக்கமும், பழக்கமும் ஆகும். வந்த தபால்களையும், மனுக்களையும் அப்படியே கட்டிப் போட்டு, தலையணையாக உபயோகிப்பது தொன்றுதொட்டு குறிப்பாக ரெவின்யூ இலாகாவில் அனுஷ்டிக்கப்படும் முறை. சுதந்திரம் கிடைத்த பிறகும் அம்முறை அமுலில் இருக்கின்றது. சற்றே கடுமையாகக் கேட்டால் தபால் அல்லது மனு வந்து சேரவில்லை என்று கூசாமல், தயங்காமல் சொல்லி விடுவார்கள். ரெவின்யூ இலாகாவின் இந்த ஊழலைச் சீர்திருத்துவது என்பது முடியாதகாரியமெனச் சொல்லப்படுகிறது.

இப்படியிருக்க எஸ். கே. சீட்டுர் என்ற அதிகாரி தம் இலாகாவில் ஒரு நூதன முறையைக் கையாளுகிறார். "இப்பொழுதே செய்", "தாமதம் ஆபத்து" என்று எழுதிய பலகைகளை நிறையத்தயார்செய்து தாமதம் செய்யும் உத்தியோகஸ்தர் மேஜையின் மீது ஒரு பலகையைப் பொருத்தி விடுகிறார். நல்ல பலன் கிட்டி வருகிறதாம்.

நமக்கு நம்பிக்கை பிறக்கவில்லை! ஆபீஸில் வெற்றிலை பாக்குப்போட்டுக்கொண்டு மிகுந்த சுண்ணும்பைத் தடவப் பலகை உபயோகப் படுத்தப்படும் என்றே நாம் எண்ணுகிறோம்.

அல்லது விபரீதமும் நேரலாம். உடனே தானே செய்ய வேண்டும்? என்று ரெவின்யூ இலாகா மனுவைக் காட்டு இலாகாவிற்கு அனுப்பிவிடலாம்! வேலை உடனே முடிந்து விட்டது. தாமதம் சற்றும் ஏற்படவில்லை! நமது மனுவைக் காட்டில்தான் பிறகு தேட வேண்டும்!

மக்களின் கஷ்டங்களை அதிகாரிகள் இன்றும் உணரவில்லை. பொறுப்பு என்பது மருந்துக்குக்கூட கிடையாது. அதிகார மமதை இன்னும் அகலவில்லை. இலஞ்சம், ஊழல் இவைகளுக்கே ஆதரவு கிடைக்கின்றது. ஆகவே "இப்பொழுதே செய்" "தாமதம் ஆபத்து" என்ற கூச்சல் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் அதுவும் குறிப்பாக ரெவின்யூ இலாகா சிப்பந்திகள், அதிகாரிகள் இவர்களின் மனப் பான்மையை, மாற்ற முடியாது. அப்படி ஏதாவது மாறுக நேர்ந்தால் அதை அதிர்ஷ்டம், அற்புதம் என்றே சொல்ல வேண்டும்.

அதிசயம் ஆனால் உண்மை!

பாம்பு கடித்து மனிதன் இறந்தான் என்றால் அதிசயமில்லை. மனிதனைக் கடித்துப் பாம்பு இறந்தது என்றால் நம்புவது கடினம். ஆனால் உண்மையில் அவ்விதம் நடந்ததாகச் செய்தி கூறுகிறது.

விசித்திர விநோத சம்பவங்கள் நடக்கும் அமெரிக்கா தேசத்தில் சான் அன்டோனியன் என்ற நகரில் பிரஸ்தாப சம்பவம் நிகழ்ந்தது. கொடிய விஷப் பாம்பு ஒன்று விமானப் படையைச் சேர்ந்த கோமீஸ் என்பவனை நன்றாகக் கடித்தது. ஆனால் கோமீஸ் விஷக் கடியால் பாதிக்கப்படவில்லை. பாம்பு இறந்து விட்டது! இந்த விந்தையின் காரணத்தைக் கோமீஸ் விளக்குகிறான். "நான் கொடிய விஷ ரசாயனப் பொருளாகிய ஸோடியம் சைனைட்டை (Sodium cyanide) நிறைய என் உத்தியோக அலுவல் நிமித்தம் உபயோகித்துப் பழகிவருகிறேன். அப்பொருளின் கொடிய விஷம் என் தேகத்தில் ஊறிக் கிடக்கின்றது. ஆகவே பாம்பு விஷமோ அல்லது வேறு எவ்விதக் கொடிய விஷமும் என்னைப் பாதிக்காது. என்னைப் பாம்பு கடித்தால் அதற்குத்தான் ஆபத்து.

சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்

மாணவர் இல்லத்திற்கு உதவுங்கள்!

ஸ்ரீ ராமகிருஷ்ண கிருபா அமெச்சூர்கள் கல்கி எழுதிய, வி. கே. பார்த்தஸாரதி ஐயங்கார் நாடகமாக அமைத்த "**சிவகாமியின் சபதம்**" என்னும் நாடகத்தை 26—8—51 மாலை 6 மணிக்கு, கும்பகோணம் மீனாக்ஷி தியேட்டரில் நடிப்பார்கள்.

பொதுமக்கள் கண்டுகளித்து மாணவர் இல்லத்திற்கு உதவுவார்களாக.

சுதந்திரப் பலிகள்

- CHEENU -

(எத்தனையோ பேர் நாட்டுக்காகத் தியாகம் செய்திருக்கிறார்கள்—செய்கிறார்கள்—செய்வார்கள். ஆனால் அத்தனை தியாகிகளும் நாட்டின் சரித்திர ஏடுகளில் இடம் பெறுகிறார்களா என்றால்—இல்லையென்றுதான் கூறவேண்டும். இன்னும் சில தியாக சீலர்களைப்பற்றி ஏடுகள் கூறுவதில்லை. ஆனால் பரம்பரை பரம்பரையாகத் தடும்பக் கதைகளாகப் பேசி ரஸித்து வருகிறோம்.

இங்கே நாம் காணும் தியாகிகளைப் பற்றிக் கேள்வி ஞானந்தான் உண்டு. கேட்டவைகளைக் கதை ரூபமாக்கி, கதை மூலமாகவாவது சில தியாக உணர்ச்சிகள் இன்று நம்மில் இடம் பெறட்டுமே என்ற நோக்கந்தான் எனக்கு.)

1

கட்டிளம் காளைகள் கதறி யெழுந்த கட்டபொம்மன் யுகம் அது. 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற வீரர் வாழ்ந்த நாள். திட்டம் தீட்டி வேலைசெய்த ஆங்கிலேயர் திணறித் தவித்த காலம். எட்டிய தூரமெல்லாம், "கட்டபொம்மனுக்கு ஜே......" என்ற கட்டியம் அன்றி வேறு 'சவால்' கிடையாது.

எங்கும் போர் இரைச்சல், 'தடால் தடால்' என்ற கத்திகளின் களியாட்டம். 'படார் படார்' என்ற துப்பாக்கிகளின் கூட்டிரைச்சல். 'டுமீல் டுமீல்' என்ற பீரங்கிகளின் பேய்க் கூத்து.

சிப்பாய்களின் கால்பட்ட தென் பாண்டிநாட்டின் சந்துபொந்துகளெல்லாம் 'சொதசொத' வென்று இரத்தச் சகதியாயின, கட்டபொம்மனும், ஊமைத்துரையும் உணர்ச்சித் தீவட்டிகளைப் போகுமிடங்களிலெல்லாம் வீசியெறிந்து சென்றனர், அவைபட்ட இடங்களிலெல்லாம் தீ பரவியது. தென் தமிழகம் தியாகப் புகையால் மறைந்தது. திக்கு முக்காடிவிட்டனர் திசையறியாத ஆங்கிலேயர்.

கட்டபொம்மனைத் தெரிந்த அளவுக்கு கலிங்கத்தேவனை மக்கள் அறிந்ததில்லை. ஆனால் பரிதாபம், கட்டபொம்மனையே மக்கள் உணர்ந்த அளவுக்கு, நாட்டின் சரித்திர ஏட்டைத் தொகுத்தோர் உணரவில்லையே! பாரதப் புத்துணர்ச்சிக்கு வித்

திட்ட வீரனுக்குச் சரித்திரம் கருந் திரை யிட்டிருக்கிறது. நாடு செய்த சதியும், ஏடுகளின் இருட்டடிப்பும் தியாகிகளைப் புகழ்வதில் கூட நமக்குள்ள குறுகிய மனப்பான்மையின் முத்திரைகள்தாம். ஏடுகள் மறந்ததைத் தமிழ் வீடுகள் மறக்கவில்லை. பிறந்த குழந்தைக்குப் பாலோடு சிறந்த கட்ட பொம்மனையும் ஊட்டி வந்தனர், நம் முன்னோர். வெற்றிலை இடிக்கும் கிழவியிடம் 'கதை' என்று கேளுங்கள், சுற்றி வளைத்துக் கட்ட பொம்மன் பாரதத்தைத்தான் அவிழ்த்து விடுவாள்.

இரவின் பூர்ண நிலவைக் காட்டி, "இம்மாதிரி பௌர்ணமி வெளிச்சத்திலே ஒரு நாள் ஊமைத் துரை......" என்று நீட்டி முழக்குவார்கள்.

"கருங் 'கும்' ங்கற இருட்டில்தானும் வெள்ளைக்காரன் யாருக்கும் தெரியாதுன்னு கட்ட பொம்மன் பட்டாளத்தைத் தாக்குவானும். ஆனால் நம்ம புலிகளிடத்திலே அதெல்லாம் பலிக்குமா......?" என்று அமாவாசை இருட்டைக்கண்டாலும் பழைய கற்பனைதான் எழும். இந்த ரீதியில் நிலாச் சாப்பாட்டிலும், அமாவாசை இருளிலும், திண்ணைப் பேச்சுக்களாக, தீராத புறணிகளாக. உண்மைக் கற்பனைகளாக ஊரார், பேசிக்களித்த 'துக்கடா சீரிஸ்'களில் ஒன்றுதான் இந்தநிகழ்ச்சி.

ஆனால் கதை அடிப்படையில் தொடர்பின்றி, கண்ணீரும் கம்பலையுமாக என் பாட்டி விக்கி விக்கி விளக்கிய விவரங்கள், அவளுடைய வெறும் கைச்சரக்காய் மட்டு மிரா என்பது என் துணிபு. கற்பனைச் சம்பவங்கள் ஓரளவு கண்ணீரைச் சுரக்கலாம். ஆனால் நித்தியமும் கலிங்கத்தேவன், கண்ணம்மா என்ற பெயர்கள் அடிபடும் பொழுதெல்லாம் 'குபுக்' கென்று அழுது விடுகிறாள் பாட்டி. இது கற்பனையல்ல; முழுக்க முழுக்க உண்மை யென்ற என் தீர்மானம் வளர்ந்து கொண்டேயிருந்தது.

அன்றொரு நாள், "ஏண்டாப்பா பள்ளிக்கூடம் போவலையா நீ? உச்சிப் பொழுது ஆகுதே" என்று தன் பொக்கை வாயைத் திறந்து கேட்டாள் பாட்டி.

"இன்னிக்கு சுதந்திர தினம் பாட்டி." என்றேன் நான்.

"அப்படின்னா..........................?"

"வெள்ளைக்காரனை வெருட்டின நாள். அதுக்காக லீவு இன்னிக்கு" என்று என் உபாத்தியாயர் சொன்னதை விளக்கினேன்.

"வெள்ளைக்காரனை யாருடாப்பா விரட்டினது? இப்பொ இருக்கிற சோதா புள்ளைகளா? அடேயப்பா, அந்தக் காலத்திலெ உங்க முப்பாட்டன் இருந்தப்பொ பார்க்கணுமாம். பல்லுக்குப் பல்லு ரெத்தத்துக்கு ரெத்தம்னு தெருவே அலறிச்சாம். நான் சின்ன கொழந்தையா யிருந்தப்போ எங்க பாட்டி சொல்லும், கதை கதையா. இந்த எம்பது வயசிலேயும் என்னால் அதை மறக்க முடியலையப்பா. அந்தக் காலந்தான், நான் சொல்லுவேனே கலிங்கத்தேவன் கண்ணம்மான்னு அவுக இருந்த காலம்............" பாட்டியின் குழிக்கண்களில் மறுபடியும் கண்ணீர்த்தேக்கம்-சிதறட்டுமா வேண்டாமா என்று தொங்கிக்கொண்டிருந்தது,

"ஏம் பாட்டி இந்தக் கலிங்கத்தேவன், கண்ணம்மாங்கற பேர்களைச் சொல்ற பொழுதெல்லாம் ஏன் இப்படி அழறே? வெறும் கதையை நினைச்சா அழுவாங்க?" என்று வயதுப் பள்ளங்கள் வரையறையின்றி விழுந்து கிடந்த அவள் முகத்தை நோக்கினேன்.

"கதையாடா அது? இப்பொ இருக்கிற புள்ளைகளுக்கு நெசமும் தெரியாது, பொய்யுந் தெரியாது. எல்லாம் கதையாகத் தானிருக்கும். நெசமா நடந்ததப்பா. அது நம்ப குடும்பத்தைச் சேர்ந்தவங்கதானும் அந்தரெண்டுபேரும்........." என்று விம்மினாள் பாட்டி.

பாட்டியின் வார்த்தை கதையல்ல, உண்மை நிகழ்ச்சிதான் என்ற என் யூகம் பலித்துவிட்டதல்லவா? கலிங்கத்தேவனும், கண்ணம்மாவும் இவர்கள்தான்.

2

கட்ட பொம்மனுக்குக் கீழ் செயலாற்றிய ஐந்து சேனாதிபதிகளில் கலிங்கத்தேவன் ஒருவன். கட்டான கரும் தேகன். அட்டியில்லாது போரில் ஆர்வமாயுழைப்பவன் அவன்.

"கலிங்கா!" என்றான் கட்டபொம்மு.

"பிரபு!" என்று துள்ளி வந்தான் கலிங்கத் தேவன்.

"கும்பினிப்பயல்களின் கேந்திரம் பாளையங் கோட்டை. நம்மால் எதுவும் ஆகாதென்று குதூகலித்துப் போயிருக்கின்றான்களாம் நாய்கள். கடாரபுரத்துக்குப் போகவேண்டும் நீ. நம்மவர்களானநட்டுவன், கட்டையத்தேவன் இவர்களையும் சேர்த்துக்கொண்டு சுற்றுப் புறங்களிலேயே படைக்கு ஆள் திரட்டுங்கள். அடுத்த பௌர்ணமியில் பாளையங்கோட்டை அரோகரா. இது தான் இப்போதைய என் திட்டம்," என்றான்.

"அது தானே எங்களுக்குச் சட்டம்; இதோ." அடுத்தகணம் கலிங்கத் தேவனின் கருங்குதிரை கடாரபுரப் பாதையில் புழுதிப்படலத்தைக் கிளப்பி கொண்டு பறந்தது.

3

கடாரபுரத்துச் சாவடி மைதானத்தில் ஆண் பெண்களின் அடங்காத கூட்டம். சாவடி

வாசலில் கிடந்த கருங்கல் மேடை யொன்றில் துள்ளிக்குதித்து நின்றான் கலிங்கன்.

'கலீர்' என்ற ஓசையுடன் பட்டயத்தினின்று வாளை உருவினான். அப்பொழுதுதான் கிழக்கு வானைக் கிழித்துக் கொண்டு உதித்த பூர்ண நிலா வொளியில் 'பள பள'த்தது அவ்வீர வாள். தீவட்டிகளின் 'திகு திகு' வென்ற நெருப்பொளியில் செருக்குடன் பொலிந்தது அவன் முகம். வாளை உயர்த்திப் பிடித்தான்.

"பண்டைக் காலந்தொட்டுப் பாண்டியர் வழி வந்த இப் பட்டாக் கத்தியின் மீது ஆணை. சொந்தமும் சுகமும் தந்து சுதந்திர வாழ்வளிக்கும் செந்தமிழ் நாட்டின் மீது ஆணை. அண்டையில் குடி புகுந்த ஆங்கிலர் ஒழிய வேண்டும். நம் பண்டைய நாடு பலம் பெற்று வாழ வேண்டும், சண்டையில் உயிர் கொடுக்க, சாகாத புகழ் அடைய, நாட்டுக்குச் சேவை செய்ய, வீட்டுக்கொரு ஆண் வேண்டும்" என்ற அவன் வீர மொழிகளில் மின்னல் பளிச்சிட்டது. இடி இடிடுத்தது. அதைக் கேட்டு மக்கள் செய்த ஆரவாரத்தில் பீரங்கிகளின் பேரொலியும், துப்பாக்கிகளின் திடீர்ப் பிரயோகமும், வேல்களின் சல சலப்பும் விண்ணைப் பிளந்தன.

ஆரவாரித்த மக்கள் கூட்டத்தைக் கலிங்கனின் கண்கள் வட்ட மிட்டன. நிலவொளியும், தீ யொளியும் அவன் முகத்தை ஒரு தீப ஸ்தம்பமாக்கிக் காட்டின. அதில் வீரக்கனல் தெறித்தது. வெற்றிப் புன்னகை விளையாடியது. உருண்டு கொண்டே யிருந்த அவன் கண்கள், முன் வரிசையில் தன்னையே விழுங்குவதுபோல் பார்த்து நின்ற உருவம் ஒன்றில் அப்படியே பதிந்துவிட்டன. தன் வாய் வீச்சைக் கேட்டுக் கொண்டு தேவதை யொன்று நிற்பதை இது வரை அவன் கவனிக்கவேயில்லை.

ஆம், தேவதை தான் அவ்வுருவம். திகைக்க வைக்கும் பருவச்சுமையோடு தன் குத்தும் பார்வையால் ஒரே க்ஷணத்தில் குடைந்துவிட்டாள், கலங்காத கலிங்கத் தேவனின் மனதை. பக்கத்தில் ஒருவன் பிடித்து நின்ற தீவட்டியைப் பார்த்தான். மறுபடியும் முன் நின்ற பெண்ணைப்பார்த்தான். 'திரு திரு' வென்று அழகுக்கனல் பெருகிக் கொண்டே யிருந்தது அவள் முகத்தில். தன்னைத்தானே சமாளிக்கும் பொறுப்பில் அதிகக் கஷ்டப்பட்டுப் போனான் அவன். ஆரவாரம் செய்த கூட்டத்தைக் கையமர்த்தினான். புயலின் பின் அமைதி என்பார்களே. அப்படி அடங்கி விட்டது ஆரவாரம்.

பேசுவதற்காக வாயைத்திறந்தான், கலிங்கத் தேவன், இடையிட்டது ஒரு மணிக்குரல். 'கிணு கிணு'த்த அவ்விளங்குரல் தன் முன்னால் நின்ற பெண்ணுடையது என்று அறிந்த அவன்

எது வேண்டும்?

சேவையா? சிக்கனமா?

இரண்டுமே உங்களுக்குக் கிடைக்கும்.



வெலாக்ஸ் மிகச் சிறந்து விளங்கும் இந்த ஆறு ஸிலிண்டர் வாக்ஸால் வேகமாகச் செல்லக்கூடியது; சிறந்த சேவை தரக்கூடியது. மணி ஒன்றுக்கு 75 மைல் வேகத்தில் ஓடும். காலன் பெட்ரோலுக்கு அதிக மைல்கள் ஓடும் அற்புதம் இது.

வைவர்ன் உங்கள் சிக்கனத்திற்கு ஏற்ற சிறந்த கார் இது. நாலு ஸிலிண்டர் வாக்ஸால், சாதாரணமாக ஓட்டினால் காலனுக்கு 35 மைல் செல்லும் வேகமாக ஓட்டினால் மணிக்கு 60 மைல்களுக்குமேல் போகும்.

இன்றே வந்து எம்மைக் காணுங்கள்! இப்புதிய வாக்ஸால் சிக்கனத்துடன் கூடிய சேவையை உங்களுக்கு எப்படித் தருகிறது என்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் காண்பிக்கிறோம்.

- சௌகரியம்!
- பிரயாண சுகம்!
- தோற்றம்!

சிக்கனத்துடன் கூடிய சேவை

வாக்ஸால்

வெலாக்ஸ் '18' ... **வைவர்ன் '12'**

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்

மவுண்ட்ரோட், :: சென்னை.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிமிடெட்

மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம்.

முகம் பரவசத்தால் விரிந்தது. "என்ன?" என்றான். கூட்டத்தினர் அனைவரும் "என்ன" என்பது போல் அவள் நின்ற திசையை நோக்கினர்.

"வீட்டுக்கொரு ஆண்வேணும்ங்கறீங்களே வீட்டிலே ஆண்களே இல்லேன்னா?" என்று பட, பட'த்தாள் அந்தத் துடுக்குக்காரி.

தன் அரும்பு மீசையை முறுக்கிக் கொண்டான் கலிங்கன். "ஆண்கள் இல்லாத வீடுகளைப் பற்றிக் கவலையே யில்லை" என்று பொதுப்படக் கூறிவிட்டு அந்த ஆரணங்கின் முகத்தைப் பார்த்தான். சூம்பிப் போய், 'சப்' பென்று கவிழ்ந்து விட்டது அம் முகம் உற்சாகம் துளும்பிய அவள் கேள்விக்கு உகந்த பதில் தான் அளிக்கவில்லை யென்பதைப் புரிந்து கொண்டான்.

......நடு வயதினரும், இளங்காளைகளுமாக ஆறுயிரம் ஆண்கள் போருக்குத் தயார் என்பது போல் பிடரியை உலுப்பினர். பூரித்துப் போனான் கலிங்கத்தேவன். இன்னும் ஒரு தினம் கடாரபுரத்தில் தங்குவது என்று ஏற்பாடாயிற்று.

போருக்கான ஏற்பாடுகளை முடித்து, மக்கள் கலைந்து, ஊர் அடங்குவதற்குள் நடு ஜாமம் கழிந்துவிட்டது. பளபளத்த பௌர்ணமி நிலவும் மேற்குத் திசைப் பக்கம் கொஞ்சம் கொஞ்சமாய் நகர்ந்து கொண்டிருந்தது. கிராமத்துச் சாவடித் தூண் ஒன்றில் குதிரையைக் கட்டி விட்டு, வைக்கோல் பொதிந்த மெத்தை யொன்றில் 'அம்பிகே குமரித் தாயே.........' என்று உடம்பை முறித்த வண்ணம் படுத்தான் கலிங்கன்.

கோழி கூவும் நேரம். திடுக்கென்று எழுந்து உட்கார்ந்தான் அவன். மேற்கே உருண்டு திரண்டு ஓடிக் கொண்டிருந்த நிலா திடீரென்று அவனை நோக்கி வர ஆரம்பித்தது. மிரள மிரள விழித்தான். கண்களை அழுத்தித் தேய்த்துப் பார்த்தான். தன்னை நோக்கி வருவதுவானத்து முழு நிலா அன்று. அம் முழு நிலாவை மங்கவைக்கும் ஒரு மாது சிரோமணி யென்பது புலனாயிற்று. நிலாவைப் போல் வட்ட முகம். அதே தங்கநிறம். ஆனால் நடமாடும் நளின சுந்தரியாய்த் தோன்றினாள் அவள்.

கலிங்கத் தேவனுக்கு ஒரு சந்தேகம். அந்த நாட்களில் சில வெள்ளையர் பெண் வேஷங்களணிந்து கட்டபொம்மனின் சிப்பாய்களில் சிலரைக் கொன்றதாக, மணியாச்சி வட்டாரத்திலிருந்து வதந்திகள் பரவின. தன்னை நோக்கிவந்து கொண்டிருக்கும் வெண்ணிறமாது தான் அங்கு வந்துள்ள செய்தியறிந்து வேஷ மணிந்த வெள்ளையனாயிருந்தால்............? எதற்கும் முன்னெச்சரிக்கை அவசியமென்று தலைக்கு அடியில் கிடத்தியிருந்த வாளை எடுத்துக் கொண்டான். பெண்ணுருவம் தன்னை நெருங்குமுன், அவனே "யார் நீ?" என்ற அதட்டலுடன் அவளை நெருங்கினான். வாள் அவள் நெஞ்சுக்கு நேராக நீண்டது.

கண்கள் அவள் முகத்தை உற்று ஆராய்ந்தன. மறு கணம் சொல்லாமல் கொள்ளாமல் வாள் உறைக்குள் மறைந்தது.

"ஐயா........" என்று ஆர்வக்குரல் எழுப்பிய அப் பெண் கொஞ்ச நேரத்துக்கு முன் கூட்டத்தின் முன்னணியில் நின்று 'வீட்டிலே ஆண்களே இல்லைன்னு......'? என்று வினா எழுப்பினாளே அதே அழகுக் குமரிதான்.

"இந்த நேரத்தில் இங்கே......" என்று மென்று விழுங்கினான் கலிங்கன்.

"கூட்டத்தில் நான் கேட்டேனே?' என்று மிடுக்காகப்பார்த்தாள் அவள்.

'கல கல' வென்று சிரித்தான் அவன். "தமிழகத்தில் ஆண் பூண்டே அழிந்து போகவில்லை. இத்தனைக்கும் பெண்களைவிட ஆண்களே அதிகம். நாங்களெல்லாம் வெள்ளையன் குண்டுக்குப் பலியாகி, திருநெல்வேலி வட்டாரத்திலேயே ஆண் பஞ்சமென்று தெரிந்தால் மட்டும், பெண் பட்டாளம் புறப்படட்டும், அதுக்கு நீயே 'படைத் தலைவியாப் போகலாம். அது வரையில், வீட்டில் ஆண்களே இல்லைன்னு......' என்ற பேச்சுக்கு இடமே இல்லை தெரிந்ததா?" என்று வைக்கோல் மெத்தையில் சாய்ந்தான்.

அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை. இரண்டுங் கெட்ட நேரத்தில், அதுவும் க்ஷணத்துக்கு க்ஷணம் ஆசையைக் கிளறிக் கொண்டிருக்கும் அழகிய பெண்ணோடு சல்லாபம்—முதல் அநுபவம் அவனுக்கு. போருக்கு அஞ்சாத அவன் நெஞ்சம் புகைபோல் மறைந்து கொண்டிருந்தது அவள் முன்னால். எதற்கும் உருகாத அவன் சித்தம் கொஞ்சம் கொஞ்சமாய் உருகி நெகிழ்வது போன்ற உணர்ச்சி. இவ்வளவு நேரம் 'எப்படியடா அவளோடு பேசினோம்?' என்று நினைக்கவே ஆச்சரியமாயிருந்தது அவனுக்கு. தன்னையே கண் கொட்டாமல்பார்த்து நின்றவளை வெறித்துப் பார்த்தான். ஏதோ பலஹீனம் ஒன்று அவன் இருதய மூலையில் கன்னமிட்டதையும் அவன் உணராமலில்லை.

"வீட்டில்................." என்று கெட்டியாக ஒட்டிப்போன உதடுகளை மெல்லத்திறந்தான்.



"அப்பா இல்லை, அண்ணன்... ...ஆண் துணை யாருமே யில்லை. நானும் எங்க அம்மாவும் மட்டுந்தான்......" ஏதோ புது ஆதரவை எதிர்பார்க்கும் ஏக்கம் படர்ந்திருந்தது அவள் முகத்தில். தன் தலையில் முக்காடிட்டிருந்த துணியை இலேசாக விலக்கிக்கொண்டே அவன் காலடியில் உட்கார்ந்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் உஷ்ணத் திவலைகள்கலிங்கன் பாதத்தில் சொட்டிட்டுக் குளிர்ந்தன. "ஏன் அழுறே?" என்று பரபரப்புடன் வினவினான்.

பெண்ணின் விம்மல் அதிகரித்தது, விக்கி விக்கி அழுதாள். "என் பாட்டன், என் அப்பன், என் அண்ணன் எல்லோருமே கும்பினிக்காரனுக்கு எதிரியாச் சண்டை போட்டு வீரமாச் செத்த வங்க. அந்த வம்சத்திலே பேர் சொல்லக் கூட ஒரு ஆம்பளை கிடையாது இப்போ. நீங்க என்ன டான்னு ஆம்பளைக்குத்தான் வீரமும் பலமும்ங்கறமாதிரி பேசிட்டீங்க. என்னைப் போல, பொம்பளைகள்கிட்ட வீரமில்லையா? எத்தனை நாள் தான் வீடே கதின்னு கெடக்கிறது? எங்கள் குடும்பத்தையே நசுக்கிப்போட்ட கும்பினிக்காரன்களிலே ஒருத்தனையாவது நான் பழி வாங்கினாத்தான்..." என்று அவள் முடிக்கு முன்பே," அந்தப் பழிவாங்கற வேலையை என் கிட்டெ விட்டிடு. ஒருத்தனில்லை, ஒரு நூறு கும்பினியான்களைக் கொன்னு குவிக்கிறேன்" என்று தன் கைகளை மடக்கினான் கலிங்கன். "நான்

போவுறேன்" என்று கிளம்பினாள் அப் பெண். விரக்தியின் சாயை படர்ந்திருந்தது அவள் வார்த்தையில்.

கலிங்கத் தேவனின் மனம் கலங்கியது. 'உன்னை ஒரு பொருட்டாக மதித்து வந்தாளே, அவளைத் தேறுதல் கூறி அனுப்பாமல்.........பாவம், அனாதைப் பெண் போலிருக்கிறது. என்ன இருந்தாலும் நீ எடுத்தெறிந்தாற் போல் பேசி யிருக்கக் கூடாது. சண்டை சண்டை யென்று நாளெல்லாம் மண்டை உடைப்பதிலேயே ஈடு பட்ட உனக்குப் பெண்களிடம் பேசும் இங்கிதமே தெரியவில்லை. என்ன உருக்கத்தோடு உன்னை நாடி வந்தாளோ அவள்? 'நான் சண்டைக்கு வரட்டுமா?' என்று கேட்பதற்காகவா ஒரு பருவப் பெண் இரவையும் லட்சியம் செய்யாமல் ஓடி வருவாள்? ஏதோ உன்னிடம் பேச வேண்டுமென்று அவளுக்கு ஆசை. வீரனிடம் போர் சம்பந்த மின்றி வேறு எதைப்பற்றிப் பேசுவது? அதற்காகவே சண்டைக்கு அனுப்ப எங்கள் வீட்டில் ஆணில்லை, அப்படி இப்படி யென்று பன்னிப் பன்னிப் பேசினாள். ஆண் துணையில்லை யென்று அழுத்தி அழுத்திக் கூறினாளே, அப்பொழுதே நீ புரிந்து கொள்ள வில்லையே அவள் மனக்குறையை? அவள் விம்மலும், கண்ணீரும் அர்த்தமற்ற அவலச் செய்கைகளல்ல கலிங்கா ....' என்ற எண்ண அலைகள் மனக்கலக்கத்தில் மோதி மோதித்திரும்பின.

'சடக்' கென்று எழுந்தான் கலிங்கன். கடமையொன்றை உணர்ந்த திருப்தி அவன் முகத்தில் தாண்டவ மாடியது. தனக்கு முன்னால் போய்க் கொண்டிருந்த பெண் அறியாத வகையில் அவளைப் பின் தொடர்ந்தான். இரண்டு மூன்று தெருக்கள் தாண்டி, பனை ஓலை வேய்ந்த சிறு வீட்டினுள் நுழைந்து படலைச் சார்த்தினாள் அவள். படலை ஒட்டி நின்று கொண்டு உள்ளே நிகழ்ந்த உரையாடலை உற்றுக் கேட்டான்.

"கண்ணம்மா என்ன பாத்தியா அவனை? நான் சொன்ன அடையாளம்......" என்ற வயதான பெண்ணின் ஈனக்குரல் முதலில் கேட்டது.

"அம்மா......"என்ற கூக்குரலுடன் 'கோ' வென்றுஅழுவதும் அதை யொட்டிக் கேட்டது. அது சாவடிக்கு வந்த இளம் பெண்ணின்குரல் தான் என்று நிச்சயித்துக் கொண்டான் கலிங்கன். சிறிது நேரம் மௌனம்.

"அம்மா அவரேதான். வலதுபக்க நெத்தியிலே அதே அழகு மறுவு......" வெளியில் நின்ற கலிங்கன் தன் நெற்றியிலிருந்த கறுப்பு மறுவைத் தடவிக் கொண்டான். உள்ளிருந்து பேச்சு இன்னும் தொடர்ந்தது. "அம்மா, உற்றுப் பார்த்தேன் அவரை. ராவுலே ஒரு பெண் வலியவந்து பேசுறாளுன்னா, ஒவ்வொருத்தன் எவ்வளவோ கெட்ட எண்ணத்தோட இருப்பான். அப்படி எதுவுமில்லாத ஒழுக்கமானவரம்மா அவரு......" என்றாள் இளம் பெண்.

"கண்ணே, அவன் எண்ணமெல்லாம், 'கும்பினியானை எப்படி எப்படி ஒழிக்கணுங்' கறதிலேயே இருக்கும். என் வீரக்காளை அவன்..."என்று இருமினாள் வயது முதிர்ந்தவள்.

"அம்மா............" என்ற குமரியின் குரலில் ஆர்வம், பதற்றம் முதலிய உணர்ச்சிகள் பின்னித் தோன்றின. "...அவருதான் என் மாமன் மகன்......என் அத்தான்னு நிச்சயமாத் தெரிஞ்சதும் என் மனம் பட்டபாடு...அப்படியே கட்டிப்பிடிச்சுக் கதறலாம்போல இருந்தது. அதுதான் வந்த அழுகையை அடக்கிட்டுப் பேசாமல் எழுந்து வந்துட்டேன்" என்றாள்.

கால் கடுக்க வெளியிலேயே நின்றுகொண்டிருந்த கலிங்கத் தேவனுக்கு உடல் பூராவும் 'ஓய்யார உஷ்ணம்' தாவுவதுபோலிருந்தது. 'கண்ணம்மாவா......என் அத்தை பெண்ணாம்...... எனக்கு ஒரு அத்தையோ அவளுக்கு ஒரு ஆசையான பெண்ணோ இருப்பது இதுவரை தெரியாதே. அனாதை நான் என்று எண்ணி யிருக்க, ஆதரவான ஒரு அத்தையும், அழகுக் கென்றே ஒரு கண்ணம்மாவுமா.........?' அவன் கால்கள் தரையில் பாவவில்லை. அங்கும் இங்கும் பார்த்தான். மேற்கு நிலாவின் முகமெல்லாம் சிரிப்பாய்த் தோன்றியது அவனுக்கு. 'படார்' என்று பனை ஓலைப்படலைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான். நுழைந்தவன் செயலற்று அப்படியே நின்றான். அடுத்த நிமிடம் "அத்தான்......" என்று அட்டைப் பிடியாக அணைத்துக் கொண்டாள் அந்தக் கண்ணம்மா. ஜீவன் உதயமாகும் அடித் தளத்திலிருந்து எழும்பியது அவள் வார்த்தை.

மந்திரத்தில் கட்டுண்டவன் போல் அசையாது பரக்க பரக்க விழித்துக் கொண்டு நின்றவனின் கையைப் பிடித்துக் கயிற்றுக் கட்டிலில் உட்கார வைத்தாள்.

"அப்பா......கலிங்கா......" என்று ஹீனக் குரலில் முணகியது கட்டிலில் புதைந்து கிடந்த மெலிந்த உருவம். சிலைபோல் உட்கார்ந்திருந்த அவன் நெற்றியைத் தன் வரட்சிக் கையால் வருடியது. அவன் நெற்றியின் கறுப்பு மறுவிலேயே லயித்து விட்டது அக்கை.

"எங்களை யெல்லாம் உனக்குத் தெரியாதப்பா. நீ பெரியண்ணத் தேவன் மகன் கலிங்கன்தானே. உங்கப்பன் என் அண்ணன். எனக்குப் பெரியப்பன் மகன். கல்யாணமான ரெண்டு வருசத்துக்கெல்லாம் உன் அம்மா செத்துப்போனா. நீ அப்பொ பதினொரு மாதக் கொளந்தை. பெண்டாட்டி போன துக்கத்திலெ பித்துப் பிடிச்சவன் மாதிரி உன்னையுந் தூக்கிக்கிட்டு அந்த மனுசன் ஊரை விட்டே ஓடிட்டான்.

"உங்கப்பனுக்கு கும்பினிக்காரன்னா அப்பவே வேப்பங்காய்,' என் பயலை வளர்த்து வெள்ளையன்

களைக் கருவறுக்கணும்னு சத்தியம் வாங்கிட்டுத் தான் சாவேன்'னு உன்னை மடியிலே போட்டு கிட்டே 'கறுவும்.'

" ......கட்டபொம்மன் ஆள், கலிங்கத்தேவன்னு பேராம். நம்ம ஊரிலெ சண்டைக்கு ஆள் சேர்க்க வருராராம்'னு கண்ணம்மா சொன்னு. பழைய நினைப்பெல்லாம் வந்திருச்சு எனக்கு. 'நீ எதுக்கும் போய் ஆளை நல்லா பார். அப்பனுக்கு மாதிரியே இவனுக்கும் நெத்தி யோரத்தில் கறுப்பு மறு இருக்கும்'னு எல்லா விவரத்தையும் இவ கிட்டெ சொல்லி விட்டேன்." என்று கூறி ஒரு பெரு மூச்சு விட்டாள் அம் முதியவள். தன்னை அழுத்திக் கொண்டிருந்த பெரும் பாரம் ஒன்று நீங்கியதால் உண்டாகும் தெளிவு காணப் பட்டது அவள் முகத்தில்.

கலிங்கனின் கண்கள் ஆறாக நீரைச் சிந்தின. "அத்தை......" என்று அலை மோதிக் கொண்டே அவள் கால்களைக் கட்டிக் கொண்டான் அவன்.

"எனக்கு ஒரு அத்தையோ, அதுக்கு ஒரு கண்ணம்மாவோ இருக்கிறதைப்பற்றி அப்பன் ஒரு வார்த்தைகூட சொல்லலையே. இது வரைக்கும் நான் ஒரு அனாதை யென்றே அலைந்து திரிந்தேன். அவர் சாகும் பொழுது, என் பத்தாவது வயதில் என்னைக் கட்ட பொம்மு ஊமைத்துரை இவர்கள் வீட்டில் ஒப்படைத்தார். பால வயதிலிருந்தே சண்டைப் பழக்கத்தில் கட்ட பொம்மர்களோடேயே திரிந்ததால் இந்தப் பக்கம் வரும் சந்தர்ப்பம் வாய்க்க வில்லை.

"ஆனால் அத்தை, அந்தக் குமரியம்மாதான் என்னைக் கடாரபுரத்துக்கு அழைச்சு வந்திருக்கா. இல்லேன்னா என் கண்ணம்மாவையும், உங்களையும் காண முடியுமா?" என்று தென் குமரித் திசையை நோக்கிக் கை கூப்பினான் அவன்.

ஏதோ பரவச நிலையிலிருந்து விடு பட்டவள் போல், "கண்ணம்மா, கலிங்கா, இங்கே வாருங்கள். எங்கே ரெண்டு பேரும் கை கோத்து ஒன்னா நில்லுங்கள்" என்று பதறினாள் முதியவள்.

நாணத்திலும் ஒய்யாரக் குலுங்கலுடன் வந்து நின்றாள் கண்ணம்மா. தன்னை மறந்த பரவச நிலையில் அவள் உள்ளங் கைகளை அழுத்திப் பிடித்தான் கலிங்கன். இருவருக்கு மிடையே ஒரு மோக மின்சாரப் பாய்ச்சல்! சூரிய சந்திரரின் மோதல்! ரதி மன்மதப் பிணைப்பு!

Telephone: 8210 Post Box No. 2225 Telegrams: "ACCURATE"

எல்லா மோட்டார் சொந்தக்காரர்களுக்கும்

தெரிவிப்பது என்னவென்றால்

எங்களிடம்

எல்லாவிதமான மோட்டார் பார்ட்டுகளும் அதற்கு வேண்டிய இதர சாமான்களும், ஸ்பேர்களும் பாட்டரி, டையர் முதலியவைகளும் விலை சரசமாகக் கிடைக்கும்.

உங்கள் ஆதரவே எங்கள் பரிபூரண மூலதனம்

விவரத்திற்கு எழுதுக

THE CENTRAL AUTO PARTS Co.,

26, General Patters Road, Mount Road, Madras-2.

Branch Office:- *5/219, Avanashi Road, Coimbatore.* (Phone No. 695)

கண் நிறைந்த இளம் ஜோடிகளைக் கண் கொட்டாமல் பார்த்தாள் கண்ணம்மாவின் தாய். எலும்புந் தோலுமாய்க் கிடந்த அவள் மார்பகம் பூரிப்பால் விம்மியது. அப்பப்பா, அங்கே கிளம்பிய நிம்மதி உஷ்ணம்! பள்ள மிட்டுப் போயிருந்த அவள் கண்களிலிருந்து வெள்ளம் போல் நீர் பெருக்கெடுத்தது. "கலிங்கா.........இனி நீ தானப்பா கண்ணம்மாவுக்கு.........,,"என்று முடித்தும் முடிக்காமல் குலுங்கினாள் அவள்.

"அத்தை........." என்று அன்பொழுக அழைத்த கலிங்கன் தன் கலங்கிய கண்களால் கண்ணம்மாவைப் பார்த்தான். "வருகிற பௌர்ணமியில் பாளையங்கோட்டையில் எங்கள் தாக்குதல். கும்பினிக்காரன் இங்கிருந்து கம்பி நீட்ட வேண்டும். அதன் பிறகு நான் கண்ணம்மாவை ...." என்று தலை குனிந்தான்.

"கலிங்கா......இனி அவள் உனக்கு; நீ அவளுக்கு. என் மனக்கோட்டையெல்லாம் கண்ணம்மா சேர வேண்டிய இடத்திலே சேரணும்ங்கறதுதானே. உலகத்தில் எனக்கிருந்த ஒரே துக்கமும் தீர்ந்து போச்சு. இனி உன்பாடு, கண்ணம்மா பாடு......" என்று அமைதியாகச் சிரித்தபடியே அர்த்த புஷ்டியோடு தன் மகளைப் பார்த்தாள் முதியவள். அர்த்தமின்றி விக்கி விக்கி அழுதாள் அப் பேதை கண்ணம்மா.

(4)

காலின்ஸ் துரை மட்டும் கடவுளாயிருந்தால் அன்று பௌர்ணமியே இல்லையென்றாக்கி விடுவான். தனக்காக வியாபாரம் செய்து, கொழுத்த லாபம் அடைய வந்த இடத்தில்மிடுக்காக முஷ்டி தட்டி வீரம் பேசும் கூட்டத்துக்குச் சவால் கொடுக்கவும் நேரும் என்று தெரிந்திருந்தால், 'கடல் கடந்த வாணிபமே இங்கிலாந்துக்குத் தேவையில்லை' என்று பிரகடனம் செய்யும்படி இங்கிலீஷ் மன்னரை வேண்டியுமிருப்பான்.

நாமாக வாபஸ் பெறுகிறோம் என்றாலும் 'கறுப்பன் கட்ட பொம்மன், இரண்டிலொன்று பார்த்தால்தான் விடுவேன்' என்பான் போலிருக்கு என்று அலுத்துக்கொண்டே அணி வகுப்புக்கு உத்தர விட்டான். ஆங்கிலரும், அடி வருடிகளான சில இந்தியரும் பிணந் தூக்குவது போல் துப்பாக்கிகளைச் சுமந்து கொண்டு ஒரு கண்ணால் வானத்து நிலவையும், மறு கண்ணால் தெற்குத் திசையையும் பார்த்துக் கொண்டே நின்றனர். கட்ட பொம்மனின் பட்டாளம் தெற்கேயிருந்துதான் புறப்படுகிறது என்று வெள்ளைத் துப்பறிவாளர்கள் கூறியிருந்தார்களாம். ஆனால் காலின்ஸ் துரையும், அவனைச் சுற்றி அரண் போன்ற ஆங்கிலரும் அறியா வண்ணம் பாளையங்கோட்டையின் வட புற மதில்கள் இருந்த சுவடு தெரியாமல் பஸ்மமாகிக் கொண்டிருந்தன, கலிங்கத்தேவனின் தலைமையில். கடைசியில் வானத்தை எட்டி உதைப்பது போல் கிளம்பிய 'கறுப்பரின்' பீரங்கி ஒன்று தூங்கியவன் முதுகைத் துளைக்கும் குத்துப் போல் ஆங்கிலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும்.

"மார்ச்......" என்று இடியாகக் கதறினான் காலின்ஸ். அவன் 'ஃபைர்' என்ற வார்த்தையைச் சொன்னானோ என்னவோ. அவசர ஆத்திரமாகத் தமிழர், ஆங்கிலர் இரு கட்சியாரின் குண்டுகளும் ஒன்றையொன்று வான வெளியில் முத்தமிட்டுத் தீப் பொறிகளைக் கக்கின.

அண்டம் கிடு கிடுக்கச் சரிந்தது ஆங்கிலரின் கோட்டைச் சுவர். ஆயிரம் ஆயிரம் தமிழரும், வெள்ளையரும் உயிரோடு புதையுண்டனர் அதனடியில். வெள்ளையனின் முண்டமும், வீரத் தமிழனின் மண்டையும் பொருத்தமின்றி ஒட்டிக் கிடந்தன இரத்தக் களத்தில். பீரங்கியின் கைங்கரியம் அது!



தண்டமிழ் வீரம் கைகளில் பொதிந்தது. இயந்திர வீரம் வெள்ளையனுடையது. இயந்திரம் களைப்பதில்லை. நம்மவரின் கைகள் தளர்ந்தன. ஆயிரம் கண் துளைக்கும் அவர்கள் வேல்கள் அங்கங்கே நெருப்புக் குண்டுகளால் பொசுங்கின. துப்பாக்கியிலும், பீரங்கியிலும் பாண்டி நாட்டாருக்குப் பக்குவம் போதாது. சண்டையின் கடைசிக் கட்டத்தில் பீரங்கிகளின் பெரு முழக்கத்தின் முன் வேல்களின் 'விங்......' என்ற நுண் குரலும், ஒரு சில துப்பாக்கிகளின் 'கடபுடா'க்களும் அமுங்கி விட்டன. முடிவு ....?

காலின்ஸ் துரை 'கடகட'த்தான்; தன் முன் கைதியாகி நின்ற கலிங்கத் தேவனைக் கண்டதும். நேற்று வெடித்த பீரங்கிச் சப்தமே நல்லது போலிருந்தது அவன் சிரிப்புக்கு. வெறியும், உக்ரமும் நிறைந்திருந்தது அவன் கோரச் சிரிப்பில். "வருகிற பௌர்ணமியில் இவனுக்குத் தூக்குத் தண்டனை" என்று கலிங்கத் தேவனின் கன்னத்தில் 'பளீ'ரென அறைந்தான்.

(அடுத்த இதழில் முடியும்)

(ராகமாலிகை தொடர்ச்சி)

ஸ்ரீ ஸ்துதி

ஸங்கீத வித்வான் (கல்கத்தா) A. K. ராகவாச்சாரியாரால் வர்ணமெட்டு அமைக்கப்பட்டது.

आर्तत्राणव्रतिभिरमृतासारनीलाम्बुवाहैः
अम्भोजानामुषसि मिषतामन्तरङ्गैरपाङ्गैः ।
यस्यां यस्यां दिशि विहरते देवि दृष्टिस्त्वदीया
तस्यां तस्या महमहमिकां तन्वते संपदोघाः ॥

ஆர்த்தத்ராண வ்ரதிபிரம்ருதா ஸாரநீலாம்பு வாஹை:
அம்போஜா நாமுஷஸி மிஷதாம் அந்தரங்கை ரபாங்கை: |
யஸ்யாம் யஸ்யாம் திசிவிஹரதேதேவி த்ருஷ்டிஸ்த்வதீயா
தஸ்யாம் தஸ்யாம் அஹமஹமிகாம் தந்வதேஸம்பதோகா:||(15)

ஆதி 2 களை

சாருகேசி

லகு

ஸா ; ; ; நி தா நி ஸ் நீ ஸ் நி தா தா பா பா ; த ப ம க
ஆ ர்த்த த்ரா ண வ்ர
க மா க ம த ப த பா ; ; ; பா, நி தா, நி பா, த மா ;
ஸா ர நீ லா
நி ப தா நீ ஸா ·ரீ ஸா ·ரீ ; ஸ் ·ரி ஸா நி த தா த நி ஸ் ·ரி க்ா ·ரீ
அ ம் போ ஜா நா
பா தா நீ ஸ்ா ·ரீ, க்ஸ்ா, ·ரீ நீ, ஸ் தா, நி பா, த மா பா
அ ந் த ர ங்கை

த்ருதம்

மா க ரி கா, ம பா ; பா ;
தி பி ர
ப ம கா மா ரீ கா, ம பா, ம
ம்பு வா
; க்ா ·ரீ, ம் க் க்ா ·ரி ஸ்ா ; ; ;
மு ஷ ஸி
கமா ரி கா, ம பா த ப மா, க
ர பா

த்ருதம்

ம கா ஸ ரீ ரீ க ரி கா ; ;
ம்ரு தா
பா தா, நி ஸ் நீ, ஸ் த தா ; ;
ஹை
நி ஸ்ா நி ஸ் ·ரி ஸ் நி த தா ; ;
மி ஷ தாம்
ஸா ரீ கா மா பா தா, நிஸ் நீ,
ங்கை

மத்யம கால நடை

ஸ்ா நீ தா பா மா கா ரீ ஸா ஸா ரீ ; கா மா ப த பா ;
ய ஸ்யாம் ய ஸ்யாம் தி சி வி ஹ ர தே
ஸ்ா நீ தா நீ ஸ்ா ·ரீ க்ா ·ரி ஸ்ா ·ரீ க்ா ·ரீ ; க்ா ஸ்ா ·ரீ
த ஸ்யாம் த ஸ்யாம் அ ஹ ம ஹ மி கா ம்

மா கா மா பா தா நீ பா தா
தே வி த்ரு . . ஷ்டி
பா தா நீ ஸ்ா ·ரீ ஸ்ா தா ;
த ந்வ தே

நீ நீ தா பா மா பா தா நீ
ஸ்த்வ தீ . யா . .
ஸ்ா நீ தா பா தா மா பா தா
ஸம் ப தோ - . கா

ஸ்வர ஜதி

நீ ; ; ; ; ; தா பா நீ ; தா பா ; மா பா தா
நீ தா பா நீ த ஜம் த க த
தா நீ ஸ்ா ·ரி ; க்ா ம்ா ·ரி ஸ்ா ·ரி ; நீ ஸ்ா நீ தா நீ
ண தொம் ஸா ரீ கா மா ரீ த தி கி ண தொம் தா நீ

நீ ; ; தா நீ பா தா நீ
ஜம் தா நீ பா தா நீ
; தா பா மா கா ரீ ; கா
தா பா மா த தி கி

மா பா தா நீ கா மா ; பா
த க தி மி த தி கி
ஸா ரீ கா மா ; பா தா நீ
ண தொம் கா மா பா தா நீ

योगारम्भत्वरितमनसो युष्मदैकान्त्ययुक्त
धर्मं प्राप्तुं प्रथममिहये धारयन्ते धनायाम् ।
तेषां भूमेर्धनपतिगृहादम्बरादम्बुधेर्वा
धारानिर्यान्त्यधिकमधिकं वाञ्छितानां वसूनाम् ॥

யோகாரம்ப த்வரி தமநஸோ யுஷ்மதை காந்த்ய யுக்தம்
தர்மம்ப்ராப்தும் ப்ரதமமிஹயே தாரயந்தேத நாயாம் |
தேஷாம் பூமேர் தனபதிக்ரு ஹாதம்பராதம்பு தேர்வா
தாராநிர்யாந்த்யதிக மதிகம் வாஞ்சிதா நாம் வஸூநாம்|| (16)

அஸாவேரி **ஆதி 2 கலை**

லகு	த்ருதம்	த்ருதம்
ஸ்ா ; ; ; 'ரி ஸ்ா 'ரி நீ நீ நீ நி நி ஸ்ா பா ; நி தா,	பா பா ம ப த ப மா ; பா, த	ப மா க க ரி, ரி ஸா ; ;
யோ கா ர ம் ப	த்வ ரி த	ம ந ஸோ
ஸா, ரி ஸா ரி பா மா பா ; பா மா பா ; மா த ப மா பா	மா, க கா கா ப மா த பா, த	ப மா க க ரி ரி ரி ஸா ; ;
யு ஷ்ம தை கா	ந்த்ய யு	க்தம்
பா ; த ப ப ம பா ; பா தா ஸ்ா ; ; ; 'ரி ஸ்ா, ரி ;	; ஸர் ஸர் ; 'ரி க்க் 'ரி ஸ்ா	'ரி ஸ்ா 'ரி நீ நீ நீ நி ஸ்ா ப
த ர்ம ம் ப்ரா ப்தும்	ப்ர த ம	மி . ஹ . யே
பா ; தா ; 'ரி ஸ்ா ; ; ; ஸ்ா, 'ரி ஸ்ா 'ரி நீ நீ ஸ்ா, ப	; கா மா ; பா, நி தா, ப	ம ப த ப ப மா க க ரீ ஸ ஸா ;
தா ர ய ந்தே	த நா	யாம்

மத்யம கால நடை

பா, நி நி தா ப ப ம ம க ரி ஸா தா பா ம ப மா கா ரி ஸா ;	ரி ஸா ரி பா மா பா தா தா	பா மா பா தா ஸ்ா ; ; :
தே ஷாம் பூ மேர் த ந ப - தி . க்ருஹா	த ம் ப ரா த	ம்பு தே ர்வா
தா தா பா தா ஸர் ; ஸர் 'ரி க்ர க்ர 'ரி ஸ்ா 'ரி நீ ஸ்ா	ஸ்ா ; ஸ்ா ஸ்ா 'ரி நீ நீ ஸ்ா	; பா தா பா ; மா பா தா
தா ரா நிர் யா ந் த்ய தி க ம தி கம்	வாஞ் சி தா நா	'ம் வஸூ நா ம்

ஸ்வர ஜதி

ஸ்ா ; ; 'ரி நீ ஸ்ா பா ; ; தா பா மா ப க ரி ஸா ரி	ஸா ; ; ; ; ; கா ரி	ஸா ரி ; நீ ஸா ; ரி மா
ஸா ரி நீ ஸா பா தா பா திம் த கி ட	தாம் கா ரி	ஸா ரி தஜம் த க
பா தா ; பா மா தா பா தா ஸ்ா 'ரி க்ர 'கா ரி ஸ்ா 'ரி நீ	ஸ்ா ; ; பா ; ; கா கா	ரி ஸா ; ரி ; மா பா தா
த ஜம் பா மா தா பா தா த க த த ரி கி ட நீ	ஸர் பா த கி	ட தா தி கி ண தொம்

(தொடரும்)

விவசாயத்திற்குச் சிறந்தது!

கிரோஸின் என்ஜின் பம்பு செட்டுகள்

- நீடித்து உழைப்பவை.
- உறுதியான வேலைப்பாடுடன் கூடியவை.
- எல்லா இடங்களுக்கும் சுலபமாகக் கொண்டுபோக டிராலியில் பொருத்தப்பட்டவை.
- சிக்கனமானவை.

மணிக்கு 15,000 காலன் வரை ஜல சப்ளை செய்யக்கூடியவை





மயர்ஸ்

ஆடோமாடிக் வாடர் சிஸ்டம்கள்

ஆழமான கிணறுகளுக்கும் ஆழமில்லாத கிணறுகளுக்கும் உபயோகமானவை. நீடித்து நெடுநாள் உழைப்பவை. தானுக ஆளுதவியின்றி நிற்கவும் ஓடவும் கூடியவை.

விபரத்திற்கு எழுதுக.

SOLE AGENTS IN INDIA:

WATER SUPPLY SPECIALISTS LTD.

Post Box 1707 :: MADRAS.

1950 எப்பொழுதும் முன்னணியில்

இந்தியாவில் லைப் இன்ஷ்யூரன்ஸ் முன்னேற்றத்தில் **ஹிந்துஸ்தான்** எப்பொழுதும்போல் முன்னிற்கிறது. 44வது (1950) வருட அறிக்கை இந்தஸொஸைடியின் பிரக்யாதிபெற்ற நேர்மை, செழிப்பு, பலம் இவைகளைக் குறிக்கிறது.

அமுலிலிருக்கும் பாலிஸிகள்	ரூ.	73,16,60,597
மொத்த மூலதனம்	ரூ.	17,70,70,624
ஆயுள் நிதி	ரூ.	15,97,47,548
பிரீமியம் வருமானம்	ரூ.	3,40,47,338
1950-ல் க்ளெய்ம்ஸ் கொடுபட்டது	ரூ.	72,92,850
புதிய பாலிஸிகள்	ரூ.	13,75,39,851

ஹிந்துஸ்தான் தனது எல்லாவித மூலதனத்தைக் காட்டிலும் பெரிதாகக் கருதுவது பொதுஜனங்கள் அடைந்த நன்மையும், அதன் பொருட்டு அவர்கள் கொண்டுள்ள நன்மதிப்புமே!

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ், கல்கத்தா-13.

சென்னை டிவிஷனல் ஆபீஸ்:

ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ், 107, அரண்மனைக்காரத்தெரு, சென்னை, ஜி. டி.

மூலதனத்தின் அவசியம்

அ. வேணுகோபாலன்

நாடு நலம்பெற்றுச் செல்வ வளர்ச்சியடைய, தொழில் திட்டங்களை நடத்திவைக்கவேண்டியிருக்கிறது. சமீபத்தில் தேசியத் திட்டக் கமிட்டியின் திட்டங்கள் வெளியாயின. இவை பெரிய திட்டங்களாகும்; இதன்றி, இந்திய அரசாங்கத்தின் வருடாந்தர திட்டங்கள் வேறு இருக்கின்றன. இந்திய அரசாங்கத்தின் 1950—51-ஆம் வருடத்தின் பெரிய திட்டங்கள்:—

பெயர்	1949—50	1950—51
	(ரூபாய் லக்ஷக்கணக்கில்)	
சிந்திரி பேக்டரிகள்	492.95	509.00
கப்பல் தொழில் திட்டம்	398.00	—
மீன் ஆராய்ச்சி நிலைய திட்டம்	19.35	7.25
அரசாங்க வீடு கட்டும் திட்டம்	13.00	15.00
தேசிய ஆராய்ச்சி நிலையம் ஸ்தாபிக்க	75.00	—
டெலிபோன் பேக்டரி	73.00	—
எஃகுத் தொழிற்சாலை	60.00	—
கலப்பட எண்ணெய்த் தொழிற் சாலை	30.00	—
பெரிய மின்சார பேக்டரிகள்	30.00	—
யந்திரக் கருவிகள் தயாரிக்கும் பேக்டரி	15.00	5.00
கேபிள் உற்பத்தி நிலையம்	30.00	5.00
வயர்லெஸ் பேக்டரி	15.00	—
சிமிண்ட் பேக்டரி	10.00	—
டீசல் எஞ்சின் பேக்டரி	1.00	—
வெடிமருந்து தயாரிக்கும் பேக்டரி	3.00	—
ஆராய்ச்சி நிலையம் கட்ட	—	75.00
பெனிசிலின் பாலடீரின் பேக்டரி	8.00	40.00
பொதுத்தொழில் அபிவிருத்திக்கான செலவு	292.00	149.98
ஒலி பரப்பு நிலைய அபிவிருத்தி	96.00	60.00

கடந்த வருட திட்டத்தில் 50.15 சதந்தான் 1951ஆம் வருட திட்டத்தின் செலவாக இருக்கிறது. இதன் மூலம் திட்டங்களை நிறைவேற்றப் போதிய மூலதனமில்லையென்று அறிகிறோம். தனிப்பட்ட கம்பெனிகளின் சராசரி செலுத்தப்படும் மூலதனமும் குறைந்து கொண்டே வருகிறது.

ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனம்.

வருடம்	மொத்தத் தொகை கோடிக் கணக்கில்	முந்தின வருடத்தைவிட அதிகரித்த தொகை சதவிகிதத்தில்
1945	388.97	+ 37.23
1946	423.24	+ 34.27
1947	445.45	+ 22.21
1948	456.75	+ 11.30.

மூலதன வெளியீட்டுக் கண்ட்ரோலர் வெளியிட்ட மூலதனத் தொகையின் விபரம் (கோடிக் கணக்கில்)

வருடம்	கம்பெனிகளின் எண்ணிக்கை	ரூ. கோடி கணக்கில்
1946	682	239.43
1947	498	198.26
1948	375	125.57
1949	326	63.46.

இப்படியாக நாளுக்கு நாள் கம்பெனிகளின் எண்ணிக்கையும், மூலதனத் தொகையும் குறைந்துகொண்டே வருகின்றன; இதைத் தடுக்காவிடில் தொழில்களின் அபிவிருத்தி நசித்துவிடுமென்பதில் சந்தேகமேயில்லை.

1925ஆம் வருஷத்திற்கு முன்பு இந்தியாவின் மூலதனமெல்லாம் வெளிநாட்டினருடைய தாகவேயிருந்தது. 1925ல் இந்திய அரசாங்கம் நிறுவிய "இந்திய வெளிநாட்டுப் பொருட் குழு" ஆராய்ந்து, இந்தியாவின் மூலதனம் அன்னிய நாட்டினரால் நிரப்பப்பட்டிருப்பது விரும்பத்தக்கதல்ல. எனவே. அந்நிய மூல தனத்தை எதிர்பாராமல், இந்தியர்கள் தங்கள் தொழில்களை நடத்திச்செல்ல வேண் டுமெனவும், தொழில்களையும் இந்தியரே யேற்று நடத்த வேண்டுமெனவும் சிபார்சு செய்தது. இதனுடன், திடீரென இந்தியர் களை இதில் புகுத்தினால் அவர்களால் திறமையாக வேலை செய்ய இயலாததால் இக்குழுவில் இந்தியர்களையும் அங்கத்தினர் களாக இருக்கவேண்டுமெனச் சிபார்சு செய் தது. அப்போதைய இந்திய அரசாங்கம் இதனை ஏற்றுக்கொண்டது. இதன்படி இந் தியர்களும் தொழில் நடத்துவதில் தேர்ச்சி பெறவாரம்பித்தார்கள்.

இந்திய மக்களிடம் ஏராளமான பண மில்லாவிட்டாலும், சிறிய தொகையாகவா வது இருக்கிறது. ஆனால் அத்தொகையைத் தொழிலில் போடப் பயப்படுகிறார்கள். சமீப காலக்கணக்குப்படி (1947 ஆம் வருஷம்) வெளி நாட்டு மூலதனம் 940 கம்பெனிகளில் 500 கோடி இருக்கிறதென்றும், இந்திய முதல் 10,627 கம்பெனிகளில் 303 கோடியிருப்பதா கவும். 1949 ஆம் கணக்குப்படி அன்னிய மூல தனம் 800 முதல் 1,100 கோடி இருக்கலாம்; இதில் பெரும்பகுதி பிரிட்டனுடையதாகவும், பத்திலொரு பங்கு அமெரிக்கருடையதாகவு மிருக்கிறது.

இந்திய சர்க்காரின் தொழிற் கொள்கை ஒரு திட்ட வட்டமில்லாமலிருப்பதின் காரண மாக வெளிநாட்டார் இந்தியாவில் மூலதனம் போடப் பயப்படுகிறார்கள்.

நியூயார்க் சர்வதேச நிதி ஆராய்ச்சிக்கழ கத்தின் டைரக்டர்கள் வெளியிட்டுள்ள பிர சுரத்தில் "இந்தியா துரிதமாகப் பொருளா தார அபிவிருத்தியடைய வேண்டு மென விரும்பினால் அயல் நாடுகளின் பெருத்த மூல தன உதவியும், தொழில் நுணுக்க உதவியும் வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அவர்கள் குறிப்பிட்டுத்தான் நமக்கு இவ் விஷயம் தெரிகிறதென நினைக்க வேண்டிய தில்லை; நமக்கெல்லாம் நம் நாட்டின் நிலை நன்ருகத் தெரியும்; மூலதனத் தொகை அதிகமில்லாததால், அன்னிய மூலதனம் வந்தால்தான் நம் மூலதன பயம் தீருமென அதைரியப் படாமல், உள்ள வசதியைக் கொண்டு, உற்பத்தியைப் பெருக்கி, தைரிய மாக முன்னேறத் துணிவுகொள்ளவேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதின் மூலம் அன் னிய நாடுகளுக்கு அதிக ஏற்றுமதி செய்து, இதன் மூலம் வெளி நாட்டு நாணய வசதி யால் யந்திரங்களைப் பெற்று, நாட்டின் பிரச் னையைத் தீர்க்கலாமெனத் துணிவு கொண் டிருக்கையில், அடிக்கடி ஸ்டிரைக்குகள் வேறு நடக்க ஆரம்பித்து, ஒரு அடி முன் னேறினால் மூன்றடி பின்னே தள்ளப்படுகி றோம்! பம்பாய் ஸ்டிரைக்கினால் கோடிக் கணக்கான ரூபாய்கள் நஷ்டத்தோடு எவ் வளவோ தொல்லைகளுக்காளாகிறோம்? இச் சமயத்தில் ரயில்வே ஊழியர்கள் வேறு 'ஸ்டிரைக்' செய்வோமெனப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நாட்டின் நலனைக் கவனியாமல் சுய நலமே பெரிதாக மதிப்பவர்களிடம் என்ன உதவியை எதிர் பார்க்கவியலும்?

சரி; நம் மூலதன பிரச்னையைக் கவனிக் கலாம். யுத்தத்திற்கு முன்பு அமெரிக்காவு டன் வர்த்தகம் 7 சதம்தானிருந்தது; 1949 –50ல் இது 15 % உயர்ந்திருக்கிறது. இந்த சூழ் நிலையைப் பயன் படுத்திக் கொண்டு நம் ஏற்றுமதியை அதிகரிப்பதின் மூலம் ஓரளவு அன்னிய நாணயங்களைப் பெற முடியும். "இந்தியாவின் பொருளாதார நிலைமை" என்ற தலைப்பின்கீழ் ரோலண்ட் காலின் என்பவரும், டைரக்டர் மார்சண்ட் நாட்லரும் வெளியிட்டிருக்கும் வெளியீட்டில் இந்தியா விவசாயம், தொழிற்சாலை போன் றவைகளை வளப்படுத்தத் திட்டம் வகுத் திருக்கிறது; ஆனால் போதுமான நிதி, தொழில் நுணுக்க வசதி அதனிடமில்லை." யென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். என வே, நமக்கு வேண்டிய மூலதனத்தைப் பெற முயல வேண்டும். இதற்கு அன்னிய நாடு கள் முக்கியமாக அமெரிக்கா விரும்பினால், ஏராளமான மூலதனம் கொடுத்துதவும்.

சிலர், அன்னிய நாடுகளின் மூலதனத் தால் அன்னிய ஆதிக்கம் பரவி விடுமெனப் பயப்படுகிறார்கள்! நாம் ஜாக்கிரதையாக இருந்தால் இந்த அன்னிய ஆதிக்கம் பரவு மெனப் பயப்படுவதற்கே நியாயமில்லை.

நம் செல்வம் வளர்ச்சியடைய வேண்டுமானால் அதற்குத் தொழில் நுட்ப உதவியும், மூலதன உதவியும் வேண்டும். இதுவன்றித் தொழில் உற்பத்தியைப் பெருக்கும் யந்திரங்களின் 'பேட்டெண்ட்" உரிமைகள் வேறுபெற வேண்டும். ஆகவே, அன்னிய மூலதனம் நமக்கு அவசியம் வேண்டியிருக்கிறது. அம்மூலதனம் கிடைக்காவிட்டால் முன்னேற முடியாதா வெனக் கேட்கலாம்; முடியும். ஆனால், அதற்கு வேண்டிய சக்தியை நாம் இன்னும் பெறவில்லை! உற்பத்தி பெருக இன்றியமையாதவையந்திரங்கள் தாம்; அவைகளைப் பெறவேண்டுமானால் அன்னிய நாட்டு நாணயம் தேவை. இந்த நாணயத்தைப் பெற வேண்டுமானால் நம் நாட்டு உற்பத்தியைப் பெருக்கி, ஏற்றுமதியையதிகரிக்க வேண்டும். அப்போதுதான் அன்னிய நாட்டு யந்திரங்களை வாங்கச் சாதகமான சொச்சம் கையில் மிஞ்சும்; அல்லது அன்னிய நாட்டு மூலதனத்தைப்பெற வழி செய்ய வேண்டும். இதில், முதல் வழி நம்மால் சாத்தியப்படாது; காரணம், உற்பத்திப் பெருக்கம் போதிய அளவு பெருகாமல் பற்றுக்குறையாயிருக்கிறது நம் நாட்டில்; நிலை யிப்படியிருக்க, அதிக ஏற்றுமதி செய்வதெப்படி? ஆகவே, இரண்டாம் வழியான அன்னிய மூலதனத்தைப் பெற முயலவேண்டும்.

அநேகர், அன்னியர்—முக்கியமாக அமெரிக்கர் இந்தியாவில் மூலதனத்தைக் கொண்டுவந்து கொட்டத் தயாரா யிருக்கிறார்கள்; அதனால் டாலர் ஏகாதிபத்தியம் தலைதூக்குமென்கிறார்கள்; உண்மை நிலை, அவர்கள் நினைப்பதைப்போல அமெரிக்கர் மூலதனத்தை இந்தியாவில் கொட்டத் தயாராக இல்லை! ஆனால், அமெரிக்க சர்க்காருக்கு இந்தியாவின் அபிவிருத்தியில் சற்றுச் சிரத்தையிருக்கிறது. இதற்குக் காரணம் அவர்களின் கருணையல்ல: கம்யூனிஸம் ஆசியாவில் பரவி விடாமலிருக்க வேண்டுமே என்ற பீதிதானிதற்குக் காரணம்! எப்படியிருந்தால் நமக்கென்ன? நமக்கு வேண்டியது மூலதனம்; அது கிடைக்கும் வழி நியாயமாயிருந்தால் போதுமானது. ஒரு வேளை, அம்மூலதனத்தின் பலத்தால் ஏகாதிபத்தியக் கைவரிசையைக் காட்டினால், அவர்கள் ஏகாதிபத்தியத்திற்கு ஒரு கும்பிடும், மூலதனத்திற்கு இரண்டு கும்பிடுமாக வழியனுப்பி விடுவது! அமெரிக்கா மூலதனம் போட்டால் இந்தியா அதன் வால் பிடிக்கும் நாடாக மாறுமென்றும் கருத வேண்டியதில்லை. அப்படிப்பட்ட வால்பிடிக்கும் நிலைக்கு இந்தியா வரவில்லையென்று தெரிந்திருந்தும் நாமேன் இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்?

அன்னிய மூலதனத்தை யேற்றுக் கொள்ளும்போது சில நிபந்தனைகளின் மேல் பெற்றுக் கொள்ள வேண்டும். (a) வெளிநாட்டு மூலதனத்தினால் ஆரம்பிக்கப்படும் கம்பெனிகளில் இந்தியர்களும் பங்குகள் வாங்கி, அதன் நிர்வாகத்திலும், மூலதனத்தொகையிலும் பங்காளிகளாக வேண்டும். இதனால், வெளிநாட்டார் மூலதன பலத்தால் தங்களிஷ்டப்படி வைத்ததே சட்டம் என்று நடக்க முடியாது. (b) தொழில்களைத் தேசியமயமாக்கும்போதோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகோ இந்தியாவிடம் கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும்; இதற்கீடாக, நஷ்டஈடு கொடுத்து விடலாம். (c) வெளிநாட்டுக் கம்பெனிகள் இந்தியாவில் தங்கள் தொழில் நடத்தும்போது இந்தியாவில் ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டும். (d) இவையெல்லாவற்றையும் விட அரசாங்கம், இக் கம்பெனிகளின்மேல் கண்ணோட்டம் வைத்திருக்க வேண்டும்.

இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மூலதன உதவியை வரவேற்று ஜவஹர்லால் நேரு அறிக்கை சமர்ப்பித்திருந்தார். இதில் முக்கியமாக வெளிநாட்டு மூலதனத்தைப் பெறும் உரிமையைப்பற்றிச் சரியாகத் தெரிவிக்க வில்லை. இவ்வுரிமை அரசாங்கத்திற்கு மட்டுமுண்டா அல்லது மற்றவர்களுக்கும் இவ்வுரிமையுண்டா யென்பதே. ஏனெனில், அரசாங்க அறிக்கைப்படி மூலதனம் போட விரும்புபவர்கள் இந்திய அரசாங்கத்தைத்தான் நாட வேண்டும். இதன்மூலம், வெளிநாட்டு மூலதனம் வர ஒரேவழிதானிருக்கிறது. அதாவது இப்போதிருக்கும் திட்டப்படி அன்னிய மூலதனம்படைத்தவர் இந்தியாவில் முதலைப் போட்டுத் தொழில் நடத்தலாம். இதற்குப் பல வழிகளைத் திறந்து விடவேண்டும். உதாரணமாக (a)இந்தியத் தொழிலதிபர்கள், அன்னிய தொழிலதிபர்களுடன் ஒப்பந்தத்தின்பேரிலோ அல்லது வேறு முறையிலோ மூலதனத்தைப் பெற்று தொழில்நடத்துதல் (b) அரசாங்கமே தன் முயற்சி மூலம் வேறு அரசாங்கத்தினிடமிருந்து முதல் பெறுவது (c) சர்வதேச பாங்கியிடமிருந்தோ அல்லது வேறு வழிகளிலோ பெறுவது; மேலும், தனிப்பட்ட கம்பெனிகளைத் தனிப்பட்ட முதலாளிகளின் மூலம் நடத்த வழி செய்வது. இம்முறையில், தனிப்பட்ட முதலாளிகள்

முதல்போட வேண்டுமானால் அயல் நாட்டு மூலதனக்காரர்களுக்குப் பந்தோபஸ்து அளிக்கும் வகையில் இந்திய சர்க்கார் தம் கொள்கையை வகுத்தால், தனிப்பட்ட அமெரிக்க மூலதனம் கிடைக்குமென நம்பப்படுகிறது.

கடந்த வருடத்தில் இந்திய அரசாங்கம் வெளியிட்ட அறிக்கை மூலம் அயல் நாட்டு மூலதனங்களுக்குப் பூரணமான பாதுகாப்பளிக்கப்படுமென அறிவித்திருந்தும், அன்னியநாட்டாருக்கு மூலதனம் போட உற்சாகமில்லை. காரணம், இந்திய சர்க்கார் அன்னிய மூலதனத்திற்குப் பாதுகாப்பளிக்கும் என்று பொதுப்படையாகக் கூறியிருப்பதே.

முக்கியமாக அயல் நாட்டுச் சொத்துக்களைத் தேசியமயமாக்கினால் அதற்குக் கிடைக்கும் நஷ்ட ஈடு சம்பந்தமான கொள்கையை அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். (a) இப்போதைய சட்டப்படி நஷ்ட ஈடு சம்பந்தமான பிரச்னை கோர்ட் தாவாவிற்குட்பட்டதல்லவெனவும், சட்ட சபையின் தீர்மானமே இறுதியானதாயிருக்குமெனவும் கூறப்பட்டிருக்கிறது. (b) கம்பெனிகளின் மீது இந்திய ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது (c) இந்தியாவில் சம்பாதிக்கப்படும் லாபம் இங்கு இந்தியாவிலும், சொந்த நாடான அமெரிக்காவிலுமாக இரட்டிப்பு வரி கொடுக்க வேண்டியிருக்கிறது (d) 1950 ஜனவரி மாதத்திற்கு முன்பு போட்டிருந்த மூலதனத்தைச் சொந்தத் தேசத்திற்கு மறுபடியுமனுப்பவோ, எடுத்துச் செல்லவோ அனுமதிப்பதில்லை (e) அங்கீகரிக்கப்பட்ட மூலதனலாபத்தையும் சொந்த நாட்டுக்கு எடுத்துச் செல்லக் கூடாது.

இச் சட்டங்கள்தான் அன்னிய நாட்டார் மூலதனம் போடப் பயப்படக்காரணங்கள். இவைகளுள் சில இன்றியமையாதவை; இச் சட்டங்களைத் தளர்த்தினால் அன்னிய மூலதனம் நம்மை ஆட்டிவைத்து விடும். எனவே இந்திய சர்க்கார் மறுபடியும் இதைப்புனராலோசனை செய்து அன்னியர் தங்கள் மூலதனத்தையும், லாபத்தையும் தங்கள் சொந்த நாட்டிற்கு எடுத்துச்செல்வது சம்பந்தமாக விதிகளைத் தளர்த்தியிருக்கிறார்கள். இதன்றி, இந்தியத்தொழில்கள் வளமடையச் செய்யப் புதிய தொழிற் சாலைகளையேற்படுத்தவேண்டிய மூலதனம்பெற இந்திய சர்க்கார் வரித்திட்டத்தில் பல சலுகைகளைக் காண்பித்திருக்கிறார்கள். தவிர, மூலதனப் பெருக்கத்தின் மீதிலிருந்த வரியை நீக்கிவிட்டார்கள்; பெரும் மூலதனமிட்டு நடத்தப்பட்டு, அதிலிருது வரும் வருமானங்கள் மீதிருந்த சூபர் வரியைக் குறைத்திருக்கிறார்கள்; 48ஆம் வருடத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள்ளாக ஆரம்பிக்கப்படும் பெரிய தொழிற்சாலைகளின் வருமானத்தில் அக் கம்பெனியின் மூலதனத் தொகையில் 6 சத வரி விதிக்கப்படமாட்டாது. 1948 ஆம் வருடத்திற்குப் பின்பு கட்டப்பட்ட, சேர்க்கப்பட்ட கட்டிடம், யந்திரம் இவைகளுக்கு 5 வருடங்களுக்கு இருமடங்காக "தேய்வு அலவன்ஸ்" வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது; சில இயந்திரங்களுக்கும் இறக்குமதி வரி குறைக்கப்பட்டது. (இதுவரை ஜவுளி ஏற்றுமதி நீக்கப்பட்டிருந்தது; இப்போது மறுபடியும் ஏற்றுமதி வரி விதித்திருக்கிறார்கள்) எல்லாவற்றையும்விட, "தொழில் உதவி கார்ப்பரேஷன்" என்ற ஒரு நிதி ஆரம்பித்து, இதன் மூலம் இந்தியத் தொழில்களுக்குப் பண உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது; இக் கடனை 25 வருடங்களில் திருப்பித்தரவேண்டும்.

சில தொழில்கள் பாதுகாப்பளிப்பதன் மூலம் வளர்ச்சியடைந்திருக்கின்றன. இவைகள் உலோகத் தொழில், மரத் தொழில், ரசாயனச் சரக்குகள், பாட்டரிபோன்றவைகளாகும். மற்றும், தொழில் பாதுகாப்புக் கொள்கையைப் பரிசீலனை செய்து, வேண்டிய யோசனை, உதவியளிக்க திரு வி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் தலைமையின் கீழ் ஒரு பாதுகாப்புக் கமிஷனை நியமித்திருக்கிறார்கள்.

இவ்வளவு வசதிகள், உதவிகளைச் செய்துங்கூடத் தொழில் முதலாளிகள் தங்கள் வருமான வரிகளைக் கொடாமல் டிமிக்கி அடிக்கிறார்கள்! இவர்களின் தேசபக்திதானென்ன? இம்முறையில் சேர்த்து வைத்திருக்கும் பணத்தைக்கொண்டே புதிய தொழில்களை ஆரம்பிக்க வழிசெய்யலாமே, ஆனால் இப்படிப்பட்டவர்களை நம்புவதனால் என்ன பயன்? எனவே, இத்துறையில் ஓரளவு பண உதவி செய்யும் உலக பாங்கியைப் பற்றியும் அதன் உதவிகளைப்பற்றியும் சற்றே ஆராயலாம்.

SOLAR WORKS

12, THAMBU CHETTY STREET, MADRAS-1

Manufacturers of

All kinds of Envelopes, Cloth lined Bags & Account Books

PRINTERS & BINDERS

Rates Moderate – High class workmanship

Envelopes out of foreign manilla Paper, available from ready stocks at very competitive rates.

•

Suppliers to Railways, Corporation of Madras, Postal Dept., Banks, Insurance Companies & other Public and Commercial Offices.



யுனைட்டட் இந்தியா பிராவிடெண்ட்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

ஹெட் ஆபீஸ்: "யுனைட்டட் இந்தியா லைப் பில்டிங்", சென்னை-1

250 ரூபாய் முதல் **1000** ரூபாய் வரை வைத்தியப் பரீக்ஷை இல்லாமலே பாலிஸிகள் வழங்கப்படுகின்றன.

எங்கும் ஏஜண்டுகள் தேவை

எங்கள் ஏஜன்ஸி கௌரவம் வாய்ந்தது, லாபகரமானது. ஆர்வமுடைய இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

விபரத்திற்கு அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதுக:

எல். வயிரவன்
சீப் ஏஜண்ட்
"எவர் கிரீன்"
கல்லுக்குளி, திருச்சிராப்பள்ளி.

Or

காரியதரிசி
யுனைட்டட் இந்தியா பிராவிடெண்ட்
அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.
தபாற்பெட்டி 281
மதராஸ் 1.

கலியாண காலம்

ராதா ஸில்க் எம்போரியம்

(டெலிபோன்: 84188)

மயிலாப்பூர் :: **மதராஸ்**

கலியாண காலங்களுக்கேற்ற பட்டுச்சேலைகள்: கெட்டிச்சாயமும் உத்தரவாதமுள்ளவை. அவரவர்களுக்குப் பிடித்த பல தினுசுகளிலும், நாகரிக மோஸ்தர்களிலும் ஏராளமாகக் கைவசம் உள்ளன. பிடித்தமானவைகளைப் பொறுக்கி எடுக்க நேரில் விஜயம் செய்யுங்கள் —

: பிராஞ்சு :

ருக்மணி ஸில்க் எம்போரியம்,

டெலிபோன்: 58

பெரியதெரு, கும்பகோணம்.

மீட்சி

வசுமதி

பிரசவ ஆஸ்பத்திரியில் நான் வேலையை ஒத்துக் கொண்டு நான்கைந்து மாதங்களே தான் ஆகியிருந்தன. கடவுள் அருளால் அந்த ஆஸ்பத்திரியில் எல்லோரிடமும் "கைராசிக்காரி — நல்லவள்" என்ற பெயரை நிலை நிறுத்திக்கொண்டேன்.

நான் சேர்ந்தது முதல் அன்று வரை நிகழ்ந்தவற்றை யெல்லாம், படுக்கையில் படுத்தவாறே மனக்கண்களினால் பார்த்துக் கொண்டேயிருந்தேன். என்ன காரணத்தினாலோ நான் தூங்க முயன்றாலும் மனது கேட்காமல் ஒரு சினிமா 'ப்ரொஜக்டர்'போல் பழைய சம்பவங்கள் எல்லாவற்றையும் மாற்றி மாற்றித் திரையிட்டுக் காண்பித்துக் கொண்டேயிருந்தது.

எதிரே மணிக்கூண்டிலிருந்த கடிகாரம் பன்னிரண்டு மணி அடித்தது. அதனுடன் இழைந்தாற்போல், என் அறையில் இருந்த டெலிபோனும் "கண கண" வென்று சப்தித்தது. ரிஸீவரைக் கையிலெடுத்து, 'ஹலோ' என்றேன்.

'ஹலோ! டாக்டர்! நான்தான் மேட்ரன் பேசுகிறேன். ஒரு ஸீரியஸ் கேஸ் வந்திருக்கிறது, உங்களைக் கூப்பிடவேண்டும் என்கிறாள் நோயாளி." பிரபலமாயிருப்பதில் கஷ்டங்களும் உண்டென்றால், அவற்றுள் முக்கியமானது எந்த நேரத்திலும் மனஞ்சுளிக்காமல் நோயாளிகளைக் கவனிப்பது தான்.

"இதோ வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, ட்ரெஸ் செய்து கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கிப் புறப்பட்டேன்.

* * *

நான் ஆஸ்பத்திரியை அடையும் போது அவளுக்கென, ஏற்பாடுகள் யாவும் முன்னமே செய்திருந்தார்கள். ஸ்பெஷல் வார்டில் தான் நான் அவளைக் கண்டேன்.

ரத்தக் குறைவினால் வெளிறிப் போயிருந்த முகம். அந்த வெண்மையிலும் ஒரு தனிச் சோபை இருந்தது அம்முகத்தில். சினிமா நடிகை சோபனா சமர்த்தின் கண்களைவிட நீண்ட புருவத்துடன் கூடிய அழகிய கண்கள்.

"டாக்டர்! உங்கள் பெயரை எனக்குத் தெரிவித்தது டாக்டர் லக்ஷ்மி! உங்களிடம் சென்றால் நீங்கள் ரொம்பவும் சிரத்தை

யுடன் கவனித்துக் கொள்ளுவீர்கள் என்று சொல்லியனுப்பினார்'' என்றாள் என்னைக் கண்டவுடன்.

டாக்டர் லக்ஷ்மியும் நானும் பள்ளித்தோழிகள். அவ்வப்போது சில நோயாளிகளை என்னிடம் சிகிச்சைக்காக அனுப்பிக்கொண்டிருப்பாள்.

"ம்ம்!" என்றேன்.

அன்றிரவே அவள் ஒரு பெண்குழந்தையைப் பெற்றாள்.

நினைவு இல்லா நிலைமையிலுங்கூடப் பிறந்தது "பெண் குழந்தைதானே," என்று கேட்டுக்கொண்டேயிருந்தாள்.

* * *

அவளைப் பார்ப்பதற்கென எவருமே வரவில்லை. அவளும் இதைப் பற்றிக் கவலைப் பட்டதாகக் காண்பித்துக் கொள்ளவில்லை.

தினமும் அவளைப் பார்க்கச் செல்லும் போதெல்லாம் என்னுடன் ஏதாவது பேசிக்கொண்டேயிருப்பாள். தானாகத் தன் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுவாள் என்று நான் எதிர்பார்த்தேன். என்மனத்துள் சில சந்தேகங்கள் தோன்றியிருந்தன. அதனால் நானாக அவளை ஏதாகிலும் கேட்டால்" நான் சந்தேகப் படுகிறேன்!" என்பதைத் தெரிந்து கொண்டுவிடப்போகிறாளே என்று பயந்து சும்மா ஒன்றும் தெரியாதவள் போலவே இருந்துவிட்டேன்.

அவள் உடம்பு நன்றாகத்தேறியிருந்தது. இனிமேல் வீட்டுக்குச் செல்லலாம் என்று அவளிடம் சொன்னேன்.

"டாக்டர் எனக்காக நீங்கள் ஒரு உபகாரம் செய்யவேண்டும். நீங்கள் செய்யக்கூடியதுதான்'' என்றாள்.

பிரசவ சமாசாரத்தைப்பற்றி வெளியே தெரியக்கூடாது என்று தான் சொல்லுவாள் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால் அவளது கோரிக்கை நான் சற்றும் எதிர்பாராத இடத்தில் இருந்துவந்தது.

"சில காரணங்களால் இந்தக் குழந்தையை நான் இப்போது என்னுடன் எடுத்துச் செல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். குழந்தைக்கு ஒரு வயது ஆகும் வரையில் அதை உங்களால் காப்பாற்றி வர முடியுமா?"

ஆங்கிலத்தில் "கஸபியாங்கா" என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி குழந்தையை இனி திருப்பி எடுத்துச் செல்ல வராமல் இருந்து விடுவாளோ! — என்ற எண்ணம் முதலில் நின்றது.

அவள் முகத்தைப்பார்த்தேன். கள்ளங் கபடற்று இருந்தது. அவள் கோரிக்கையில் ஏதோ சூட்சுமம் இருக்கவேண்டும் என்று தெரிந்தது. ஆனால் அது என்ன என்றுதான் தெரியவில்லை.

அருகே தொட்டிலில் இருந்த குழந்தையைப்பார்த்தேன். தங்கப் பதுமைபோன்று ஈடில்லா அழகுடன் இருந்தது. அதன் தாயாரைப் போலவே தனிப்பட்ட சோபையுடன் விளங்கிற்று.

என் மனதுள்ளெழுந்த அற்ப சந்தேகங்களும் அந்தக் குழந்தையைப் பார்த்ததும் எங்கோ பறந்து சென்று விட்டன. என் வசம் தானாகவே இயங்கி அவள் கோரிக்கைக்கு ஒப்புக்கொண்டது.

"டாக்டர் நீங்கள் தங்கமான குணம் படைத்தவர் என்று பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றுதான் நேரில் கண்டறிந்தேன்" என்று என்னைத் தழுவிக்கொண்டாள்.

"டாக்டர்! குழந்தையை நளினி என்றழையுங்கள் என்றாள்"

"சரி!!" என்றேன்.

அன்று முதல் நளினியைக் கவனிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று என் விலாசமிடப்பட்டு ஒரு கவர் இருநூறு ரூபாய் டிராப்ட் ஒன்றுடன் வந்து நிற்கும்.

எங்கிருந்து அவள் அனுப்புகிறாள் என்ற விவரத்தை மட்டும் என்னால் கண்டுபிடிக்க முடியாமற் போயிற்று.

நளினி படுத்தாமல் சமத்தாய் இருந்தது. அவளைக் கவனிப்பதற்கென ஒரு பெண்ணை அமர்த்தினேன். நளினி பிறந்த சில மாதங்களுக்குப்பிறகு டாக்டர் லக்ஷ்மியை ஒரு நாள் அகஸ்மாத்தாய்ச் சந்திக்க நேரிட்டது. அப்போது அவளிடம் நளினியைப் பற்றியும் வனஜா (அதுதான் தன் பெயர் என்று என் நோயாளி என்னிடம் சொல்லியிருந்தாள்) வின் கேஸைப்பற்றியும் விவரமாய்க் கூறினேன்.

டாக்டர் லக்ஷ்மி கூறிய பதில் என்னைத் திகைப்புக்குள்ளாக்கியது.

தான் அம்மாதிரி நோயாளிகள் எவரையுமே அனுப்பவில்லை என்று உறுதியாகக் கூறினாள்.

வனஜாவை மறுபடி சந்திக்கும் போது கேட்கவேண்டிய சந்தேகங்களுள் இதையும் ஒன்றாகக் கூட்டிக்கொண்டேன்.

நளினிக்கு ஒரு வயதாயிற்று. வனஜாவின் வரவை நிமிடத்துக்கு நிமிடம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நளினிக்கென நான் அமர்த்தியிருந்த நர்ஸிடமும் சொல்லி வைத்து விட்டேன். வனஜாவின் அடையாளங்களைக்கூறி, ஒருவேளை நான் வீட்டில் இல்லாதபோது வந்தால் குழந்தையை அவளிடம் கொடுக்கலாம் என்று சொல்லி வைத்திருந்தேன்.

நான் சொன்னது சரியாகப் போய்விட்டது. நான் எந்த நேரத்தில் வீட்டில் தங்கமாட்டேன் என்று நன்கு தெரிந்து வனஜா அந்த நேரத்தில்வந்து குழந்தையைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டாள். நான் சொல்லி வைத்திருந்தபடி நர்ஸ் வனஜாவின் தற்போதைய விலாசத்

தைக் கேட்டதற்கு, வனஜா ஒரு கவரை அவளிடம் கொடுத்து, "இதனுள் எல்லாம் இருக்கிறது" என்று சொல்லிச் சென்று விட்டாள். இதெல்லாம் நான் வெளியிலிருந்து திரும்பியவுடன் நர்ஸ் எனக்குச் சொன்னாள்.

ஆவலுடன் கடிதத்தை உடைத்துப் பார்த்தேன்.

உண்மையிலேயே எனக்கு இதெல்லாம் மூடு மந்திரமாகத்தான் இருந்தது. வனஜா யார்? முதலில் என்னை ஏன் குழந்தையை வளர்க்கச்சொல்லவேண்டும்? இப்போது திடீரென்று ஏன் அதை அழைத்துச் செல்ல வேண்டும்? இம்மாதிரி இன்னம் பல கேள்விகள் என் மனத்துள் இருந்தன. இன்னம் சில மாதங்கள் பொறுத்துக் கொள்ளச் சொல்லி யிருக்கிறாளே. பார்க்கலாம்.



"அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு,

என் நடத்தை உங்களுக்குக் ஆச்சர்யத்துக்கு மேல் ஆச்சரியமாக இருக்கும். எல்லாம் உங்களுக்குக் கூடிய சீக்கிரம் விளங்கும். இன்னம் சில மாதங்கள் பொறுத்துக் கொள்ளவும். வனஜா.

நளினியின்பேரில் நான் அளவற்ற வாஞ்சை கொண்டிருக்கிறேன் என்பதை அவள் எவ்வாறோ தெரிந்து கொண்டிருக்கிறாள். நளினியைப் பலவிதமாகப் போட்டோ பிடித்து எனக்கு அனுப்பிக் கொண்டிருந்தாள். இவ்வளவு தூரம் என் மனதைப் புரிந்து கொண்ட அவளைப் பற்றி எனக்கு

ஒன்றுமே தெரியாமல் இருக்கிறதே என்று என்னையே நொந்து கொண்டேன்.

சில மாதங்கள் சென்றன. நானும் என் தினசரி வேலைகளை மிஷினைப்போல் செய்து செய்து, எனக்கே அலுப்புத் தட்டி விட்டது. ஏதாவது சினிமாவுக்குச் செல்லலாம் என்று எண்ணினேன். அப்போது வெளியாகி யிருந்த "சித்திரலேகா" என்ற படத்தைப்பற்றிப் பலர் புகழ்ந்து பேசியிருந்தார்கள்.

தமிழ் நாட்டிலேயே பிறந்து வளர்ந்திருந்த போதிலும் தமிழ்ப் படங்களைப் பார்ப்பதென்றால் எனக்கு வேப்பங்காயாக இருந்தது. எல்லோரும் இப்படி ஒரு முகமாகப் புகழ்கிறார்களே சித்திரலேகாவை— அதைத் தான் பார்த்து விட்டு வருவோமே என்று தீர்மானித்தேன்.

படத்தில் கதாநாயகியாக நடிப்பவளைக் கண்டதும் திடுக்கிட்டேன். என் மனம் வனஜா தான் என்றது. சினிமாவில் அவள் பெயரை ஏதோ குமாரி என்று கொடுத்திருந்தது. நடிப்பில் மிகவும் பெயர் வாங்கி விட்டாள். படத்தில் மட்டுமல்ல. என்னிடம் எவ்வளவு நிதானமாய்ப் பயமில்லாமல் டாக்டர் லக்ஷ்மி அனுப்பினாள் என்று சொன்னாள். இவ்வளவு தூரம் கண்ட பிறகும் என் மனதுக்குள் இன்னம் ஒரு சந்தேகம். வனஜாவின் கண்கள் மட்டும் இந்தச் சினிமா நடிகையின் கண்களிலிருந்து வேறு பட்டிருந்தன. ஒரு வேளை மேக்-அப்பில் மறைத்திருப்பார்கள் என்று நானே சமாதானமும் கூறிக்கொண்டேன்.

அன்று பூராவும் குமாரியின் முகமே என் மனதில் தோன்றிக்கொண்டிருந்தது. எவ்வளவு நினைத்துப் பார்த்தும் அதை என்னால் மறைக்கவே முடியவில்லை. என் 'ப்ராக்டிஸ்,'' நோயாளிகள்; எல்லோர் முகமும், எனக்கு மறைந்து விட்டன. அவ்வளவு முக்கியத்வம் பெற்றது வனஜா— குமாரியின் முகம்.

* * *

எனக்குத் தெரிந்திருந்த ஒன்றிரண்டு சினிமா டைரக்டர்களின் மூலம் அந்தக் குமாரியைப்பற்றித் தெரிந்து கொள்ள என் மனம் தூண்டிக் கொண்டேயிருந்தது. கேட்கலாமா, வேண்டாமா என்று சஞ்சலப் பட்டுக்கொண்டிருந்த தயக்கக் காலம் போய் கேட்டு விடுவது என்று நான் துணிந்து முடிவு செய்து கொண்டேன்.

என் தீர்மானத்தைப் பரிஹஸிக்கும் முறையில் அன்று அவளிடமிருந்து எனக்கு ஒரு அழைப்பு வந்திருந்தது. இதுகாறும் என்னிடம் செய்திகளை வெளியிடாமல் மறைத்து வைத்திருந்ததற்காக மன்னிப்புக் கோரி, என்னை அவள் வீட்டுக்குச் சாப்பிட அழைத்திருந்தாள். அவள் வீட்டு விலாசத்தைக் கண்டேன். எனக்கே ஆச்சர்யமாக இருந்தது. நான் இருந்த தெருவுக்கு அடுத்த தெருவிலேயே இருந்தது அவள் வீடு. என்னுடைய முட்டாள் தனத்தைக் கண்டு எனக்கே சிரிப்பாய் இருந்தது. இவ்வளவு அருகில் இருந்ததினால் தான் என்னை அவ்வளவு நன்றாகத்தெரிந்து கொண்டு தன் காரியங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாள். அவள் புத்திக் கூர்மைக் கண்டு நான் வியந்து கொண்டேன். அழைப்பு மறு நாள் இரவு விருந்திற்கு. மற்ற விருந்தினர்கள் ஒருவரும் இல்லை யென்றும் ஏழு மணிக்கே என்னை வந்துவிடும் படியும் எழுதியிருக்கக் கண்டேன்.

* * *

எனக்கு இருந்த ஒரு ஆவலில் 6-45க்கே அந்த வீட்டை யடைந்தேன். வாசலில் தன் முத்துப் போன்ற பல் வரிசை தெரியச் சிரித்துக் கொண்டே "வாருங்கள் டாக்டர்! வாருங்கள்!! "என்று என்னை வரவேற்றாள். அவள் அருகே ஒரு யுவனும் நின்று கொண்டிருந்தான். உள்ளே சென்றதும் அந்த யுவன் தன் கணவன் தான் என்று எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள். கண்களைச் சற்று விரட்டி அந்த ஹாலை ஒரு முறை ஆராய்ந்து பார்த்தேன். என் கண்கள் நளினியைத்தான் தேடுகின்றன என்று தெரிந்து கொண்ட அவள் "நளினி வெளியே போயிருக்கிறாள்" என்றாள்.

நான் நினைத்து வைத்திருந்த கேள்விகளைக் கேட்க வேண்டிய தருணம் இது தான் என்று எண்ணிக் கொண்டேன். இருந்தாலும் அவள் கணவனுக் கெதிரே கேட்பதற்குச் சற்றுத் தயக்கமாக இருந்தது. எவ்வாறோ என் மனதிலிருப்பதை ஊகித்துக் கொண்டிருக்கிறாள் அந்தக் கள்ளி!

உள்ளிருந்து டம்ளரில் குளிர் பானம் 'ஒன்று வந்தது. அதைக் கையிலெடுத்து எனக்குக் கொடுத்துவிட்டு, "இதைச் சாப்பிட்ட பின்னர் என் கதையைச் சொல்லப் போகிறேன். அப்புறம் உங்களுக்குக் கேட்பதற்குக் கேள்விகள் ஒன்றும் இருக்காது" என்றாள்.

கதையைக் கேட்பதற்கு நானும் என்னைத் தயார் செய்து கொண்டேன்.

"ரெடியா" என்றாள்.

"ம்ம்!" என்றேன்.

அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

*   *   *

முதலில், டாக்டர்! உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் எங்கள் குடும்பத்துக்கு எத்தகைய பேருபகாரம் செய்திருக்கிறீர்கள் என்பதை நீங்களே தெரிந்து கொள்வீர்கள் என் கதையைக் கேட்ட பிறகு.

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு திருச்சி ஜில்லாவிலிள்ள ஒரு சின்னஞ் சிறு கிராமம் ஒன்றில், வறுமையினால் பீடிக்கப் பட்டிருந்த குடும்பம் ஒன்றிருந்தது. கணவனும் மனைவியுமாக இருந்தது அந்தக் குடித்தனம்,

அவளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இரண்டும் பெண் குழந்தைகள். அந்தக் குழந்தைகள் பிறந்த வேளை தானோ என்னவோ சிதறுண்டு வீணாகக்கிடந்த குடும்பம் திடீரென்று லட்சுமி கடாக்ஷத்துக்குள்ளாகியது. இந்திராவும்— சந்திராவும்...... அது தான் அந்த இரட்டைப் பெண் குழந்தைகளின் பெயர்கள்............கிராமத்தில் சில குழந்தைகள் பெற மாட்டாத சௌகரியங்களைப் பெற்றார்கள் — படிப்பு விஷயத்தில் தான்.

அக்கிராமத்திலுள்ள பெண் குழந்தைகள் சாதாரணமாக ஆறும் வகுப்பு வரைதான் படித்திருக்கும். காரணம் அதற்கு மேல் வெளியூர் சென்று படிக்கவேண்டும். இதற்கு விதி விலக்காய் இந்திராவும் சந்திராவும் வெளியூர் சென்று படித்து வரத் தொடங்கினர்.

காலக்கிரமத்தில் இருவரும் காலேஜ் படிப்பை முடித்தனர். இருவரையும் மேற்கொண்டு என்ன படிக்கவைக்கலாம் என்று அவர்களது பெற்றோர் யோசித்துக் கடைசியில் வைத்தியக் கல்லூரியில் சேரட்டும் என்று தீர்மானம் செய்தனர்.

இந்திராவும் சந்திராவும் தங்கள் வைத்தியக் கல்லூரிப் படிப்பைத் தொடங்கினர். முதல் வருடப்படிப்பு முடிவதற்குள் தந்தையும் தாயும் ஒருவர் பின் ஒருவராக இறந்து விட்டனர். தூரபந்து ஒருவர் உதவியைக் கொண்டு, கிராமத்தில் உள்ள தங்கள் வீடு நிலம், யாவற்றையும் இந்திராவும் சந்திராவும் விற்கச் செய்தனர். பிறகு அதனுதவியால் சென்னையில் ஒரு வீட்டை வாங்கிக்கொண்டு, வீட்டுக் காரியங்களைக் கவனித்துக் கொள்ள ஒரு அம்மாளையும் அமர்த்திக் கொண்டு, தங்கள் சென்னை வாழ்வையும் வைத்தியக் கல்லூரிப் படிப்பையும் தொடங்கினர்.

சந்திராவைவிட இந்திரா சற்று நேரம் தான் பெரியவள். இரண்டு பேரும் ஒரே அச்சில் வளர்க்கப்பட்ட பதுமைகள் போன்றுதான் இருப்பார்கள். உயரத்திலும் சரி, நடையிலும் சரி, தேக வளர்ச்சியிலும் சரி. அவர்கள் தாயாரே ஒவ்வொரு சமயம் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடுவாள். இரண்டு பேரையும் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு ஒரே ஒரு வித்தியாசம் நன்கு புலப்படும். சந்திராவின் கண்கள் இந்திராவின் கண்களைவிட இமை நீண்டு அழகாக இருக்கும்.

வைத்தியக் கல்லூரியில் அவர்கள் தங்கள் இரண்டாம் வருடப் படிப்பைத் தொடங்கிய போதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. ஒரு சினிமா கம்பெனியார் தாங்கள் அப்போது எடுத்துக் கொண்டிருந்த படத்தில் அமைத்திருந்த ஒரு வைத்தியக் கல்லூரியின் காட்சியை எடுக்க எண்ணி உண்மையான கல்லூரியையே தம் படத்தில் எடுக்க ஏற்பாடுகள் செய்தார். அப்போது தான் இந்திரா தன் கணவன் கோபாலைச் சந்தித்தது. கோபால்தான் அப்படத்தை டைரக்ட் செய்து கொண்டிருந்தார். சாதாரணமாக இல்லாமல் ஒரு விதத்தில் தனியாகவே அமைந்தது அவர்கள் நட்பு. கல்லூரியில் அவர்கள் பார்த்தது ஒரு முறைதான். பின்னால் தான் எடுத்த படத்தை திரையிட்டுப் பார்க்கையில், பல மாணவ மாணவிகளிடையே இந்திரா ஒரு தனியிடம் பெற்றிருக்கக் கண்டார்.

'மேக்—அப்' இல்லாமல், படத்தில் இவ்வளவு அழகுடன் விளங்கும் பெண்களே சினிமா உலகில் இல்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தவருக்கு ஒரு வழி தோன்றியது.

மறு முறை அவர் கல்லூரிக்கே வந்து விட்டார். சாதாரணமாய் இருந்தால் ஏதாவது கேள்விகள் எழலாம் என்று எல்லோரையும் படத்தின் "முன் காட்சி" பார்க்க

அழைத்துச் சென்றார். இந்திராவும் சந்திராவும் காட்சி பார்க்கச் சென்றார்கள். இந்திராவைத் திரையில் கண்ட போது அவர்களால், அவர்கள் கண்களையே நம்ப முடியவில்லை. மாணவர்களுக்கிருந்த உத்சாகம் கரைகடந்து போய் அங்கேயே கோஷமிட்டார்கள். சுலபமாக வீட்டைக் கண்டு பிடித்து விட்டார் கோபால். அவரும் முதலில் ஏமாந்து போய், சந்திராவை இந்திரா என்றெண்ணி விட்டார்! என்ன இருந்தாலும் சினிமா டைரக்டர் அல்லவா! சந்திராவின் கண்களைப் பார்த்துவிட்டு உடனே சமாளித்துக் கொண்டு விட்டார்.

என்ன வழிகள் செய்தாரோ! என்ன சாமர்த்தியமாகப் பேசினாரோ! இந்திரா தன் கல்லூரிப் படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு, சினிமாவில் நடிக்கத் தொடங்கினாள். சினிமாவில் அவள் பெயரை 'விமலகுமாரி' என மாற்றினார்கள். அந்த உலகில் பிரவேசித்த சில மாதங்களுக்குள்ளாகத் தன் பெயரைத் தமிழ் நாடெங்கும் தன் அழகின் மூலமும், நடிப்பின் மூலமும் பிரகாசிக்கச் செய்து விட்டாள் இந்திரா. கோபாலும் இந்திராவும் கணவனும் மனைவியுமாய் வாழ்க்கை நடத்தத் தொடங்கினார்கள். ஒருவருடம் சென்றது. அவர்கள் வாழ்க்கை தடங்கல் ஏதுமின்றி நன்றாகவே நடந்து கொண்டிருந்தது.

மலைக் காட்சிகள் சிலவற்றைப் படம் பிடிக்கச் சென்றிருந்த கோபால், தற்செயலாக ஏற்பட்ட ஒரு விபத்தின் காரணமாக அங்கேயே மரண மடைந்துவிட்டார். அவரது உடல் தான் வீடு கொண்டு வரப்பட்டது. இந்திராவின் சோகம் எல்லை புரண்டது. அப்போது அவள் தாயாராகிக் கொண்டிருந்தாள், சந்திராவுக்கும் மற்றவர்களுக்கும் ஒரே கவலையாகப் போய்விட்டது. அந்த அதிர்ச்சி அவளை ஒரு புது ஆளாக்கி விட்டது.

நான்கு மாதங்கள் கழிந்தன. தங்கப்பதுமை போன்ற பெண் குழந்தையைப் பெற்றாள். அவளை உரித்து வைத்திருந்தது அக் குழந்தை. குழந்தையைச் சீராட்டி வளர்ப்பதில் தன் நேரத்தைச் செலவிட்டாள். இருந்தபோதிலும் அவள் மனப்பிரமை நீங்கவேயில்லை. பித்துப் பிடித்தவள் போல் இருப்பாள். என்னென்னவோ முயற்சிகள் செய்து பார்த்தும் பலனில்லாமற் போகவே பேசாமல் அவளைத் தன் வழியே விட்டு விட்டனர் மற்றவர்கள்.

இந்தத் துக்கங்களில் ஈடுபட்ட பிறகு சந்திராவிற்கும் கல்லூரிக்குச் சென்று படிக்க இஷ்டமில்லை. இந்திராவுடன் சேர்ந்து நளினியின் வளர்ப்பில் கண்ணும் கருத்துமாய் இருந்தாள்.

இந்திராவுக்குச் சிறிதளவாவது மகிழ்ச்சி அளித்துக் கொண்டிருந்த அந்தக் குழந்தையாவது, சில காலம் உயிருடன் இருந்திருக்கக் கூடாதோ! எட்டாம் மாதத்திலேயே அது சுரம் கண்டு இறந்து விட்டது. சுரத்திற்குத் தான் காரணமோ என்று சந்திரா அஞ்சினாள், சுரம் காண இரண்டு நாட்களுக்கு முன் ஒரு மாலை குழந்தையை வெளியே எடுத்துச் சென்றிருந்தாள் அவள். அன்றிரவே அதற்குச் சலதோஷம் பிடித்தது. அது தான் ஆரம்பம் (இங்கு அவள் குரல் கம்மியது.)

இந்தத் தடவை குழந்தையின் சாவு இந்திராவை நிஜமாகவே பைத்தியம் பிடிக்கச் செய்து விட்டது. எவருடனும் பேசுவதில்லை. தனக்குத்தானே கூப்பிட்டுப் பேசுவாள். போட்டோவைக் கண்டு "நளினி! என் கண்ணே! ஓடிவா!" என்றழைப்பாள்.

பிரபல டாக்டர்களையெல்லாம் அழைத்து வந்து காண்பித்தனர். எல்லோரும் தங்களால் ஒன்றும் செய்ய முடியாதெனச் சொல்லி விட்டனர். வடக்கே நகரமொன்றில் அமெரிக்காவிலிருந்து பிரபல மனோதத்துவ ஆசிரியர், ஒருவர் வந்திருக்கிறார் என்று கேள்வியுற்ற சந்திரா, இந்திராவைப்பற்றிய விவரங்களை எல்லாம் எழுதி அவரை அழைத்தாள். அவரும் வந்து இந்திராவைக் கண்டார். இந்திராவின் குறைகளைச் சற்று நீக்கினால், தெளிவாகும் என்று கூறினார். இந்திராவுக்கும் சந்திராவுக்கும் முகச்சாயல்களில் உள்ள ஒற்றுமையைக் கண்டு அவருக்கிருந்த ஒரு எண்ணத்தைச் சொன்னார். அதைப்பற்றி இந்திராவுக்கு ஒன்றுமே தெரியக்கூடாது. என்றும், அது ஒரு ஆச்சர்யமாகவும் சந்தோஷ அதிர்ச்சியாகவும் இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

அவர் கூறிய இரண்டு வழிகளில் ஒன்று சந்திராவின் முயற்சிக்கு அப்பாற் பட்டதாயிருந்தது. கோபாலே நேரில் வரவேண்டுமென்றும், அல்லது நளினியைப் போலவே உள்ள ஒரு குழந்தையை அவளிடம் காண்பித்து அவளது நினைவை நிலைக்குக் கொண்டு வரலாம் என்றும் கூறினார். இவ்

விரண்டு வழிகளுள் பின்னதுதான் சுலபமாகத் தோன்றியது, சந்திராவுக்கு. நளினியைப் போன்றதொரு குழந்தையை அடைய அவளுக்கு வேறு வழியொன்றும் விளங்கவில்லை. ஒரே ஒரு வழிதான் இருந்தது. அதன்படி செய்தாள்.

வைத்தியக் கல்லூரியில் அவளுடன் படித்துப் பழகிய கிருஷ்ணன் என்பவரை மணந்து கொண்டாள். (அவள் குரலில் இங்கு வெட்கத்தின் சாயை சற்றே படர்ந்திருந்தது.) விவாகம் ஆனது அவர்கள் இருவருக்கும், இன்னும் ஒன்றிரண்டு பேர்களுக்கு மட்டும் தெரியும். அவர்களும் இந்த நிகழ்ச்சியை இரகசியமாக வைத்துக் கொண்டார்கள்.

சந்திரரவும் கிருஷ்ணனும் மணவாழ்க்கையில் ஈடுபட்டனர். இந்திராவை வீட்டிலேயே தான் தங்கவிட்டிருந்தனர். அவள் இருந்த நிலையில் ஒரு மாறுதலையும் காண முடியவில்லை.

சந்திரா இப்போது கருவுற்றிருந்தாள். அவளுக்குப் பிறக்கப் போகும் குழந்தை பெண்ணாய்த்தான் இருக்கும் என்று எப்படி நிச்சயம் கூறமுடியும். நாளும் இதே எண்ணத்தில் வேரூன்றிப் போயிருந்தாள் அவள்.

ஏழெட்டு மாதம் வெளியூருக்கு சென்று சுற்றிப் பார்த்துவிட்டு வருதாகச் சொல்லி வீட்டை விட்டுக் கிளம்பினாள் அவள். சென்னைக்கு அருகேயிருந்த ஒரு கிராமத்திலேயே தங்கினர் பிரசவகாலம் நெருங்கிய போது, டாக்டர் மீனாக்ஷியின் பெயர்தான் நினைவில் இருந்தது. டாக்டர் மீனாக்ஷியும், டாக்டர் லக்ஷ்மியும் நெருங்கிய சிநேகிதிகள் என்று சந்திரா நன்கு தெரிந்து கொண்டிருந்தாள்.

சந்திராவின் ஒரே கோரிக்கை.....வேண்டுகோளும், பிரார்த்தனையும்.....பூர்த்தியாக, குழந்தை நன்றாய் இருக்க வேண்டும். டாக்டர் மீனாக்ஷியின் தயாள குணத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தாள். இதற்காக இரண்டு மூன்று பொய்கள் சொன்னாலும் பாதகமில்லை என்றுதான் துணிச்சலுடன் இருந்தாள்.

குழந்தை பிறந்தது, இவ்வளவு தூரம் சந்திரா வேண்டிக் கொண்டிருந்ததைக் கடவுள் மறப்பாரோ! பெண் குழந்தையாகவே பிறந்தது. அதுவும் சாயலில் நளினியை ஒவ்வொரு அங்கத்திலும் கொண்டிருந்தது.

முதல் நளினி இறந்தபோது அவள் ஏறக்குறைய ஒரு வயதுக் குழந்தையின் வளர்ச்சியைப் பெற்றிருந்தாள். அதனால் தான் இந்த நளினியை ஒருவருடம் கழித்து இந்திராவின் கண்களில் காட்டத் தீர்மானித்தாள். டாக்டர் மீனாக்ஷியின் ஒத்துழைப்பு இந்த விஷயத்தில் இல்லையென்றால் மிகவும் சிரமப்பட்டுப் போயிருப்பாள். குழந்தையின் வளர்ப்பில் டாக்டர் மீனாக்ஷி காட்டிய சிரத்தை சந்திரா தானாகக் காட்டியிருக்க முடியுமா? என்பது சந்தேகம் தான்.

இதனிடையில் இந்திரா கொஞ்சம் கொஞ்சமாகக் குண மடைந்து கொண்டிருந்தாள்.

இதுதான் தருணம் என்று சந்திராவும், கிருஷ்ணனும் நினைத்தார்கள். திடீரென நளினியைக் கண்டதும் இந்திரா மறுபடி கதறினாள். "நளினி" என்று ஆவலோடு அணைத்துக்கொண்டாள். நளினி என்ன நினைத்தாளோ "அம்மா!" என்று சொல்ல முயற்சித்தாள். மனோதத்துவ சாஸ்திரம் வெற்றி பெற்றது. இந்திரா குணமடைந்தாள். நளினியைத்தான் பெற்றக் குழந்தையாகவே எண்ணி வளர்க்கிறாள்.

இப்போது முழுவதிலும் கதையைக்கேட்ட பின்னர் டாக்டருக்குச்சந்தேகம் உண்டா? என்று சந்திரா கேட்கிறாள்" என்று கூறி முடித்தாள்.

* * *

இல்லை என்று சொல்லிவிடுங்கள் அந்த ஜாலக்காரியிடம் என்றேன்நான்.

வாயிற் கதவைத்திறந்து கொண்டு நளினியும் இந்திராவும் வந்தனர். இந்திராவையும் சந்திராவையும் மாறி மாறிப்பார்த்தேன். என் கண்களை என்னால் நம்பமுடியவில்லை. கடவுளின் படைப்பை எண்ணி வியந்தேன்.

நளினி என்னை ஞாபகம் வைத்துக் கொண்டிருந்தது. தன் வாயைத்திறந்து சிரித்து, உள்ளிருந்த சின்னஞ் சிறு பற்கள் இரண்டு மூன்றைக்காட்டியது. "சாப்பிடலாமா?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் இந்திரா. சந்திரா என்னை அறிமுகம் பண்ணி வைத்தாள். வழக்கத்துக்கு விரோதமாக இந்தக் கதையைக்கேட்ட எனக்குச் சாப்பாடு சற்றுக் குறைந்தது. இன்னம் ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்கவேண்டும் என்று என்னைத் தயார் செய்து கொண்டேன்.

கடைசியில் விடைபெற்றுக் கொண்டு செல்லும் போது வாயில்வரை வந்தாள் சந்திரா. துணிந்து கேட்டேன் "சித்ரலேகாவை"ப்பற்றி சந்திரா ஒத்துக்கொண்டாள். முதல் பாதியில் இந்திராவும் பின் பாதியில் தன் நடிப்பும்தான் என்று. "சித்ரலேகா" உண்மையிலேயே வெற்றிதான் என்று நான் சொன்னேன்.

"அதைவிடப் பெரிய தல்லவா என் முயற்சியின் வெற்றி!" என்று கூறிச் சிரித்தாள் அவள்.

சோப்புகளுக்கு ராஜா



கால் நூற்றுண்டுகளுக்கு மேலாக கோத்ரெஜ் ந. 1 சோப் அரசனாயிருந்து வருகிறது. தலைமுறை தலைமுறையாக உபயோகிக்கும் பலவித ஜனங்களே அதற்கு இப்பெருமையுள்ள பட்டத்தை அளித்திருக்கின்றனர். ஏனெனில் அது கிடைக்கக்கூடிய சிறந்த பொருள்களிலிருந்து வெகு சாமர்த்தியமாகத் தயாரிக்கப்படுகிறது. அதன் புதிய இனிய வாசனை, ஏராளமான நுரை, பெரிய ஸைஸ் (மார்கெட்டில் மிகப் பெரிய சோப்) அதையே எல்லோரும் விரும்பச் செய்கின்றன.



முற்றிலும் சுத்தமானது - மிருகக் கொழுப்பற்றதென்பதற்கு உத்தரவாதம்.

கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.
ரிஜிஸ்டர்டு

மதராஸ்: 164, பிராட்வே: கொச்சி: 6/36, கல்வத்தி.

தாவர எண்ணெய்களினால் சோப்பு தயாரிப்பதில் முதன்மையானவர்கள்.

"என் சருமத்தை
எழிலோங்கச்செய்யும்
லக்ஸ்
டாய்லட் சோப்பிற்கு
எனது நன்றி"
என்று கூறுகிருர்
ருக்மணி தேவி
LUX
இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்த
மானதுமான சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 288-172 TM

தொடர் கதை

எது இன்பம்

வெ. ரங்கராஜன்

அத்: 32 சொல்லடி ஜக்கம்மா!

சங்கரனின் பண்ணையாட்களுக்குள் பரமசிவம் ரொம்ப நல்ல மனிதன். பழங்காலத்துப் பேர்வழி. எஜமான விசுவாச முள்ளவன். சங்கரன் சிறு குழந்தையாக இருக்கும்பொழுதே தூக்கி வளர்த்தவன் பரமசிவம்.

நீரோடையின் ஆழமான இடங்களையும், சுழி மடுக்களையும் அனுபவத்தால் அறிந்து அவைகளை விலக்கி ஒதுக்கி, பரிசலைக் கடத்திச்செல்லும்பழக்கமான பரிசலோட்டியைப்போல், சங்கரனின் குணபாவங்களை அறிந்து அதன்படி நடந்துகொண்டதால்தான் அவன் இவ்வளவு நாள் காலம் தள்ள முடிந்தது. இல்லாவிட்டால், "அவன் கிடக்கிறான், சுக்காஞ்செட்டி!" என்று உதட்டைப் பிதுக்கிவிட்டுப் போய்விட்ட எத்தனையோ பண்ணையாட்களைப்போல் அவனும் போயிருக்கவேண்டும்!

சங்கரனுக்குக் குழந்தை பிறக்கவில்லை என்பதில் பரமசிவத்திற்கும் மன வருத்தம் உண்டு. அவன் தன் குலதெய்வமான பாவாடைராயனை எத்தனையோ முறை வேண்டிக்கொண்டிருக்கிறான். கடைசியில், அவனுக்கும் அலுத்துப்போய், "அது அவரவர்கள் செய்த கர்மபலன்! அதை யார் மாற்றியமைக்கமுடியும்? பாவாடைராயனே கண் பார்க்கவில்லை என்றால் இனி என்ன செய்தும் பலன் இல்லை!" என்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்துவிட்டான்.

சங்கரனின் வீட்டில் திருட்டுப்போன அன்று பரமசிவம் ஊரில் இல்லை. தன் கொல்லையில் கத்தரி நட நாற்று வாங்க அயலூர் போயிருந்தான். அவன் திரும்பி வந்ததும் வராததுமாக அவன் மனைவி திருட்டுப்போன சமாச்சாரத்தைச் சொன்னாள். இதைக்கேட்ட அவனுக்குத் தன் வீட்டில் இருந்த பணம் பறிபோய்விட்டதைப் போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. "யாரு! நான் போய் ஐயாவை பார்த்துட்டு வரட்டா?" என்று எழுந்தான், பரமசிவம்.

"வந்தகால் ஆறாமெ இப்ப என்ன அவசரம்? நீ போய் திருடனை கையுங்களவுமா பிடிச்சி கொடுத்துடப்போறியா? சும்மாத்தான் உக்காரு! சாப்பிட்டுப்படு! நாளைக் காலையிலே போய் சமாச்சாரத்தை கேட்டுக்கலாம்" என்றாள், அவள்.

"பணத்தாசை பிடித்தவன்" என்று ஊர் முழுதும் பெயர் வாங்கிய சங்கரன்மீது தன் கணவன்

எப்போதும் அதிகமான வாஞ்சை காட்டுவது அவனுக்குப் பிடிப்பதில்லை.

தன் மனைவியின் வார்த்தையைப் பரமசிவம் பொருட்படுத்த மாட்டான். அவள் சொன்னதற்காக அவன் போகாமல் இருக்கவில்லை. அவன் உடலே சற்று அசதியாய் இருந்தது. நடந்துவந்ததில் நன்றாகப் பசித்திருந்தான். ஆகவே, "சரி, புள்ளே! சீக்கிரம் சோற்றை வடித்துப் போடு!" என்று கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தான்.

குடிசையுள் மினுமினுத்த தகர விளக்கின் முன் உட்கார்ந்து கொண்டு,

"தனந்தேடி உண்ணுமல் புதைக்க வேண்டாம்!
தருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்!
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க
வேண்டாம்!
நெஞ்சாரப் பொய்தன்னை............................."

என்று படித்துக் கொண்டிருந்தான், பரமசிவத்தின் மகன்.

* * *

மறு நாள் காலை எழுந்ததும் அவனுக்கு மைக்கார மாரியின் ஞாபகம் வந்தது. அவனை அழைத்துப் போய், மை போட்டுப் பார்க்க வேண்டுமென்று எண்ணினான். பல்துலக்கி, இரண்டு வாய் பழையதைச் சாப்பிட்டு விட்டு, மாரியின் வீட்டை நோக்கி நடந்தான்.

பரமசிவம் தன்னை வந்து, கூப்பிட்டுப்போவது, 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த கதையாக முடிந்ததே!' என்று நினைத்தான், மாரி. சற்று முன் கனகம் வந்து காரியத்தை விவரித்தபோது சற்றுச் சிரம சாத்தியமானதாகப் பட்டது அவனுக்கு. எங்கே குட்டு வெளிப்பட்டு, தனக்குள்ள அரைகுறை நல்ல பெயருக்கும் இழுக்கு வந்து விடப் போகிறதோ! என அஞ்சினான். எதிர்பாராதவிதமாகப் பரமசிவமேவந்து கூப்பிட்டது அவனுக்கு எவ்வளவோ சௌகர்யமாய்ப் போய்விட்டது.

பரமசிவம் மாரியை அழைத்து வந்தவுடன் சங்கரன் சற்று உற்சாகமடைந்தான். அன்ன ஆகாரம் இல்லாது குன்றிக்கிடந்த அவன் உடலில் ஒரு மின்சாரத் துடிப்பு உண்டாயிற்று. "பரமசிவம்! நீதான் எனக்குக் கண் கண்ட தெய்வம்! நீதான் எப்போதும் என் நன்மையை நாடுபவன். நீ இருந்திருந்தால் திருடனைப் பிடித்திருப்பேன். தடிப் பயல்கள்! எல்லோரும் கூலிக்கு மாரடித்தான்களே தவிர எவனும் உண்மையாக என் பணம் போனதில் அக்கரை காட்டவில்லை. கூடிக்கூடி, குசு குசுவென்று பேசிக்கொண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டார்கள்! — பரமசிவம்! மை போட்டுப் பார்ப்பதற்கு வேண்டியதெல்லாம் கொடு! ஜக்கம்மாவுக்கு நல்லா படையல் போட்டு ஆர அமரப்பார்த்துச் சொல்லச் சொல்லு! கண்டு பிடிச்சி கொடுத்துட்டா அவனுக்கு முழுசா பத்து ரூபாய் தந்துடறேன்!" என்றான்.

பூசை பலமாக நடந்தது. வைத்த இடத்தை முன் கூட்டியே சொல்லிவிட்ட பின்பும் ஜக்கம்மா பேசாமல் இருப்பாளா? சொல்லிவிட்டாள்; பணம் இருந்த இடத்தைச் சொல்லிவிட்டாள்; எடுத்து ஒளித்தவரையும் சொல்லிவிட்டாள்!

பணம் இருந்த பானையை எடுத்து வந்து சங்கரன் முன்னே வைத்தான், மாரி. கட்டுக்கட்டுகளாகப்பானையுள் இருந்த நோட்டுக்களைப்பார்த்தான், சங்கரன். அவன் ஆனந்தம் எல்லையைக் கடந்தது "பணம்! .... பணம்!...... என் பணம்!......பங்கஜம்! நீ......யா? நீ......யா......? மேலே சொல்ல முடியாமல் அவன் தொண்டையுள் ஏதோ அடைத்தது. கண்கள் மிரள மிரள

விழித்தன. மார்பின் மீது நக்க் நக்க் கென்று குத்திக்கொண்டான்.

"அம்மா! ஓடுங்க! ஓடுங்க! தண்ணி கொண்டாங்க! ஐயாவுக்கு மாரடைச்சிப்போச்சு!" என்று பர பரத்தான், பரமசிவம்.

பார்வதி தண்ணீர் கொண்டு வர ஓடினாள். சங்கரனின் தலை துவண்டு ஓர்புறம்சாய்ந்தது. நீரைத் தெளித்தனர். கொம்பு மஞ்சள்புகை கொடுத்தனர். மார்பைத் தடவிக்கொடுத்து, சுவாசத்தை மீட்கப் பார்த்தனர். பரமசிவமும் மாரியும் தங்களாலான சைத்யோபசாரங்களை எல்லாம் செய்து பார்த்தனர். பலன் இல்லை. பிறகு பரமசிவம் வைத்தியரைத் தேடி ஓடினான். வைத்தியர் வருவதற்குள் உடல் சில்லிட்டுப் போயிற்று. முகத்தில் கருநீலம் படர்ந்துவிட்டது.

அத்: 33 கூடு சிதைந்தது

பார்வதி இதையா எதிர்பார்த்தாள்? பணம் திருட்டுப்போன மன வருத்தத்தில் தன் கணவருக்குச் சித்தச் சுவாதீனமின்மை வந்து விடுமோ! தற்கொலை செய்துகொள்வாரோ! அல்லது மனமுடைந்து நாளாவட்டத்தில் உருக்குலைந்து ஏதேனும் ஒரு நோய்க்கு ஆளாகி அகால மரணமடைந்து விடுவாரோ! என்று அவள் சஞ்சலித்தாள். இந்த விபரீத பலன் உண்டாகுமென்றால் பார்வதி இதற்கு இசைந்திருப்பாளா? வெளியிட்டுச் சொல்லமுடியாத மனவேதனை பார்வதியின் மனதைத் துளைத்தது. பிரேதத்தின் முன் உட்கார்ந்து. தன் இதயத்தில் கொந்தளித்த இரத்தமே கண்ணீராக வரும்படி கனிந்து உருகி அழுதாள்.

சங்கரன் இறந்துவிட்ட செய்தி விரைவில் திருமயிலாடி முழுவதும் பரவியது. கிராமத்து ஜனங்கள் இழவு விசாரிக்கத் திரண்டுவந்தனர். அண்ணாவின்மீது எவ்வளவு மன வருத்தமிருந்த போதிலும் அவன் இறந்தவுடன் பங்கஜம்மாளால் துக்கத்தைச் சகிக்கமுடியவில்லை. ஒரு பாவமுமறியாத தன்மீது திருட்டுக்குற்றம் சுமத்தியதை அவள் அனாயாசமாக மறந்துவிட்டாள். நியாய அநியாயத்தை நடுநின்று நோக்கும் கடவுள் தன்னைக் கைவிடமாட்டார் என்று நினைத்தாள். இந்த நினைவு அவள் மனதில் எழுந்த கசப்பை மாற்றியது. அண்ணாவின்மீது எப்போதும் இருந்த பரிசுத்த அன்பு ஊற, கண்ணீர் பிரவாகமாகப் பெருகியது.

துக்கம் விசாரிக்க வந்திருந்தவர்களில் சிலர் பங்கஜம்மாளை எரித்துவிடுவதுபோல் பார்த்தனர். "ஏப்பா! பட்டணத்தாளில்லே! என்ன வேஷம்? என்ன நீலித்தனம்? பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகிற ஆட்டத்தைப்பாரு! ஒப்பாரிக்கு என்ன குறைவு? திருடன் திருவாசகம் படிக்கிருப்பலே!" என்று சொல்லித் தங்கள் மனக் கசப்பை வெளியிட்டனர்.

* * *

சங்கரன் நம்பி வாழ்ந்த பதினையாயிரம் ரூபாய் அவன் கூடவே வரவில்லை. புரண்டு புரண்டு அழுத பார்வதியும் வாசலுடன் நின்றுவிட்டாள். சங்கரனின் சீட்டாட்ட நண்பர்கள் பாதை பிரியும் நாற்சந்தியிலே நின்று மெல்ல நழுவி ஆற்றை நோக்கி நடந்துவிட்டனர். சங்கரன் விழுந்து விழுந்து படித்த, "மீண்டும் யவ்வனம்" என்ற புத்தகம்கூட அவனைத் தொடர்ந்து சுடுகாடுவரை வரவில்லை! தோப்புத்துணியாலான வைக்கோல் தலை மாட்டுடன், எல்லோரும் போகுமிடத்திற்குச் சென்று எல்லோரையும்போல் பிடி சாம்பலும் முறம் எலும்புமானான், சங்கரன்.

அத்: 34. தபால்!

தபால்காரனை எதிர்பார்த்துக் கூடத்திலேயே நின்றிருந்த லீலாவுக்கு அவன் வரவு மனதில் ஒரு குதூகலத்தை உண்டுபண்ணியது.

"உங்கள் பேர்தான் லீலா வாம்மா?— நீங்கள் அண்ணைக்கு மோர் கொடுத்தது ஞாபகம் இருக்கு. அதை நினைத்துத்தான் இந்தக் கவரை எடுத்து வந்தேன். இல்லாவிட்டால் அடுத்த 'பீட்டுக்கு' வரும்போது எடுத்து வரலாம். இந்த ஊருக்கு உங்கள் கடுதாசி ஒன்றே ஒன்றுதான்! வாங்க! கையெழுத்துப் போடுங்க!" என்றான், அவன், தன் கயிற்றைத்திரித்துக்கொண்டே!

லீலா கவரை வாங்கிப்பார்த்தாள். இன்ஷியூரன்ஸ் கம்பெனியிடமிருந்து வந்திருந்தது, கையெழுத்திட்டுக் கொடுத்த ரசீதை வாங்கிக் கொண்டு போய்விட்டான், தபால்காரன். கவரைப் பிரித்துப் படிக்கத்தொடங்கினாள். லீலா. காரிருளில் தோன்றும் மின்னலைப்போல் அவள்

வதனத்தில் இலேசான புன்னகை எழுந்தது. அவள் எதிர்பார்த்த பதில்தான்!

நேரே வந்து இன்னும் ஒரு மாத காலத்திற்குள் பணத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கடிதத்தில் கண்டிருந்தது. ஆனால் லீலாவுக்கு அவ்வளவு நாள் தாமதிக்க மனமில்லை. அங்கு இருக்கும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகப்பட்டது அவளுக்கு. சங்கரனின் மரணத்திற்குப்பிறகு வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூட அவள் உடல் கூசியது. கிராமத்து ஜனங்கள் எல்லோரும் அவளையே சுட்டிக்காட்டி ஏதேதோ பேசுவதாகப் பிரமையுண்டாயிற்று. ஆகவே சென்னைக்கு உடனே போகவேண்டுமென்று விரும்பினாள்.

ஏறக்குறைய பங்கஜம்மாளும் லீலாவின் நிலையில்தான் இருந்தாள். துக்கம் விசாரிக்க வந்த குடியான ஜனங்களும் பண்ணையாட்களும் தேவாரத்தார் சாவுக்கு இவளே காரணம் என்ற ரீதியில் பேசிய பேச்சைக் கேட்டபிறகு அவள் உடல் குன்றியது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த நரை குப்பென்று மல்லிகை பூத்தாற்போல் நரைத்துவிட்டது. சாப்பிடும் சாப்பாடும் வேப்பங்காயை வலுவில் தின்பதைப்போல் இருந்தது.

கடிதத்தைப் படித்தவுடன் அவளுக்கும் ஒரு புதிய தெம்பு உண்டாயிற்று மறுநாளே சென்னைக்குப் புறப்படலாம் என்றுகூட நினைத்தாள். ஆனால் சங்கரனின் கர்மகாரியங்களுக்கு இல்லாமல் போய்விடுவது சரியெனத் தோன்றவில்லை. அவன் எவ்வளவுதான் பாதகனாய் இருக்கட்டும்; உடன் பிறந்தவனல்லவா? ரத்தபாசம் சில்லறைச் சச்சரவுகளில் குலைந்துவிடுமா? அத்துடன் அவள் ஊராரின் நாவிற்குவேறு பயப்பட்டாள். "இவள் குற்றமற்றவளாக இருந்தால் கர்மகாரியங்களுக்கு இருந்துவிட்டுப் போகமாட்டாளா?" என்ற பேச்சு எழுந்தாலும் எழலாம்.

சங்கரன் சாவிற்குப்பிறகு பார்வதியிடம் குண மாறுதலைக் கண்டாள், பங்கஜம்மாள். பரிவுடன் அவள் உபசரிப்பதைக்கண்டு ஆச்சர்யப்பட்டாள். தான் செய்ய நினைத்த பொல்லாங்கு தனக்கே கேடு செய்த பிறகு பார்வதிக்கு நல்ல புத்தி வந்ததா? தன் வாழ்வைக் குலைக்க வந்ததாக எண்ணிய லீலாவின்மீதும் இப்போது அவளுக்கு சகோதர வாஞ்சை உண்டாயிற்று. அவள் குணத்தையும் அழகையும் புகழ ஆரம்பித்தாள். அவள் வீட்டில் இருப்பதே ஒரு லக்ஷ்மிகளையாக இருந்தது அவளுக்கு.

இதையெல்லாம் பங்கஜம்மாள் கவனித்தாள். ஆகவே உடனே ஊருக்குப்போக மனம் வரவில்லை. "ஏன் லீலா! மாமாவின் கர்மகாரியம் முடிந்துபோகலாமே!" என்று சொன்னாள்.

"மாமாவின் கர்மகாரியத்திற்கு நாம் இல்லாவிட்டால் ஒரு குறையும் வந்துவிடாது. நாம்தானே அவர் சாவதற்குக் காரணமானவர்கள்! நம் காற்று இந்த வீட்டில் வீசினால் கூட அவர் ஆத்மா இங்கு வரக் கூசலாம்! நாம் போய் விடுவோம்! இங்கே என்றால் இனிமேல் ஒரு நாள் கூட இருக்க முடியாது" என்று கண்டிப்பாகச் சொன்னாள், லீலா.

லீலாவை வற்புறுத்த பங்கஜம்மாளுக்குத் தைர்யம் வரவில்லை. அவள் இதய அந்தரங்கத்தில் உறுத்திக் கொண்டே இருந்த உணர்ச்சி நாடிகளை அவள் பேச்சு மேலும் வேதனைக் குள்ளாக்கியது. சம்பிரதாயத்தை, ரத்த பாசத்தை ஒரு புறம் ஒதுக்கிவிட்டுப் புறப்படுவதே மேல்என எண்ணம் எழுந்தது. புறப்படுவதற்கு ஒப்புக் கொண்டாள்.

அத்: 35. நொந்த உள்ளம்.

"அத்தை! நானும் அம்மாவும் நாளைக் காலை ரயிலில் பட்டணம் போகலாமென இருக்கிறோம்!" என்றாள், லீலா.

பார்வதி அமைதியுடன் இதைக் காதில் வாங்கிக் கொண்டாள். திடீரென்று இப்படிச் சொல்லிப் புறப்படுவார்கள் என்பதை அவள் எதிர் பார்த்தாள். ஊரார் பேச்சு அவர்கள் மனதில் எவ்வளவு வேதனையுண்டாக்கியிருக்கும் என்பதையும் அவள் உணர்ந்துதான் இருந்தாள். தன் பழியை அவர்கள் தலையில் கட்டி வீண் அபவாதத்திற்கு உள்ளாக்கிய குற்றத்தை அவள் மனச் சாட்சி சுட்டிக் காட்டி உறுத்திக் கொண்டே இருந்தது. அதற்குப் பிராயச்சித்தமாக எவ்வளவு செய்தாலும் தகும் என நினைத்தாள்.

"வேண்டாமம்மா! லீலா! ஊரார் சொல்வதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்! பணம் திருட்டுப் போனதற்கும் அவர் மாரடைத்துச் செத்ததற்கும் உங்களுக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை என்பது என் எண்ணம். இதை உங்கள் வீடுபோல் பாவித்து இருங்கள். உங்களை விட்டால் எனக்கு வேறு யார் துணை?" என்றாள்.

பார்வதியின் பேச்சு நிதானமாக இதய ஆழத்திலிருந்து வந்தது. புண்பட்ட அவள் உள்ளம் அன்பை விளைத்து ஆறுதலடைய விரும்பிற்றா? பார்வதியின் நிலையிலே லீலாவுக்கு மன இரக்கம் உண்டாயிற்று.

"நாங்கள் அதைக் குறித்து வருந்தவேயில்லை. ஊரார் ஆயிரம் சொல்லிவிட்டுப் போகட்டும். கடவுள் ஒருவர் இருக்கிறாரல்லவா? மாமாவுக்குப் பணத்தாசை எமனாக வந்து வாய்க்கவேண்டுமென்றால் யார்மேல் குற்றம் சொல்லி என்ன பலன்? போனது போய்விட்டது. அதை நீ ஞாபகப்படுத்துவாய் என்ற நான் நினைக்கவில்லை. அண்ணாவின் ஆதரவில் இருக்கவந்தாள் அம்மா. அண்ணா உண்மையில் அண்ணா அல்ல என்பதை உயிரோடு இருக்கும்பொழுதே செயலில் காட்டி

விட்டார். அப்போதே நாங்கள் வெளிச் சென்றிருக்கவேண்டும். அம்மா தயங்கினாள். இத்தகைய பெரும் பழியைத் தலையில் சுமக்கத்தானோ என்னவோ! இப்போது மாமா போய்விட்டார். இருந்தும் அவருடைய பாப நிழல்கள் இவ்வீட்டில் உலாவுகின்றன. சமீப நாட்களாக எனக்கு இவ்வீட்டில் இருப்பது சிறைவாசத்தைவிடக் கடினமானதாக இருக்கிறது. மாமா மாரடைத்து இறந்த கோரக்காட்சி என் கண் முன்னாலேயே இருக்கிறது. நான் அதை மறந்துவிட விரும்புகிறேன். அம்மா இன்னும் கொஞ்ச நாட்கள் இங்கு இருந்தாளானால் அவளும் திருமயிலாடி சுடுகாட்டுக்குப் போகவேண்டியதுதான். அவள் மனமே அவளைச் சாவைநோக்கி விரட்டிக்கொண்டிருக்கிறது. அவளுக்கு இடமாறுதலும் துயரை மறக்கும் சூழ்நிலையும் வேண்டியிருக்கிறது. நாங்கள் வெளியே போய்விட்டால் உன் துணைக்கு யாரேனும் வந்துசேர்வார்கள். பழுத்த மரம் வௌவாலை 'வா!' என்று அழைப்பதில்லை. உன் கையில் பணம் இருக்கிறது என்று தெரிந்தாலே உனக்குத் தெரியாமல் மூலைமுடுக்கில் இருப்போரும் உறவு கொண்டாடிக்கொண்டு வந்துவிடுவார்கள். ஆகவே தனியாக இருக்கவேண்டுமே என்று பயப்படவேண்டாம்!" என்றாள் லீலா.

அவள் மன அந்தரங்கத்தில் எத்தனையோ எண்ணங்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. பார்வதியிடம் அவைகளைச் சொல்லவேண்டுமென்று அவள் நினைத்தாள். அவள் முன்போல் உதாசீனமாக இருந்தால் அவ்வெண்ணங்களைப் பொழிந்திருப்பாள். பார்வதியின் மனம் மாறியபிறகு அவைகளுக்கு அவசியமில்லை என்று எண்ணி அடக்கிக் கொண்டாள்.

"லீலா! என் மனம் எவ்வளவு தூரம் மாறியிருக்கிறது என்பதை நீ அறியமாட்டாய். அவர் இருந்த வரையில் பூதங் காப்பதுபோல் பணத்தைக் காத்துவந்தார். உறவினர் எவரையும் அருகே நெருங்க விடவில்லை. நானும் அதற்கு உடந்தையாகவே இருந்தேன். இப்போது அதை நினைக்கும்போது எனக்கு வெட்கமாய் இருக்கிறது. அப்போது, 'நமக்கு நிரந்தர உதவியாக இருப்பது பணம்தான்; அது இருந்துவிட்டால் எதையும் பெறலாம்!' என எண்ணியிருந்தேன். அது தவறு என்று இப்போது எனக்குப் படுகிறது. பணம் பெரிதல்ல, அன்புதான் பெரிது. அன்பு செய்வதாலும் செய்யப்படுவதாலும் எழும் இன்பமே பணத்தைவிட உயர்ந்தது! என்பது இப்போது எனக்குப் புலனாய் விட்டது. பணத்தின் மீது ஆசை வைத்திருந்த பொழுது எனக்கு இவ் வெண்ணமெல்லாம் உண்டாகவில்லை. பணம் விஷம் போன்றது; அதுவே மரணத்திற்குக் காரணமானது. அதைத் துச்சமாக எண்ணினால் சிட்டுக் குருவியைப் போல் கவலையின்றி நீண்ட நாள் வாழலாம். பணமே இன்பத்தின் ஊற்று என்று அதையே நாடி அலைந்தால் விட்டிலைப் போல் மடிந்து போக வேண்டியதுதான்.— உன் மாமாவின் மரணம் இதைத்தான் எனக்கு உணர்த்தியது. ஆகையால் பணம் படைத்த கர்வத்துடன் உங்களை என்னுடன் இருக்கச் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம்! இனி என் வாழ்வில் என்ன இருக்கிறது? பிறர் சந்தோஷமாக வாழ உதவி, அதனால் அவர்கள் இன்பம் காணும் போது அதைக் கண்டு மகிழ்ந்தால் அதுவே பெரிது. போனதெல்லாம் மறந்துவிடு லீலா!..."—லீலாவைத் தன் அருகில் அழைத்து உட்காரவைத்து அவள் தலையைச் சீர்படுத்திக் கொண்டே– "என்னை உங்களில் ஒருத்தியாகவே எண்ணிக்கொள்! பிரித்துப் பேசாதே! தனிமையில் விட்டுப் போக நினைக்காதே!" என்று பரிவுடன் சொன்னாள்.

கிராமப் பள்ளிக் கூடத்தில் படித்து, ராமாயணம், பாகவதம், மஹா பாரதம் இவைகளையன்றி வேறு ஒன்றும் படித்தறியாத பார்வதி அனுபவ தத்துவத்தைப் பேசக்கண்டு லீலா ஆச்சர்யப்பட்டாள். துயரத்தால் எழுந்த இந்த மன



மாறுதல் நீடித்திருக்குமா? இது நிலையாக ஏற்பட்டு விட்டதா? இனி மாறாதா?—எப்படியிருந்த போதிலும் அவள் தன் தீர்மானத்தை மாற்ற விரும்பவில்லை.

"அத்தை! உனக்குத் தங்கமான குணம் உண்டாகிவிட்டது! ஆனால் அண்ணா சிறையுள் வாடுவது என் கண் முன்னாலேயே இருக்கிறது. நேற்று இரவு ஒரு பயங்கரக் கனவு கண்டேன். ஆ! என்ன கோரம்? சஞ்சலித்துள்ள உன்னிடம் அக் கனவைச் சொல்லி மேலும் மனதைக் குழப்ப விரும்பவில்லை. இன்ஷியூரன்ஸ் பணம் கொடுப்பதாக எழுதியிருக்கிறார்கள். அதைப் பெற்று முதலில் அண்ணாவை விடுதலை செய்துவிட்டுத்தான் மறு வேலை! கோபித்துக்கொள்ளாதே அத்தை! போய், கடிதம் எழுதுகிறேன்!'' என்றாள், லீலா.

மழை மேகங்கள் சூழ்ந்து நிற்பதைப்போல் பார்வதியின் கண்களில் நீர் மல்கித் ததும்பிக் கொண்டிருந்தது.

அத்: 36. கூவம் காற்று

எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கியவுடன்தான் எங்கேபோய், தங்குவது? என்ற பிரச்னை எழுந்தது. உறவினர் ஒருவர் பெயரைச் சொல்லி அங்கே போய், கொஞ்சநாள் இருந்தால் பின்பு சௌகர்யம்போல் செய்துகொள்ளலாம் என்று தன் அபிப்பிராயத்தைச் சொன்னாள், பங்கஜம்மாள். லீலாவுக்கு இது பிடிக்கவில்லை. நிலை தவறிய பின்பு உறவினர் வீட்டுக்குப் போவதால் மனக் கஷ்டந்தான் விளையும் என எண்ணினாள், அவள். உடன் பிறந்த சகோதரன் அன்பைக் கண்கூடாகக் காணவில்லையா என்ன? சரசுவின் வீட்டுக்குப் போவதெனத் தீர்மானம் செய்தாள், அவள்.

போன ஒரு மாத காலத்திற்குள் எத்தனையோ புரட்சிகரமான மாறுதல்கள் நடந்துவிட்டன; உலக அரங்கிலே எத்தனையோ சம்பவங்கள் நடந்துமுடிந்தன. ஆனால் லீலா திரும்பி, சென்னை வந்தபொழுதும் டிராம் வண்டிகள் கட்டைவண்டிகளைப்போலத்தான் இருந்தன: அவளுக்கு அறிமுகமான அதே டிரைவர் நாராயணசாமி! முக க்ஷவரம் செய்துகொண்டு பல மாதங்களாகிய அதே முகம்! பட்டை பட்டையான அதே நாமம்!

எப்பொழுதும் போல்தான் ஜன சமுத்திரம் அலை அலையாக எழுந்து புரண்டுகொண்டிருந்தது. அதே அவசரம்! ஓட்டம்! பதட்டம்! பரபரப்பு!

திருமயிலாடியில் லீலா கண்டதற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்?

வயலை உழுவதற்குச் சென்றவன் தெம்மாங்கு பாடிக்கொண்டு சாவதானமாகச் சென்றான். மணிலாப்பயிருக்குக் களை எடுக்கச்சென்ற பெண்கள் சிரித்து விளையாடி அன்ன நடை போட்டனர். நாற்றுநட்ட பெண்கள் தங்கள் பாட்டில் மெய் மறந்து அனாயாசமாக வேலை செய்தனர். கிராம மணியக்காரர் நாள் முழுவதும் தன் மாமாவுடன் சீட்டாடிக்கொண்டிருந்தார். கிராமத் தபால்காரன்கூடத் தன்முன் தென்பட்டவர்களுடனெல்லாம் பேசிக்கொண்டு நிதானமாக நடந்துசென்றான். அவன் முகத்தில் எப்போதும் ஒரு அமைதியும் கனிவும் இருந்தது.

திருமயிலாடிக்குப் போன புதிதில் இதெல்லாம் லீலாவுக்குப் புதுமையாக இருந்தன. கிராமத்தில் யாருக்கும் சரிவர வேலை கிடையாதுபோல் இருக்கிறது. காடாறுமாதம் நாடாறுமாதம் ஆண்ட விக்ரமாதித்தனைப்போல் ஆறு மாதம் உழவுவேலை செய்தபின்பு மறு ஆறு மாதம்வரை வீண்பொழுது போக்குவதுதான் வழக்கம் போலும் என எண்ணினாள். ஆனால் நாளாவட்டத்தில் அது சரியல்ல என்று அவளுக்குப்பட்டது. நிலச் சொந்தக்காரர்களைத்தவிர உழைக்கும் பாட்டாளிகளுக்கு வருஷம் முழுவதும் செய்ய வேலையிருந்தது. இல்லாவிட்டால் அவர்களால் வாழ்வை நடத்தமுடியாது. மாமாவின் பண்ணையாள் பரமசிவம் நாள் ஓய்ந்தாலும் அவன் ஓய்வதில்லை. இருந்தும் அவன் செயல்களில் பரபரப்பு ஒன்றும் இருப்பதில்லை. பேச்சிலோ நடையிலோ அவசரம் காணப்படுவதில்லை. பாடிப்பறந்து சாவதானமாகச் சுற்றித் திரிந்து தேனுள்ள மலருள் புகுந்து இருந்து தேனுண்டு திரும்பும் தேனீக்களைப்போல் கிராமத்து ஜனங்கள் வேலை செய்வதை அவள் கண்டாள்.

கிராம ஜனங்கள் இப்படி இருக்கும்போது பட்டணத்தில் வசிக்கும் பணக்கார வர்க்கத்தினருக்கும் மாணவ மாணவிகளுக்கும் வேலை வாங்குவோருக்கும் வேலை செய்பவருக்கும் ஏன் இவ்வளவு அவசரம்? காலே தரையில் பாவாமல் வாகனங்களிலேயே சென்றபொழுதுங்கூட ஏன் இவ்வளவு பதட்டம்?

சென்னையில் வசித்தவரையில் லீலாவுக்கு இது குறையாகப் படவில்லை. எல்லோருக்கும் முக்ய மான காரியங்கள் இருப்பதாக எண்ணினாள்.

ஆனால் இப்போது இது வெறும் அவலம் என்று தோன்றியது. சினிமாவுக்குப் போக அவசரம்! நாடகத்திற்குப் போக ஓட்டம்! சங்கீதக் கச்சேரிக்குப் போகப் பரபரப்பு! டாக்டரிடம் ஊசி போட்டுக் கொள்ளப் போக அர்ஜன்ட்—தங்களுக்குத் தாங்களே விலங்கிட்டுக் கொண்டு அவதிப் படுகின்றனரா பட்டண வாசிகள்? இவர்கள் படித்த படிப்பு இதற்குத்தான் பயன் படுகிறதா? இவர்கள்தான் எதிர்கால உலகுக்கு வழி கோலுபவர்களா? இவர்கள் வாழும் வாழ்வுதான் நாகரிக வாழ்வுப் பாதையா?

மறுபடியும் திருமயிலாடிக்கே போகவேண்டும்; நுரைத்துச் சுழித்து தவழ்ந்து ஓடும் அரசலாற்றைப்போன்ற அமைதியான வாழ்வு வாழவேண்டும்! என்ற ஆசை உண்டாயிற்று, லீலாவுக்கு.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும்
கிளை ஆபீஸ்கள் உள்ளன.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJ*
A great Blood Purifier & Digestive & Potential Tonic.

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.



எமது முதல்தரமான

சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
No. 8/44, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண்கோ., பம்பாய்-4.

இப்படி யெல்லாம் எண்ணிக் கொண்டே மயிலாப்பூர் டிராமில் சென்று கொண்டிருந்தாள், லீலா. கடகடத்து, கிணு கிணுத்து, ஓடிய டிராமின் சப்தமும், ஓயாது ஒலித்த கார்களின் ஹார்ன் சப்தமும், மந்தை மந்தையாகச் சாடிய மனிதர்களின் பேராரவாரச் சப்தமும், புடை சூழச் சென்ற அவள் சிந்தையிலே பட்டணத்தைப் பற்றிக் கசப்பான எண்ணங்களே எழுந்தன. தன் மனதை வேறுசிந்தனையில் செல்லிவிட்டுச் சுற்றுப் புறத்தை மறக்க முயன்று கொண்டிருந்தாள். அதற்குள் சரசு வசித்த மாடி வீட்டுக்குச் செல்ல இறங்க வேண்டிய இடமும் வந்தது.

சரசு குடியிருந்த மாடி வீட்டின் முன் சென்றவுடன் லீலா ஸ்தம்பித்து நின்றாள், 'வாடகைக்கு விடப்படும்!—விவரங்களுக்கு நெ. 175. தம்பு செட்டித்தெருவுக்கு எழுதவும்!' என்று சொல்லிக் கொண்டு ஒரு அட்டை தொங்கியது!

அத்: 37. ஆனந்த நிவாஸ்

பக்கத்தில் குடியிருந்தவர்களை விசாரித்து, சரசு குடிமாறியுள்ள இடத்தின் விலாசத்தைத் தெரிந்து கொண்டாள், லீலா. அடையாறு செல்லும் ரஸ்தாவின் இருமருங்கிலும் புதிது புதிதாகப் பங்களாக்கள் பிறந்துகொண்டிருந்தன. அரசாங்கத்தில் எஞ்ஜினீயராக இருந்து ரிடயர் ஆன ஒருவர் புதியமுறையில் சிக்கனச் செலவில் பங்களாக்கள் கட்டி வாடகைக்கு விட்டுக் கொண்டிருந்தார், அவைகளுள் ஒன்றில் ஆனந்த நிவாஸ் என்னும் பங்களாவுக்கு ஸ்ரீ சபேசன் ஐ. ஸி. எஸ். குடியேறியிருந்தார்.

நாட்டில் நல்லகாலம் வரும்பொழுதும் கெட்ட காலம் வரும் பொழுதும் அரசாங்க மேலாவைத் தாங்கும் தூண்களுக்கு உத்தியோக உயர்வுகள் கிடைப்பதுண்டு. மாகாணம் முழுவதும் மில் துணி போதிய அளவில் கிடைக்காத காலம். அரசாங்கம் கட்டுப்பாடு விதிகளைக் கடுமையாக அமல் நடத்தியது. இதைத் திறம்பட நடத்துவதற்கு அரசாங்க இயந்திரததில புதிய புதிய மாறுதல்கள் செய்யப்பட்டன. சலுகையும் சாதுர்யமும் உள்ளவர்கள் காற்றுள்ள போதே தூற்றிக்கொண்டனர். அத்தகையவர்களில் ஸ்ரீ சபேசன ஒருவர். மாகாண விவசாய போர்டில் இருந்த அவருக்குப் பதவி உயர்வு கிடைத்தது. மாகாண ஜவுளி கண்ட்ரோலராக ஆனார். அதைத்தொடர்ந்து ஆனந்த நிவாஸுக்குக் குடியேறினார்.

லீலா நிவாஸின் முன் வந்த சமயத்தில் சரசு புத்தகங்களைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு கலாசாலைக்குப்புறப்பட்டு வந்தாள். லீலாவைக் கண்டவுடன் புத்தகங்களை லாகவமாகப் புல்தரையில் கிடத்திவிட்டு, ஓடோடியும் வந்து லீலாவைக்கட்டிப் பிடித்துக்கொண்டாள். ரோட்டில் போய்க்கொண்டிருந்த மாணவர்களுள் சிலர் அவர்களையே பார்த்து நிற்பதைக்கண்டவுடன் தான் சரசுவுக்குச் சற்று வெட்கமாகப்போய் விட்டது.

"வா லீலா! உள்ளே வாருங்கள் அம்மா!" என்று அவர்களை அழைத்துக்கொண்டு பங்களாவின் உள்ளே போனாள். ஹாலுக்குள் சென்றதும், "ஒரு நிமிஷம்! இங்கேயே உட்காருங்கள்! இதா வந்து விடுகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே விரைந்தாள்.

சமையற்காரன் அப்பொழுததான் குழாயடியில் காப்பி பலகாரப் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தான். அடுப்பில் பருப்பு உலை நீர் கொதித்துக்கொண்டிருந்தது.

அவனிடம் மறுபடியும் இரண்டுபேருக்குக் காப்பி பலகாரம் தயார்செய் என்று சொன்னால் சிடு சிடுப்பான். மத்தியானச் சாப்பாட்டை அதிக நேரம் கடத்திவிடுவான் என்று லீலாவுக்குத் தெரியும். ஆகவே, "ஏ சாமா! எனக்கு ஒரு உபகாரம் பண்ணுகிறாயா?" என்று இலேசாகப் பேச்சுக் கொடுத்தாள், சரசு.

"என்னம்மா செய்யணும்? சொல்லுங்க!" என்றான், சாமா மிடுக்குடன்.

"முதலில் நீ உன் கையை அலம்பிக்கொள்ள வேண்டும்! பிறகு...... அப்பா சைக்கிளிலே ஹோட்டலுக்குப் போய், இரண்டு பேருக்குக் காணும்படியாய் ஏதாவது பலகாரம் இருந்தால் வாங்கிக்கொண்டு வரவேண்டும்! அதுதான், வேறே மலையைப் புரட்டச் சொல்லல்லே!......" என்று விநயமாகச் சொன்னாள், சரசு.

"ரொம்ப சரி!" என்று சொல்லிக்கொண்டே கையை அலம்பினான் சாமா.

"நல்ல காப்பியாக இரண்டு கப் நீதான் போட்டுத்தரவேண்டும்!"

"அதையும் கிளப்பிலேயே வாங்கி வந்துடறேனே!"

"வேண்டாம்! அது நன்றாக இருக்காது. சாமா கலக்கும் காப்பி அலாதியல்லவா! பருப்புக்கு உலை நீர் கொதிக்கிறது பார்! அதில் பருப்பு மஞ்சள் ஒன்றும் இன்னும் போடவில்லையே நீ! அதில் டிக்காக்ஷனைப் போட்டு முன்பே காய்ச்சி மத்தியான டிபனுக்குன்னு எடுத்து வைச்சிருக்கியே அந்தப் பாலில் கொஞ்சம் விட்டுக்கொண்டால் போகிறது! போ! முதலில் பலகாரங்கள் வாங்கிக்கொண்டு வா! இந்தா பணம்! சீக்கிரமாக வா!" என்று சொல்லிவிட்டு மீண்டும் ஹாலுக்கு வந்தாள்.

கைகளைக் கழுவிக்கொண்டு ஒரு சிறு டிபன் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் சாமா.

19330

மறுபடியும் லீலா ஹாலுக்குள் வந்தாள். 'டங்' கென்று ஒற்றை மணியடித்து ஒன்பதரையைக் காட்டியது கடிகாரம். ஆள் காட்டி விரலைப் பற்களிடையே வைத்துக் கடித்து ஏதோ சிந்தித்தாள், சரசு.

அப்போது, "சரசு! அம்மா எங்கே?" என்று கேட்டாள், பங்கஜம்மாள்.

'வீட்டுக்கு எஜமானியாக உள்ள ஸ்ரீமதி சபேசன் நேரே வந்து தங்களை 'வா!' என்று அழைக்கவில்லையே!' என அவள் மனதில் உறுத்திக்கொண்டே இருந்தது. அழையாத வீட்டுள் நுழைந்த வேண்டாத உறவைப்போல் இங்கு வந்து சேர்ந்தோமா? சரசு நல்லபெண்! ஆனால் அவள் தாய் அவளைப்போல் இருந்தால்தானே!

"அம்மா, தாத்தா வீட்டுக்குப் போயிருக்கிறாள், உங்களுக்குத் தெரியுமே ஸ்ரீரங்கம் தாசில்தாத்தா! அவர் காவேரிக் கரையோரமாக மாந்தோப்பின் நடுவே ஒரு பங்களா கட்டிக்கொண்டு வருகிறார். அந்த இடம் அம்மாவுக்கு ரொம்ப பிடித்திருக்கிறதாம். அங்கே சென்ற நாளாக அவளுக்கு மண்டையிடி வருவதில்லையாம்! இடமாறுதலும் சீதோஷ்ண நிலையும்தான் அதற்குக் காரணமாம். அங்கேயே இன்னும் கொஞ்சநாள் இருந்து டாக்டர் 'பிரிஸ்கிரிப்ஷன்' சாப்பிட்டுவந்தால் மண்டையிடி முழுதும் நீங்கிவிடுமென்று அவள் நினைக்கிறாள்! எங்காவது இருந்துவிட்டுப் போகட்டும். அம்மா இங்கில்லாதது அப்பாவுக்கு ரொம்ப சந்தோஷம். அம்மா இருந்தால் அவளுடைய ஓயாத பேச்சால் அவருக்கு மண்டையிடி வந்துவிடும்! அது இப்போது கிடையாது. தம்இஷ்டப்படி ஹாய்யாக இருக்கிறார். சமையற்காரன் சாமா உள்பட எல்லோருக்கும் சந்தோஷந்தான்! 'உன் உடலைப் பார்த்துக்கொண்டு, மண்டையிடி பூர்ணமாக நின்றவுடன் வந்துசேர்! ஒன்றும் அவசரம் இல்லை!' என்று அப்பா கடிதம் போட்டிருக்கிறார்!" என்று சொல்லிவிட்டுக் கலகலவென்று சிரித்தாள், லீலா.

சரசுவின் சிரிப்புக்குப் பதில் சொல்பவளைப் போல் ஒரு புன்னகை செய்தாள், லீலா. அதைத் தொடர்ந்து ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று இழைந்து வெளியே வந்தது. 'பிழைத்தோம்! ஸ்ரீமதி சபேசன் வாய்க்குத் தப்பினோம்!' என்ற எண்ணத்தின் விளைவால் பெருமூச்சு எழுந்திருக்கவேண்டும்.

சரசுவின் வீட்டிற்கு வருவதற்கு முன்னாலேயே ஸ்ரீமதியின் கேள்விகளுக்குத் தன்னைத் தயார் செய்துகொண்டிருந்தாள், லீலா. அவள் முன்னால் உண்மையை உளறிக்கொட்டுவதைவிட விஷயங்களை மழுப்பி மேற்கொண்டு கேள்விகளுக்கு இடமின்றிச் செய்துவிட வேண்டுமென்று மனதில் உறுதிகொண்டிருந்தாள். ஆனாலும் இப்படி பிறர் குடும்ப விவகாரங்களில் தலையிட்டுத் தோண்டித் துருவி ஆராய விரும்பும் வேறு எவரையும் லீலா கண்டதே இல்லை. சரசுவின் அம்மாவுக்குத்தான் இந்த அலாதியான குணம். இது இவள் ஏக போக உரிமையோ என்னவோ!

அவள் ஊரில் இல்லை என்பதைக் கேள்விப்பட்டதும் லீலாவுக்கு மனதில் உறுத்திக் கொண்டிருந்த வேதனை அகன்றதைப் போல் இருந்தது. இருந்தாலும் சரசு அதை ஈடு செய்து விடுபவளாகவே காணப்பட்டாள். சென்ற ஒரு மாத காலத்திற்குள் அவள் வாய் எவ்வளவு நீண்டு விட்டது!

லீலாவின் சிந்தனையை அதிகம் நீள விடாமல் சரசு தொடர்ந்தாள். "சின்னம்மா! நீங்களே நியாயத்தைச் சொல்லுங்கள்! ஆனாலும் லீலாவுக்கு இத்தனை மறதி கூடாது! ஊருக்குப் போனவள் ஒரு காகிதம் போடவேண்டுமே! நானும் எதிர் பார்த்துப் பார்த்து அலுத்துப்போய் மனதிற்குள்ளேயே திட்டிக் கொண்டிருந்தேன். விலாசம் தெரிந்தால் என் திட்டுகளைக் கடிதத்திலேயே எழுதியிருப்பேன்! அது தெரியாததால் கோபம் இரட்டிப்பு மடங்காய் விட்டது. சிநேகிதிகளிடமெல்லாம் சொல்லி என் ஆத்திரத்தைக் கொட்டி, மனத்தை ஆற்றிக் கொண்டேன்!— ஆமாம்! ஊரில் லீலா என்ன செய்தாள்? நாள் முழுதும் அப்பாவையும் அண்ணாவையும் நினைத்து அழுது கொண்டிருந்தாளா என்ன? அசடு! அழுதிருப்பாள்! இல்லா விட்டால் ரோஜா இதழைப் போல் சிவந்திருக்கும் அவள் முகம் கருமை படரக் காரணம் என்ன?" என்று சொல்லிக் கொண்டே, "ஏண்டி. லீலா! நீ செய்தது சரிதானா? உன் மனமறிந்தே வேண்டுமென்றுதான் மௌனம் சாதித்தாயா?" என்று கேட்டாள்.

"ஏதம்மா! இப்போதே கேஸை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு விட்டாயே! விசாரித்துத் தீர்ப்புக் கூறிவிட்டுத்தான் வயிற்றுக்கு ஏதாவது கொடுப்பாயோ!" என்று கிண்டலாகச் சொன்னாள் லீலா. அவளுக்கு அதிகமாகப் பசியெடுத்தது.

"கோவிச்சுக்காதேடி லீலா! பிசகுதான். சமையற்காரனை அனுப்பியிருக்கிறேன். வாருங்கள் கொல்லைப்பக்கம் போகலாம். முகம் கைகால் கழுவிக்கொள்வதற்குள் சாமா வந்துவிடுவான்!" என்று சொல்லி அவர்களைப் பின் கட்டிற்கு அழைத்துச் சென்றாள், சரசு.

காலையுணவு உண்டபின் லீலா சற்று ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பினாள். மாடியில் இருந்த சரசுவின் அறைக்குள் போய் அங்கிருந்த சுகாஸனத்தில் சாய்ந்தாள். ரயில் பிரயாணத்தின் அலுப்புத்தீர வெந்நீரில் ஸ்நானம்செய்ய ஸ்நான அறைக்குச் சென்றாள், பங்கஜம்மாள். சரசு. சாமாவிடம், அன்று செய்யவேண்டிய சமையலைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தாள்.

உடல் ஓய்வை நாடியபோதிலும் லீலாவின் மனம் அலை பாய்ந்துகொண்டிருந்தது. சுகாஸனத்

தில் அவளுக்கு இருப்புக்கொள்ளவில்லை. எழுந்து சரசுவின் மேஜைமுன் உட்கார்ந்து அங்கிருந்த புத்தகங்களைப் புரட்டினாள். டாக்டரின் உத்தரவுப்படி தாய்ப்பால் மறுக்கப்பட்ட குழந்தை தாயின் மார்பைப் பார்த்து ஏங்குவதுபோல் அடுக்காக இருந்த அந்தப் புத்தகங்களைப் பார்த்து ஏங்கினாள், லீலா. அப்பா இருந்திருந்தால் அவளும் காலேஜில் படித்துக்கொண்டிருப்பாள். அந்தப் புத்தகங்களைப் படித்து அறிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இருக்கும். இப்போது அவளுக்கும் அப்புத்தகங்களுக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. நேர்முக வாழ்விலே, ஏடுகள் சொல்ல இயலாத எண்ணற்ற புதிர்களை அவள் அறிந்து கொள்கிறாள்!

புத்தகத்தை இலேசாகப் புரட்டிக்கொண்டிருந்தபொழுது அதனுள்ளிருந்து ஒரு கடிதம் அவள் முன் விழுந்தது! அதை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள். ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அக்கடிதத்தை மனதிற்குள்ளேயே படித்ததும் லீலா சிரித்தேவிட்டாள். என்ன அசட்டுத்தனம்! நல்ல ஆண்பிள்ளை! பின்னலையும் நடையையும் கண்ணையும்கண்டு காதல் கொண்டுவிட்டானாம்! கடிதம் எழுதுவதற்குத்தான் எவ்வளவு துணிச்சல்! 'காதல்! காதல்! காதல்!' என்று பாரதியை மேற்கோளிடும் இந்த விடபுருஷர்களுக்குக் காதல் என்பது மருட்சியும் காம உணர்ச்சியுந்தான் போலும்! பின்னலையும் மை விழியையும் மதி முகத்தையும் தவிர, உள்ளம், பணத்தையும் பதவியையும் மதிக்காது உண்மை அன்பையே நாடும் பெண்ணுள்ளம் ஒன்று இருக்கிறது என்பது இவர்களுக்குத் தெரியாதா என்ன? எல்லா ஆண்பிள்ளைகளுக்குமே தெரியாதா என்ன? காவலற்ற தோட்டத்தில் புகுந்து காய்த்த மரத்தைச் சுற்றி நின்று காய்களையும் பிஞ்சுகளையும் கல்லாலடித்து உதிர்த்து துவர்ப்பும் புளிப்பும் மலிந்த காய்களைக் குதித்துக் கும்மாளம் போட்டுத் தின்று மகிழும் சிறு பிள்ளைகளின் செயலைப்போல் இருக்கிறதே, இவர்கள் காதல் பேச்சும் கட்டற்ற நடவடிக்கைகளும்!'

லீலாவின் நினைவுத் தொடர்பை துண்டிப்பவள்போல் சரசு அறையுள் நுழைந்தாள்.

"என்ன லீலா! ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறாய் போலிருக்கிறதே! என்ன சமாச்சாரம்? என்னிடந்தான், சொல்லேன்!"

"ஒன்றுமில்லை சரசு! ஷேக்ஸ்பியரைப் புரட்டினேன்; இந்தக் காதல் கடிதம் முன்னே வந்தது! இதுயார்? புதிதாக நம் காலேஜுக்கு வந்து சேர்ந்திருக்கிறானா என்ன?"

சரசுவின் முகம் நாணத்தால் வெளிறியது. ஏதோ ஒரு அந்தரங்கத்தைப் பறிகொடுத்தவள் போல் அவள் மனம் படபடத்தது; கண்கள் துடி துடித்தன.

"உடையார் பாளையம் ஜமீன்தார் மகன்! பணத்தைத் தண்ணீர் போல் செலவழிக்கிறார். உனக்குக் காண்பிக்கிறேன், பார்! என்ன அழகு! என்ன கம்பீரமான தோற்றம்!— இங்கே பார் லீலா! என்னைப் பார்த்துச் சொல்! அவர் தம் கடிதத்தில் எழுதியிருக்கிறபடி நான் அவ்வளவு அழகாகவா இருக்கிறேன்! அவர் என்னை நையாண்டி செய்கிறாரா என்ன?"

லீலா உள்ளூர நகைத்துக்கொண்டாள். "உன் அழகுக்கு என்னகுறைவு! கண்ணாடியில் பார்; ஒளிக்காமல் காட்டுமே! உண்மையில் சற்றே கறுப்பாயிருந்தாலும் நீ நல்ல அழகிதான்!" என்றாள், லீலா.

சரசுவின் முகத்தில் புன்னகை எழுந்தது. லீலாவை அன்புடன் பார்த்தாள். பிறகு "லீலா என்னுடன் வாயேன்! பங்களா முழுக்க என் 'அரேன்ஞ்மெண்ட்'தான்; எப்படி இருக்கிறது! என்று பார்த்துச்சொல்!" என்று சொல்லிக் கொண்டு எழுந்தாள், சரசு. லீலா மௌனமாகப் பின் தொடர்ந்தாள்.

அத்: 38. அவசியமா?

சரசு தரையில் கால் பாவாமல் 'நடந்து' சென்றாள்! லீலாவுக்கு அவளுடைய செயல் குழந்தைச் செயலைப்போல் இருந்தது. மாடியை விட்டு இறங்கியதும் லீலாவின் கைகளைப்பிடித்து அழைத்துக்கொண்டு பங்களாவின் வாயிலுக்கு வந்தாள், சரசு.

"இதோ பார்! லீலா! இந்தப் 'ப்ளாரஸ்ஸண்ட் லேம்ப்', இந்தப் பங்களாவுக்கு வந்தபிறகு நான் போடச்சொன்னேன்! பங்களாவின் சொந்தக்காரர் இலேசில் போடச் சம்மதிக்கவில்லை. ரூபாய் நூற்றைம்பது செலவாகிறது என்று சொன்னார். பணம் நாங்களே கொடுத்துப் போடச்சொன்னோம்! இரவில் எவ்வளவு அழகாய் இருக்கும் தெரியுமா? பங்களாவின் முனனே உள்ள தோட்டம் முழுவதும் நிலவு காய்வதைப்போல் இருக்கும்!



"இதோ பார்! முன் ஹாலுக்கென்றே இந்த 'விஸிட்டர்ஸ்' நாற்காலிகள் வாங்கும்படி அப்பாவிடம் சொன்னேன்! இந்த நாலும் ஸிம்ஸன் கம்பெனியில் வாங்கியவை. 'ஸ்பிரிங் அரேன்ஞ்மெண்ட் எக்ஸலெண்ட்!' உட்கார்ந்தால் எவ்வளவு சுகமாக இருக்குமென்கிறாய்!" என்று சொல்லி ஒன்றின்மேல் தொபுக்கடீரென்று நின்றபடியே விழுந்து உட்கார்ந்தாள். அது அவளைப் பந்தாடுவதுபோல் தூக்கிப்போட்டது. லீலா தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டாள். சரசு மேலே தொடர்ந்தாள்,

"பார்வைக்குப் பஞ்சு மெத்தையைப்போல் இருந்தாலும் இவை பஞ்சாலானவை அல்ல! நல்ல ரப்பர் பைகள்! வேண்டும்போது காற்றடித்துப் போட்டுவிட்டோமானால் அப்படியே கிடக்கும்! ரப்பர் பயர் ப்ரூப்! வாட்டர் ப்ரூப்! ஆல் ஸ்டீல்மேக். அப்பாகூட இதை வாங்குவதற்குத் தயங்கினார். நானும் அம்மாவுந்தான் வாங்கும்படி வற்புறுத்தினோம்! நான்கும் நானூற்று ஐம்பது ரூபாய்தான்! அதிகமில்லை—இந்தப் பங்களாவுக்கு வந்தபிறகுதான் ஹாலில் மாட்டுவதற்கென்றே இந்தப் படங்களை எல்லாம் வாங்கினோம்! எல்லாம் உயர்தர இயற்கைக் காட்சிப் படங்கள், பார்! ஒவ்வொன்றும் அப்படியே நேரில் பார்க்கும் காட்சிகளைப்போல் இருக்கின்றனவல்லவா? படங்களாகவா தோன்றுகின்றன?"

உயர்ந்த படங்கள்தான்; சந்தேகமில்லை! என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்து ஆமோதித்தாள், லீலா.

இதன்பின் சரசு தன் தந்தையின் சொந்த அறையுள் பிரவேசித்தாள். கிழக்கே இருந்த ஜன்னலின் வழியே சூரிய கிரணங்கள் அறையுள் பிரவேசித்து அறை முழுதும் இருந்தவைகளை நன்றாக எடுத்துக்காட்டின. பாதி ஜன்னல் வரையில் கட்டப்பட்டிருந்த பூவேலைப்பாடுள்ள ஜன்னல்துணி காற்றில் இப்படியும் அப்படியும் படபடத்துக்கொண்டிருந்தது.

கருங்காலி மரத்தாலான நான்கு கண்ணாடி பீரோக்கள் இருபுறங்களிலும் இரண்டிரண்டாக வைக்கப்பட்டிருந்தன.

"இந்தப் பீரோவைப் பார், லீலா! இதுதான் லேட்டஸ்ட் பேட்டர்ன்' இதற்குப் பூட்டு சாவி கிடையாது. இடதுபுறத்தில் உள்ள 'பட்டனை' அழுத்தினால் திறந்துகொள்ளும்! பிறகு மூடிவிட்டால் தானே பூட்டிக்கொள்ளும்! எல்லாம் 'ரோஸ்வுட்' பி. ஆர். அண்ட் ஸன்ஸில் வாங்கினோம்! நான்கும் ஆயிரத்து எண்ணூறு ரூபாய்கள்!"

பீரோவுக்குள்ளிருந்த அடுக்கடுக்கான புதிய புத்தகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள், லீலா. இதைக்கண்ட சரசு, "ஆமாம், லீலா! எல்லாம் புத்தம்புதிய புத்தகங்கள். பம்பாய் ஹோம் லைப்ரரி கிளப்பிலிருந்து தருவித்தோம். அத்துடன் சென்னையில் ஆக்ஸ்போர்டு, மாக்மில்லன் கம்பெனியிலிருந்தும்கூட வாங்கினோம்! நான்கு பீரோக்கள் நிறையப் புத்தகங்கள் வைக்க வேண்டியிருந்தது. 'டிராயிங் ரூம்' என்றால் அவைகள் இருந்தால்தான் நாகரிகமாக இருக்கிறது. இதிலெல்லாம் ஆங்கிலப்பண்பாடு தனிதான்! புத்தகங்கள் எல்லாம் ஆயிரம் ரூபாய் ஆயின!"

பிறகு தன் தந்தையின் மேஜைமுன் போய் அதன் வழுவழுப்பை ஸ்பரிசித்தாள், சரசு. தொடர்ந்து, "என்ன வேலைப்பாடு என்கிறாய்! மரத்தை எவ்வளவு வழுவழுப்பாகவும் கண்ணாடி போலவும் செய்து விடுகிறார்கள் பார்த்தாயா? இந்தப்பங்களாவுக்கு வந்த பிறகுதான் இந்த மேஜையும் இந்தச் சுழல் நாற்காலியும் வாங்கினோம்! மேஜையும் நாற்காலியும் மட்டும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய். அவ்வளவுதான்!-

"அப்பாவுக்கு இப்போது வேலைத் தொந்தரவு அதிகம். இரவு பகலாக வேலை செய்கிறார். சொந்தமாகவே ஒரு போர்ட்டபிள் டைப்ரைட்டர் வாங்கிவிட்டார்! இதோ பார்! இது எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தாயா? நான் டைப் அடிக்கக் கற்றுக் கொண்டு வருகிறேன். கொஞ்ச நாட்களில் அப்பாவின் கடிதங்களை நானே டைப் செய்து விடுவேன்!—

"நாங்கள் முன்பிருந்த வீட்டில் டெலிபோன் வசதி கிடையாது. இப்போது எங்கு வேண்டுமானாலும் போன் செய்யலாம்!" என்று சொல்லிக் கொண்டு டெலிபோனைக் காண்பித்தாள், சரசு.—

"ஓ! பார்த்தாயா! லீலா! மறந்தே விட்டேன். காலேஜுக்கு லீவ் என்று சொல்லவே இல்லை. இப்போது போனில் சொல்லி விடுகிறேன்!" என்று நம்பரை டையல் செய்து பேசினாள்.

பிறகு அறையின் ஓர் மூலையில் அழகான ஸ்டாண்டின் மேல் இருந்த ரேடியோவின் வெல்வட் உறையை அப்புறப்படுத்தினாள், சரசு— "பார்த்தாயா, லீலா! இது ஜி. ஈ. ஸி. ஆல் வேவ் ரேடியோ! கர கர சப்தம் கொஞ்சம் கூடக் கிடையாது. கால நிலை எவ்வளவு மோசமாக இருந்த போதிலும் சப்தம் தெளிவாகக் கேட்கும். அப்பா இதைத் தம் ரூமில் வைத்திருக்கிறாரே தவிர அவருக்கு ரேடியோ கேட்பதற்குக் கூட ஓய்வு கிடையாது. நாங்கள் கூடத்தில் வைத்திருக்கும் பீப்பிள்ஸ் ஸெட் தான் உபயோகத்தில் இருக்கிறது!" என்றாள். பிறகு லீலாவை அழைத்துக் கொண்டுபோய், பங்களா முழுவதும் சுற்றிக் காண்பித்தாள். முன்னே உள்ள தோட்டத்தில் வைத்திருந்த செடிகளைப் பற்றிக் கதை கதையாகச் சொன்னாள். விதைகள் வாங்கப்பட்ட பாடும், உரம் போட்டுக் கண்காணித்து வளர்த்த பெருமையும், தோட்டக்காரனின் கவனக்

குறைவும் பூச்சிகள் தோன்றிச் செடிகளை அழிக்கச் செய்த சூழ்ச்சிகளும், அதற்கு எதிராகப் பூச்சிக் கொல்லிகள், உலோக உப்புக்கள் கலந்த திராவகங்கள் தெளித்ததையும், ஆக எல்லா விவரங்களையும் சாங்கோபாங்கமாகச் சொன்னாள் சரசு.

கடைசியாக, "'ஆனந்த நிவாஸ்' என்று பெயர் வைத்தது நான்தான்! உனக்கு இப்பெயர் பிடித்திருக்கிறதா, லீலா?" என்று கேட்டாள்!

"சரியான பெயர்! இவ்வளவு வசதியான பங்களாவில் ஆனந்தம் இல்லாவிட்டால் வேறு எந்தக் குட்டிச் சுவரில் வாஸம் செய்யப் போகிறது?" என்று சொல்லிக் கொண்டு நகைத்தாள், லீலா.

அத்: 39. காணோம்!

சபேசன் செக்ரடேரியட்டிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார். மாலை வெய்யில் மங்கி மேல் வானமும் வெளிறிக் கொண்டிருந்தது. ஜனக் கூட்டம் செறிந்து மொய்த்த மௌண்ட் ரோட் வழியே அவர் கார் சென்று கொண்டிருந்தது. புதிதாக வாங்கிய 'போர்ட்'டில், வெல்வட் உறையிட்ட ரப்பர் ஸீட்டில் களைப்புடன் சாய்ந்திருந்தார், சபேசன். அவர் மனம் இன்னும் ஆபீஸ் கட்டுக்களையே நினைத்துக் கொண்டிருந்தது. அன்று அவருக்கு அசாத்தியமான வேலை.

புது டெல்லியிலிருந்து அவசரமாகச் சில புள்ளி விவரங்களைக் கேட்டிருந்தனர். ஆபீஸிலிருந்த கேஸ் கட்டுக்களை வைத்துக்கொண்டு அவர்கள் கேட்ட முழு விவரங்களையும் கொடுக்கமுடியவில்லை. அவருடைய காரியதரிசி புது டெல்லிக் காரியாலயம் கேட்ட புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில் உள்ள கஷ்டங்களை விவரமாக எடுத்துச்சொன்னார். சபேசன் தம் ஐ. ஸி. எஸ். மூளையை எவ்வளவுதான் குழப்பிக்கொண்ட போதிலும் என்னசெய்வது என்று புலனாகவில்லை.

சரியான புள்ளி விவரங்களைக் கொடுக்கவேண்டுமானால் குறைந்தது இன்னும் ஒரு மாதமேனும் வேண்டும். சென்னை மாகாணத்தில் இருந்த ஒவ்வொரு பருத்தித் துணி மில்களுக்கும் கடிதம் எழுதி, விவரமான பதில் கிடைத்தவுடன்தான் புள்ளி விவரங்களைக் கொடுக்க இயலும். ஆனால் புதுடெல்லி 'மிக அவசரக்' கடிதத்தில் நாளை மறுநாள் பதில் வந்து சேர்ந்துவிட வேண்டுமென்று கண்டிருந்தது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனி இலாக்காவாக இருந்ததால் பழைய கடிதங்களைப் பார்த்துச் சேகரிக்கும் வழக்கத்திற்கும் இடமில்லை!

தம் காரியதரிசியை அழைத்து அந்த நிலையை எப்படிச் சமாளிக்கலாம் என்று யோசனைகேட்டார், சபேசன். அவர் தம் தலையைத் தம் கையிலிருந்த 'ஸ்டார் ஆப் இண்டியா' பென்ஸிலால் ஒருமுறை உறைத்துக்கொண்டார். தம் இடது கையால் மூக்குக் கண்ணாடியை எடுத்து மறுபடியும் போட்டுக்கொண்டார். பிறகு சபேசன் அவர்களைப் பார்த்து, "இந்த மாதிரியான கடிதங்களுக்குப் பதில் கொடுப்பதற்கு அசாத்தியமான தைரியம் வேண்டும். நான் கொடுக்கும் புள்ளி விவரங்களுக்கு நீங்கள் கண்களை மூடிக்கொண்டு கையெழுத்துப் போடுவதாய் இருந்தால் நாளை மாலைக்குள் 'வொர்க்கவுட்' பண்ணிவிடுகிறேன். ஆனால் ஆதாரங்கள் ஒன்றும் இருக்காது. புள்ளி விவரங்கள் எப்படிக் கிடைத்தன? என்றால், துணிமில்களுக்கு நேர்முகமான பரிசீலனைக்குச் சென்றபொழுது அனுபவத்தில் அறிந்துகொண்டவைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது என்று நீங்கள் சொல்லவேண்டும்!" என்றார்.

சபேசனுக்கு இது ஒன்றும் பெரிய காரியமாகப் படவில்லை. இந்தப் பதவிக்கு வருவதற்குள் இதை விடப் பெரும் பெரும் மலையான பொய்களை அநாயாசமாகச் சொல்லியிருக்கிறார், அவர். ஆனால் இந்தப் புதிய காரியதரிசியின்மீது இன்னும் அவருக்கு முழு நம்பிக்கை ஏற்படவில்லை. அவர்மீது முன்னமே பலவித புகார்கள் இருந்தது அவருக்குத் தெரியும். ஆனால் மிகவும் நேர்மையுள்ளவரைப்போல் நடந்துகொள்ள விரும்பினார். காரியதரிசி எங்கே தம்மைக் கவிழ்த்துவிடுவாரோ என்ற பயம் உள்ளூர இருந்தது.

சற்றுநேரம் யோசிப்பவரைப்போல் இருந்துவிட்டு, ""சரி! வேறு என்ன செய்வது? நிலைமை அப்படிப்பட்டதாக இருக்கிறது. 'குக்' பண்ணி வையுங்கள்! நாளைக்கே பதில் அனுப்பிவிடுவோம்!" என்று சொல்லி அந்தப் பேப்பரை அவர் கையிலேயே கொடுத்துவிட்டார்.

அதன் பிறகு வழக்கம்போல் கையெழுத்திட வேண்டிய பல பேப்பர்கள் இருந்தன. அவைகளைப் படித்துப்பார்த்துக் கையெழுத்துப் போடுவதற்குள் அவருக்குத் தலைவலியே வந்துவிட்டது. புதிய பதவி இவ்வளவு நெருக்கடியாக இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. நாளுக்குநாள் வேலை அதிகரித்துக்கொண்டே வந்தது. அத்துடன் மாகாணம் முழுதும் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது!

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, அன்று அவர் மனதிலே பெரும்போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. தாம் செய்தது சரியான காரியந்தான் என்று மனச்சாட்சிக்கு எடுத்துச் சொல்லி அமைதி அடைய முயன்றதில் அவர் மனோ சக்தி அதிகமாக விரயமாய்விட்டது.

அவர் உத்தியோகம் ஏற்றதிலிருந்து எத்தனையோ முறை லஞ்சம் பெற்றிருக்கிறார். அப்போதெல்லாம் அவருக்கு இத்தகைய மனக்குலைவு ஏற்பட்டது கிடையாது.

ஆனால் அன்று பையுள் கனத்த ஐயாயிரம் ரூபாய் அவர் மனதை அலக்கழிக்கப்போதிய காரணங்கள் இருப்பதாக அவருக்குப்பட்டது.

கோயமுத்தூர் பஞ்சாலை முதலாளி ஒருவர், தம் மில்லிலிருந்து சர்க்கார் கோரியுள்ள சப்ளை விகிதத்தைப் பாதியாகக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கோரி மனுக் கொடுத்திருந்தார். அந்த மனுவைக் கண்ட்ரோலர் சமுகத்திலேயே நேரே சமர்ப்பித்துவிட்டு அந்தப் பணத்தையும் காணிக்கையாக்கினார்!

புதுப் பங்களாவுக்குக் குடிபோனபோது பட்ட கடன்களின் ஞாபகம் எப்போதும் மனதில் உறுத்திக்கொண்டே இருந்த சபேசனுக்குக் கடவுளே தம்மீது கருணை கூர்ந்து அனுப்பிய பணம் அது என்று எண்ணத் தோன்றியது; வாங்கிக்கொண்டார், தம்மால் ஆகக்கூடியதைச் செய்வதாக வாக்களித்தார். வைர மோதிரங்கள் டால் வீச, ஒரு நமஸ்காரமும் வெற்றிப் புன்னகையும் செய்துவிட்டு, தமது சில்க் உடைகள் பளபளக்க வெளியேறினார், மில் முதலாளி. அதைத் தொடர்ந்து ஒரு அவரோகண ஸ்வரம் பாடிவிட்டு மறைந்தது அவர் 'ரோல்ஸ் ராய்ஸ்'.

இத்தகைய உத்தியோகப்பரபரப்பில் பத்திரிகை கூடப்படிக்காதது அப்போதுதான் அவர் ஞாபகத்திற்கு வந்தது. தம் வீட்டின் பக்கத்தில் ஆபீஸ் காகிதக் கட்டுகளுக்குமேல் இருந்த பத்திரிகையை எடுத்துப் புரட்டினார். செய்திகளின் மேல் தலைப்புக்களை மட்டுமே படித்துக்கொண்டே வந்த அவருக்கு ஒரு தலைப்பைக் கண்டதும் மேலே படிக்க வேண்டும்போல் மனம் ஓடிற்று.

'காலஞ் சென்ற ஜில்லா ஜட்ஜ் சாம்பசிவத்தின் மகன்!

'பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பியோடி விட்டான்!'

'போலீஸார் புலன் விசாரிக்கின்றனர்!'

என்ற தலைப்புகளுடன் அவரால் நிற்க முடியவில்லை செய்தியை மேலே ஊன்றிப் படித்தார் :-

மேற்படி கைதி மூன்றுமாத தண்டனை விதிக்கப்பட்டு, அபராதம் செலுத்த மறுத்து, சிறை சென்றது நேயர்களுக்கு ஞாபகம் இருக்குமென எண்ணுகிறோம். அவருக்குக் கொஞ்ச நாட்களாகச்சித்த சுவாதீனம் இல்லாமல் இருந்ததென்றும், அதற்காக அவரைச் சிறையிலிருந்து விடுவித்து அரசாங்கப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்கொண்டுபோய் வைத்திருந்தார்கள் என்றும், அங்கிருந்து அவர் தப்பியோடி விட்டதாயும் அரசாங்க அறிக்கை கூறுகிறது!

செய்தி முழுவதையும் படித்துவிட்டு, சபேசன் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். மேலே பத்திரிகையைப் படிக்க மனம் ஓடாமல் நான்காக மடித்துப் பக்கத்தில் வைத்தார். பெரும் கொட்டாவி ஒன்றுவிட்டு இரு கைகளையும் பின்னி நெட்டி முறித்துக்கொண்டார். பின்பு பாக்கெட்டில் கையைவிட்டு வெள்ளி சிகரெட் கேஸை எடுத்து ஒரு ஸ்பென்ஸர் வர்ஜீனியா சிகார் எடுத்தார். ஸ்பிரிட் விளக்கைச் சுண்டிவிட்டு அதைப் பற்றவைத்துக்கொண்டு புகைக்க ஆரம்பித்தார்.

கார், பங்களாவை நெருங்கிக்கொண்டிருந்ததையும் தம்மை வரவேற்கச் சரசு பங்களாவின் வாயிலிலேயே தயாராக நின்றதையும் தூரத்திலேயே அவர் கண்டார்!

அத்: 40. நல்ல காலம் எப்போது?

அப்போது லீலா சரசுவின் மாடியறையுள் உட்கார்ந்திருந்தாள். படிக்க விரும்பி எடுத்த புத்தகம் விரித்தபடி மேஜையின்மீது கிடந்தது. மாடியின்மீது வீசிய மாலைக்காற்று புத்தக இதழ்களை மலரவிட்டு மருவிக்கொண்டிருந்தது.

லீலாவுக்கு அப்போது இருந்த மனோநிலையில் உலகமே ஒரு பெரும் பாழ்வெளியாகத் தோற்றியது. பட்டணத்தில் சிதறிக்கிடந்த எண்ணற்ற வீடுகள்; புற்றீசல்களைப்போல் திரிந்த மனிதக் கூட்டங்கள்; அவர்களின் கேளிக்கைகள்; யாவுமே வெறும் அர்த்தமற்றதாகத் தோற்றின.

வற்றாத இயற்கை வளத்தையும் படைத்து, சிருஷ்டியின் சிகரமாக மனிதர்களையும் உற்பவித்துவிட்ட சிருஷ்டித் தேவனின் நோக்கந்தான் என்ன?

'வாழ்வாவது மாயம்! மண்ணாவது திண்ணம்!' என்ற பண்டாரப் பாட்டில் அவளுக்கு நம்பிக்கையில்லை.

இயற்கை, சிருஷ்டியின் ஆதி-மூலம், மனிதர்களின் செயலைப்போல் அர்த்தமற்றதல்ல. தான் பெற்றுவளர்த்த குழந்தைகள் சேற்றில்கிடந்து புரளுவதை எந்தத் தாயும் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டாள். உலக ஜீவராசிகள் வீண்போவதைச் சக்தியன்னை சகிக்கமாட்டாள்.

உலக சிருஷ்டியிலே உயர்ந்த நோக்கம் இருக்கிறது. சிருஷ்டி ராசியிலே ஒவ்வொன்றும் தன் கடமையைச் சரிவர செய்துவிட்டு மறைந்துவிடுகின்றன. அரும்பிட்டு, மொட்டாகி, போதாகி மலர்ந்து உதிரும் ரோஜா தன் கடமையை நிறைவேற்றி விடுகிறது. அது பிற தாவர வர்க்கத்தின் உணவைத் திருடுவதில்லை. முல்லை மலர் தன்னைவிட மணம் வீசித் தருக்கிச் சிரிப்பதை அது சட்டை செய்வதில்லை. முட்களிடையே நெளிந்து நிமிர்ந்து நிற்கவேண்டியிருக்கிறதே! என்று அது மனம் குலைவதில்லை. படாடோபமின்றி, சிறுமையின்றி, பெருமிதத்துடன் தலை நிமிர்ந்து தன் பணியைச் செய்துவிட்டு உதிர்ந்துவிடுகிறது, ரோஜா!

மனிதன் ஏன் இப்படி வாழக் கூடாது? போட்டியும். சண்டையும், கோபமும், குதர்க்க

மும், திருட்டும் புரட்டும், அச்சமும் ஆணவமும், வஞ்சகமும் விஷமமும் எதற்காக? இதனால் நன்மை இல்லை என்பதை எத்தனை தலைமுறையாகக் கண்டுவந்துள்ளோம்! அப்படியிருந்தும் மனித குலம் இவ்வியாதிகளிலிருந்து விடுபட இயலாமல், விடுவித்துக் கொள்ள முயலாமல் உழன்று கொண்டிருந்தால் நல்லகாலம் எப்போது வரும்!

மேஜை மீது விரிந்து கிடந்த தத்துவ புத்தகத்தின் ஓரிரு வரிகள் லீலாவை அப்படியெல்லாம் நினைக்கத் தூண்டின.

அத்துடன் அவள் அன்று மத்தியானம் பெரிய ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருந்தாள். இன்ஷியூரன்ஸ் பணம் கொடுப்பதற்காக வரவழைத்த கம்பெனிக் காரியாலயத்தில் கையை விரித்து விட்டார்கள். சிவஞானத்தின் கடன்காரருள் ஒருவர் அவர் இன்யூரன்ஸ் பாலிஸியின் மீது தாவா போட்டிருப்பதாகவும் அதில் சில முக்கியமான சட்ட நுணுக்கங்கள் ஆராயப்பட்டுத் தீர்ப்பாக வேண்டியிருப்பதாகவும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தள்ளுபடியாகும் வரை பணத்தைப்பட்டுவாடா செய்வதற்கில்லை என்றும் கம்பெனியின் கிளை மானேஜர் வெகு உருக்கமாக லீலாவிடம் சொன்னார்.

"அதுவும் அப்படியா?" என்று முணுமுணுத்துக் கொண்டு லீலா இலேசாகத் தன்னுள் சிரித்துக் கொண்டாள். 'வாழ விரும்புபவரை உலக நியதி வரவேற்பது இப்படித்தானா?' என்று அவள் மனம் எண்ணிற்று!

அத்: 41. இந்த அப்பாக்கள்!

லீலா இன்ஷியூரன்ஸ் கம்பெனியிலிருந்து ஆனந்த நிவாஸுக்குத் திரும்பும் போது மாலை நான்குமணியிருக்கும். சரசு அப்போது தான் மத்தியான உறக்கத்திலிருந்து எழுந்து முகத்தை அலம்பிக் கொண்டு வேறு உடை உடுத்து, தன்னை அலங்கரித்துக்கொள்ள முனைந்திருந்தாள். சாமா காப்பி தயாரிப்பதின் வாசனை சமையல் உள்ளிலிருந்து எழுந்து வந்தது. சரசு தனக்குப் பிடித்தமான சினிமாப் பாட்டுக்களின் முதலடிகளைப் பாடிகொண்டு தன்னைத்தானே நிலைக் கண்ணுடியின் முன் நின்று அழகு பார்த்து மகிழ்வதில் ஈடுபட்டிருந்தாள்,

சரசுவுக்குப் ஒரு பெரிய மனக்குறை எப்போதும் உண்டு. அம்மாவைப்போல் சிகப்பாக இல்லாமல் அப்பாவைப்போல் கறுப்பாகப் பிறப்பானேன்? தான் மட்டும் சிவப்பாகப் பிறந்திருந்தால் அவளுடன் அழகில் யார் போட்டியிட முடியும்? லீலா கூட அப்பொழுது தன்னை அழகி என்று சொல்லிக்கொள்ள முடியுமா?

சரசுவுக்குப் பதினெட்டு வயது முடிந்திருந்தது. கவலையற்ற சுக வாழ்விலே அவள் அங்கங்கள் இரண்டு தத்தம் தனிச் சோபையோடு நகை செய்தன. சபேசனின் கம்பீரத் தோற்றம் சரசுவுக்கு உண்டு. அம்மாவின் குணம் சரசுவுக்குப் பிடிக்காமல் இருந்தபோதிலும் அவள் அழகு தனக்கு இல்லாமல் போய்விட்டதே! அப்பாவின் குணமும் அம்மாவின் அழகும் தனக்கு வாய்த்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! என்று கூட லீலா நினைத்ததுண்டு.

பங்களாவின் உள் நுழைந்து சரசுவைக் கண்டதும் தன் முகத்தைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள முயன்றாள். லீலா.

"என்ன லீலா! காரியம் முடிந்துவிட்டதா?" என்றாள், சரசு.

"இல்லையம்மா! நாம் நினைக்கிறபடியெல்லாம் காரியங்கள் முடிந்தால் நம் கால்கள் நிலத்தில் பாவுமா என்ன? — ஆமாம்! நீ எங்கே போகப் போகிறாய்? பலமாக உடுத்திக்கொள்கிறாயே?" என்று பேச்சைத் திருப்பினாள், லீலா.

"எங்கே போகலாம்? நீதான் சொல்லேன்! மாலை வேளையில் வீட்டுள் முடங்கிக் கிடக்க எனக்குப் பிடிப்பதே இல்லை!"

"ஆபீஸிலிருந்து அப்பா வருவாரே! அவரைச் சமையல்காரன் தயவில் விட்டுவிட்டு நீ ஹாய்யாகப் போய்விடுவதற்கு எண்ணுகிறாயா என்ன?" நீ இருந்து அவரை உபசரித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இதைக்கூடச் செய்யாமல் நாம் பெண் என்று பிறந்து அவர் சம்பாதனையை வாரி இறைப்பது எதற்காகவாம்?"

"ஆமாம்! நீ சொல்வதும் சரிதான். கொஞ்ச நாட்களாக அப்பா ஆபிஸிலிருந்து வரும்பொழுது ரொம்பக் களைத்துத்தான் வருகிறார். சாமா தன் வேலையுண்டு என்று இருந்துவிடுகிறான். அவரும் தம் ஆபீஸ் நினைவாகவே ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு பாக்கட் பாக்கெட்டாகச் சிகரட்டைப் புகைத்துத் தள்ளிக்கொண்டு உட்கார்ந்து விடுகிறார்!......என் லீலா! உங்கப்பாகூட இப்படித்தான் இருப்பாரா? அல்லது எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் இருப்பாரா?"

"அது அன்றன்று ஆபீஸில் நடக்கும் காரியங்களைப் பொறுத்தது. அம்மா, அப்பா சந்தோஷமாயிருந்தால் கோர்ட்டில் அன்று ஒரு தகராறும் இல்லை என்றும், சற்று முகம் வாடியிருந்தாரானால் அன்று நடந்தவை சிக்கலான வழக்குகள்; வக்கீல்கள் சரியான முறையில் வாதாடவில்லை!' என்று இப்படி ஏதேனும் சொல்வாள். எப்படி இருந்தபோதிலும் வீட்டுக்கு வந்து காப்பி சாப்பிட்டு விட்ட சற்று நேரத்திற்கெல்லாம் சாந்த சமநிலைக்கு வந்துவிடுவார்; சந்தோஷமாகப் பேச ஆரம்பித்துவிடுவார்!"

"அனேகமாக இந்த அப்பாவும் அப்படியேதான். எதற்கும் அப்பா எந்த மனோநிலையில் வருகிறார் என்று பார்த்துக்கொண்டு நாம்

வெளியே போகலாம்! நீ உன் டிரஸ்ஸை கழற்றி விடாதே. என் அறையுள் இரு. இன்னும் கொஞ்ச நேரத்தில் அங்கு வந்துவிடுகிறேன்!'' என்று சொல்லிவிட்டுப் போனாள், சரசு.

'வந்த காரியம் கைகூடாத பிறகு சரசுவின் வீட்டில் எத்தனைநாள் இருப்பது?' என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தது. 'மீண்டும் திருமயிலாடிக்கே போய்விடலாமா? இன்ஷியூர் கம்பெனிக்காரர்கள் சொல்வதைப் பார்த்தால் சமீபத்தில் பணம் கைக்குக் கிடைக்கும்போல் தோன்றவில்லையே! என்ன செய்வது? எங்கே போவது? ????' லீலாவின் மனதில் விவரிக்க முடியாத குழப்பம் உண்டாயிற்று.

சரசு சொல்லிவிட்டுப் போன கொஞ்ச நேரம் நீண்டு கொண்டே போயிற்று. மணி ஆறுக்கு மேலே கூட ஆகி விட்டது. மனதை விடுவிக்கத் தத்துவ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள், லீலா.

அப்போது அசாதாரணப் படபடப்புடன் சரசு அறையுள் நுழைந்தாள். அவள் கையில் அன்றைய ஆங்கில தினசரிப் பத்திரிகை இருந்தது. அதைக் கையில் வைத்துக்கொண்டே சரசு லீலாவை ஊடுருவிப் பார்த்தாள். சொல்லலாமா? வேண்டாமா? எப்படிச் சொல்வது? என்றெல்லாம் யோசிப்பவளைப் போல் சரசு தயங்கினாள். எப்படியிருந்தாலும் லீலா சமாச்சாரத்தைத் தெரிந்து கொண்டுதானே ஆக வேண்டும்! என்ற நினைவுடன், "லீலா; பேப்பரில் இந்தச் சமாச்சாரத்தைப் பார்த்தாயா? அப்பா இப்போதுதான் என்னிடம் காண்பித்தார்;'' என்று சொல்லி, கணபதியின் செய்தியைச் சுட்டிக் காட்டி, பேப்பரை லீலாவிடம் கொடுத்தாள், சரசு.

லீலா செய்தித் தலைப்பைப் பார்த்தாள். அச்சாகியிருந்த ஒவ்வொரு சிறு எழுத்தும் பிரமாண்டமானதாக அவளுக்குப் பட்டது. 'அண்ணா! உனக்கா? பைத்தியமா?.........ஐயோ! அண்ணா?' என்று சொல்லிக் கொண்டு விசித்து விசித்து அழத் தொடங்கி விட்டாள். இரண்டொரு முறை ஏதோ பேச வாயெடுத்தும் வார்த்தைகள் அவள் தொண்டையுள்ளேயே சிக்கிக் கொண்டன!

(தொடரும்)

ஏன் உங்கள் குழந்தை நோயுற்றிருந்தது?

உங்கள் குழந்தை நோயுற்றிருப்பதின் மூலகாரணத்தைப் பற்றி நிச்சயமாக புரிந்துக் கொள்ளுங்கள். சிகிச்சைக்கு பிறகும் மறுபடி மறுபடி வருவதும், அல்லது அதற்கு கட்டுப்படாமல் நிலைத்திருப்பதுமான உபத்திரவத்தின் சிறிய அறிகுறிகள் ஈரல், குலை நோயைக் குறிப்பதாயிருக்கலாம். இவைகளை ஒரு டாக்டரால் தடுக்க முடியும்.

பசியின்மை — சோம்பல் — சிடுசிடுப்பு — மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு — வாந்தி — பருத்த அல்லது உஷ்ணமான வயிறு — இலேசான ஜுரம் — சீச இனைப்பு.

ஜம்மியின் லிவர்க்யூர்

பம்பாய் • நாகபூர் • லக்னோ • கல்கத்தா • விஜயவாடா • விஜயநகரம்.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

சுருள் கத்தி, இடுப்பில் உள்ளபோது, ஓர் அடி இருக்கும்; எடுத்து வீசினால், இருபத்துநான்கு அடி நீளும்; வீச்சுஒன்றுக்கு இருபதின்மரை ஒரே அடியில் வெட்டிச் சாய்க்கும்! இருபுறமும் கருக்கு அமைந்த அவ் வாள் ஓர் அதிசய ஆயுதம். பண்பட்டவரே அதனை வாங்கி வீசலாம்; உடைக்குள்ளும் கொண்டுசெல்லலாம்.

சிவகங்கை நகரிலிருந்து நள்ளிரவிலே பரிவீரன் ஒருவன் புறப்பட்டான். அவனுக்கு அச் சுருள் வாள் ஒன்றே உற்றதுணை. அவனது உயிருக்கு ஆயிரம் பூவராகன் விலையாம். அத் தொகையை நாடி, ஒரு பதின்மர் பரபரப்புடன் நான்கு திக்கிலும் சுற்றித் திரிகின்றனர். அன்றியும், அவனது நடமாட்டத்தை அறிந்து உரைக்க, ஒரு நூற்றுவர் பற்பல இடங்களிலும் துருவித் தேடுகின்றனர். இவ்வளவையும் அவ் வீரன் அறிவான்.

தனது உயிரையோ உடலையோ அவன் கவனிக்கவில்லை. ஜமீனைச் சுற்றிப் பார்த்து, உளவு அனைத்தும் கண்டு, பகைவரைப் பழிவாங்குவதே அவன் நோக்கம். அர்த்த ராத்திரி வேளையில் புறப்பட்ட அப் பெருமகன் அயலே உள்ள ஒரு கிராமத்தில் புகுந்தான். பேயும் உறங்கும் நடுநிசி வேளை அது. நடுத்தெருவிலே ஒரு வீட்டின் கதவை அவன் தட்டினான்.

உடனே தாயம்மாள் தாழைத் திறந்து, "அன்ப! புதிய ஜமீன்தார் வந்துவிட்டார். பட்டம் சூட்டிய கும்பினியின் கையாளாக இருக்கிறார். உனது தலைக்கு அவரும் விலை கூறியுள்ளனர். நடப்பு இது," என்று காதோடு நவின்றனள். "நல்லது," என்று அவ்வீரன் கூறித் தனது பரியைத் தட்டிவிட்டான்.

சிறிது தூரம் சென்றதும், வழி நடுவே இருந்த சோலையொன்றில், ஆள் அரவம் கேட்டது. பகைவரின் ஏவலாளரே என்று அவன் கருதிய அளவில், நால்வர் கடுகி வந்து "அரசே! இதோ பாருங்கள். இத் தலைதான் உங்களது தலையின் விலையைப் பெற்று மகிழஎண்ணியது," என்று சொல்லி, நிலத்தில் வீழ்ந்து வணங்கி விடை கொண்டனர். பரிமா பறந்து செல்கின்றது.

காததூரம் கழிந்ததும், இருபதின்மர் எதிரே தோன்றி, அப் பரியை வழி மறித்து, அவ் வீரனை நான்கு புறமும் வளைந்து நின்றனர், "உயிருடன் உன்னைக் கொண்டு

போனால், இரண்டாயிரம் வராகன்! உடலை மட்டும் எடுத்துச்சென்றால், ஓர் ஆயிரமே! எங்களுக்கு எத்தொகை அளிக்க நீ விரும்புகின்றாய்?" என்று அச்சதிகாரர் வினவிய கணத்தில், அவர்கள் அனைவரும் சுருள் வாளுக்கு இரையாகி, நெடு நிலத்தில் சாய்ந்தனர்.

அரண்மனை. சிறுவயல் என்னும் தலை நகரை அவ் வீரன் நண்ணுகையில், ஜாமக் கோழி கூவியது. கிழக்குத் திக்கை அப்பெருமகன் நோக்கினான். தொலை தூரத்திலே தடியடிச் சத்தம் காதில் பட்டது. "மருது பாண்டியரை மடக்கவா வந்தீர்கள்" என்று ஒருவன் கர்ஜித்தான். மற்றவனோ, "ஜமீனை அபகரித்தவனுக்கு ஆயுள் குறுகிவிட்டது," என்று உரக்க உரைத்தான்.

குதிரைமீது வந்த அக்கோமான் கிட்டச் சென்று பார்த்தான். பக்கத்திற்குப் பதின்மர் வீதம் இருபதுபேர் எதிர் எதிரே கையும் தடியுமாக மண்டை பிளந்து மரித்துக் கிடந்தனர். அக்காட்சியினைக்கண்டு, களிப்பும் கலக்கமும் மேலிட்டு, அவ்வீரன் விரைந்தனன். இரு காததூரம் தாண்டியதும் அருணோதயம் ஆயிற்று.

மாயாண்டித்தேவன் என்பான் மனோ வேகமாக வந்து, "மன்னவ! புதிய ஜமீன்தார் தமது ஆட்களுடன் அரசனேந்தல் சேருவார், அதிகாலையில். அங்குள்ள நமது அரண்மனையை வசம் செய்து கொள்ள அவர் எண்ணியுள்ளார். அதோ அவரது ஆட்கள். ஆதலின் என்னுடன் வருக," என்று வினயமாக விளம்பி, அழைத்துச் சென்றான் தனது வீட்டினுக்கு. அங்கே சென்றது தான் தாமதம்.

இருவரும் காலை உணவு கொண்டனர். வந்த வீரன் மாறுவேடத்துடன் அத்தேவனைத் தொடர்ந்தான், அரசனேந்தலுக்கு! இருவரும் அக்கிராமம் குறுகும் முன்னம், வெடிகளின் சத்தமும், வாள்களின் மின்னலும் அவர்களுக்குப் புலன் ஆயின. அவ்வளவில் வந்த வீரன் துள்ளிப் பாய்ந்தான் அக்கிராமத்தை நோக்கி. தேவனும் தொடர்ந்து பாய்ந்தான்.

மாளிகையின் முன்னே மருதின் வீரருக்கும், புதிய ஜமீன்தாரின் ஆட்களுக்கும் கைகலந்த சண்டை நடவாநின்றது. இரு பக்கத்திலும் சிற்சிலர் சிரம் அறுந்து மண்ணைக் கவ்வினர். மாறுவேட மனிதன் அச்சந்தடியில் கலந்துகொண்டான். "உருத் தெரியாமல் அவனை நம் இனத்தார் தாக்குவரோ?" என்று அத் தேவனுக்கு ஐயமும் அச்சமும் ஒருங்கே தோன்றின.

புகுந்த புதிய மனிதனோ தன் சுருள்வாளை உருவின அளவில், எதிரிகளின் தலைகள் கீழே உருண்டன. "ஈதென்ன மாயம்! சூறாவளிக் காற்றில் கனிகள் உதிர்வதுபோல் சிரங்கள் உதிர்ந்து வீழ்கின்றனவே," என்று எண்ணி நடுங்கிய (புதிய ஜமீன்) ஆட்களும் மறுகணத்தில் முண்டமாக நின்றனர்.

"வந்த வேற்று மனிதன் யார்? வீரம் என்பதே வடிவுகொண்டு வந்ததுபோலும்" என்று மருது பாண்டியரின் மெய்த் துணைவர் வியந்து நிற்கையில், அவ் வீரனும் தேவனும் மறைந்துபோயினர். பின்பு தேவனிடம் பிரியா விடைகொண்டு அவ் வீரன் தனது அசுவத்தின்மீது அம் மாறுவேடத்துடனேயே பயணம் ஆயினன்.

பேரறிவு படைத்த அப் புரவியும் தனது வேந்தனைத் தாங்கிய வண்ணம், நாலுகால் பாய்ச்சலில் பறந்தது. வழியிலே கும்பினியின் குதிரை வீரர் சிலர் அப் புதிய மனிதனைக் கண்டதும், ஐயுறவு கொண்டனர்! யார் இவன்? என்று அறிய வேண்டி, அவனைக் கூவி யழைத்தனர். அவனோ திரும்பிப் பாராமல் சென்றனன். அது கண்டு கும்பினி வீரர் கோபம் கொண்டு, அவனைத் துரத்தினர். அது அறிந்தான் பாண்டியன். பரியோ பரிவு மிகுந்து, காற்றினும் கடுகி விரைந்தது.

ஆதலின், கும்பினி வீரர் அவனை அணுக முடியவில்லை. ஆயினும் தொடர்ந்து துரத்துவதை அவர்கள் நிறுத்தவில்லை. அங்ஙனம் நான்கு மைல் தூரம் போனதும், கும்பினியின் காலாளர் சிலர் எதிர்ப்பட்டனர்! தொலைவில் தமது பரிவீரர் அவனைத் துரத்தி வருவதை உணர்ந்தனர்! உடனே அவனை மறித்து நிறுத்த முயன்றனர். அவ்வேளை முன்னும் பின்னும் பகைவர் இருப்பதை உணர்ந்த அப்பரிமா பதைப்பு மிகுந்தது. பார்த்திபனுக்கு யாது நேருமோ, என்றும் கவலை கொண்டது.

அது அறிந்த வீரன் வேறு வகைகாணாது தனது சுருள்வாளை உருவினன். ஒரே வீச்சில் அக்காலாளர் எல்லோரும் பட்டு வீழ்ந்தனர். இதற்குள் அப் பரி வெகு தூரம்போய்விட்டது. துரத்தி வந்த குதிரை வீரர் தமது இனத்தாரின் கதிகண்டு, தமது

உயிர் தப்பியதே என்று கடவுளை வாழ்த்தி, வந்த வழியே திரும்பினர்.

கணத்துக்குக் கணம் ஆபத்து! நிமிஷத்துக்கு நிமிஷம் பகைவரின் தடுப்பு! நாழிகைக்கு நாழிகை எதிரிகளின் சூழ்ச்சி! இவ்வளவையும் அவ் வீரன் சமாளித்துக் கொண்டு விரையலானான். ஒருபக்கம் பசி! ஒருபக்கம் தாகம்! பார்க்கும் இடமெல்லாம் பகைவர் நாடு. எனவே இளைப்பும் களைப்பும் ஆற எங்கும் இடமில்லை. குதிரையும் சோர்ந்து நடக்கிறது. இந் நிலையில் மாலை வேளை புகுந்தது.

காளையார் கோவில் எல்லையை அத் தனி வீரன் நண்ணினான். பசியும் களைப்பும் வந்து, அவனை மூடிக்கொண்டன. உடனே அவனோ பரியின்மீது இருந்தவண்ணம் மயங்கிக் கீழே விழுந்தான். அப் பரிதாப நிலையைக் பார்த்து அப் பரியும் பதைத்து வீழ்ந்தது பூமியிலே. வீரனுக்கும் அப் பரிக்கும் உயிர் உண்டோ, இல்லையோ என்று எவரும் துணிந்து கூற இயலாது.

அந் நிலையிலே, புதிய ஜமீன்தாரின் வீரர்கள் அவ் வழியே வந்தனர். வரும் வழியிலே, கண்டகாட்சி அவர்களின் மனத்தைக் கலக்கியது. தமது இனத்தார் ஆங்காங்கே காலறுந்தும், கையறுந்தும், சிரம்இழந்தும் சிதறிக் கிடந்தனர் பிணமாக. "நமக்கும் இக்கதி தானே நேரும்" என்னும் கவலை அவர்களைப் பிடித்து ஆட்டியது. புலியும் கிலியும் சேர்ந்து வாட்டின.

அவ்வேளையில், சிறிது தூரத்திலே குதிரையும் மனிதனும் குலைந்து கிடப்பதை அவர்கள் நோக்கினர். கிடக்கும் மனிதனை உற்றுநோக்க, அவர்களுக்குத் தைரியம் பிறக்க வில்லை, ஆதலின், வேறொரு திசை நோக்கி ஓட்டம் எடுத்தனர். எடுக்கவே கார் இருள் வந்து சூழ்ந்து கொண்டது. கொண்டதும் மறைவு இடம் ஒன்றை நாடி, அங்கே பதுங்கிக் கொண்டனர். இனி உயிருக்கு அபாயம் இல்லை என்றும் எண்ணினர்.

காட்டிலே வேலை செய்யச் சென்ற கிழவி ஒருத்தி தனது வீடு நோக்கி நடந்தனள். நடக்கையில், அப் பரியையும், மனிதனையும் கண்டனள். இதற்குள் குளிர்ந்த காற்று வீசத் தலைப்பட்டது. அதனால், ஒரு சிறிது களைப்புத் தீர்ந்த அக் குல மகன் சற்றே அசைந்துகொடுத்தான். அதனை அறிந்ததும், உயிர் உளது என்று அக்கிழவி கருதினள். அவனது முகத்தையும் உடலையும் கூர்ந்து நோக்கினள்.

"யாரோ செல்வச் சீமான். களைத்துப்போய்க் கீழே விழுந்து கிடக்கின்றான்!" என்று அவள் எண்ணினள்; களைப்பினுக்குப் பசியே காரணம் என்று கருதினள்; அவ்விடா

மைப் போக்க யாது வழி? என்று சிந்தித்தனள். உடனே தனது நீராகாரக் கலயத்தின் மீது அவள் கவனம் பாய்ந்தது. அதனை அவள் நோக்கவே, தான் பகலில் குடித்து மிஞ்சியிருந்த நீராகாரம் ஒரு கையளவு அதில் இருந்தது.

“இவரோ ஒரு சீமான். அரசராகவும் இருக்கலாம். அங்க அடையாளங்கள் அவ்விதமே காண்கின்றன. எனவே நாம் குடித்து மிகுந்த நீராகாரத்தை இவருக்கு அளிப்பதோ?” என்று அவள் தயங்கினாள். பின்பு, ‘ஏதேனும் ஊட்டினால் அன்றி இவரது உயிர் பிழையாது,” என்று கருதினாள். அயலே நீர்நிலை ஏதேனும் உண்டோ, என்று நாடினாள். நீராகாரத்தினும் சுத்த நீரே சிறந்ததெனக்கொண்டாள். எங்கும் நீர்நிலை தென்படவில்லை.

முடிவிலே, வேறு வகை இல்லாமல், தனது கலயத்தில் இருந்த நீராகாரத்தையே கொடுத்தல் வேண்டும் என்று குறித்தாள். அவ்வளவில் அந்த வீரமகன் தனது உதட்டைச் சற்றே திறந்தான். அது ஒரு சூசகம் என்று நினைத்தவளாய், அவள் பூமியிலே குந்தி, அவனது தலையருகே அமர்ந்து, நீராகாரத்தைச் சொட்டுச் சொட்டாக அவனது வாயில் புகுத்தினள். ஒவ்வொரு சொட்டும் அமுதம்போல் இருந்தது.

கையளவு நீராகாரம் அவனது தொண்டை வழியே வயிற்றுக்குள் சேர்ந்ததும், அவனது களைப்பு அடங்கியது. அவன் ஒரு கனைப்புடன் தனது தலையைத்தூக்கினான்; மெல்ல எழுந்து நிலத்தே உட்கார்ந்தான்; அருகே கிடந்த குதிரையை நோக்கினான்; அதுவும் அவனை ஆர்வமுடன் பார்த்தது. பின்னர் மன்னன் பிழைத்துவிட்டான், என்று மகிழ்ந்து அது தனது உயிரை விட்டது.

பரிவுமிகுந்த பாய்மா ஆவி விடுத்ததைக் கண்டதும், ஐயகோ என்று அவன் அலறினான்; அழுதான்; துடித்தான்; ஜமீனைத் துறந்த அன்றையினும் ஆறாத்துயர் கொண்டான்; உயிர்த்துணையான உயர்பரி அகன்றது அவனை உருக்கிவிட்டது. கிழவி அது கண்டு, “அரசே! அயராதே; இருட்டிவிட்டது. என்னுடன் வா. இரவிலே என் குடிசையில் தங்கியிருந்து, அதிகாலையில் போகலாம்” என்று கனிந்து அழைத்தனள்.

“பாட்டி! உனது நீர் ஆகாரம் எனது உயிரை மீட்டது. உனது கனிவு உரையோ எனக்கு ஊக்கம் ஊட்டுகின்றது. இத்தகைய உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்? ஏதேனும் பிரதி செய்தாலன்றி என் மனம் ஆறாது, என்று அக்குலவீரன் புகன்றான். சுற்று முற்றும் பார்த்தான். முள் ஒன்று அப்பால் கிடந்தது. பனையோலைத் துணுக்கு ஒன்றும் தென்பட்டது.

உடனே அக்கிழவியை நோக்கி; அன்னாய்! உனது பெயர் யாது?” என்று அவன் வினவினான். அதற்கு அவள், “என்னைத் தாயம்மாள் என்பர்” என்றாள் “உண்மையில் நீ தாயம்மாள்தான். தாயின் கருணையை உன்னிடம் கண்டேன். இந்த ஊர் இனி உனக்குச் சொந்தம். இந்த ஓலையை எடுத்துச் சென்று, இந்த ஜமீன் அதிகாரியிடம் காட்டு,” என இசைத்தான்.

அப்பால் அந்த முள்ளைத் தனது கையில் குத்தி, அதிலிருந்து உதிரத்தை எடுத்து, அந்த ஓலையிலே, “இந்த ஊர் தாயம்மாளுக்கு உரியது. இப்படி சின்ன மருது” என்று வரைந்தான். அதனை அவள் கைதனில் கொடுத்து, இரண்டு கரமும் எடுத்துக் கும்பிட்டு, அக் காட்டினூடே காலடி வைத்தான்.

வைத்ததும், அக் கிழவி, “அப்பா! இருட்டி விட்டது எங்கே போவாய்? என் வீட்டுக்கு வா. அன்னம் சமைத்துப் படைக்கிறேன். அப்போதுதான் எனது நெஞ்சம் ஆறும். எனக்கு நிம்மதியும் பிறக்கும். என் வார்த்தையைத் தட்டாதே. என் குடிசைக்கு வந்து போ.” என்று வருந்தி, விரும்பி, வேண்டி அழைத்தாள். அதனை மீறி நடக்க அவன் மனம் ஒப்பவில்லை,

அவ்வாறே அவ்வீரன் அக்கிழவியைத் தொடர்ந்து, அவளது குடிசை சேர்ந்தான். கிழவியும் உள்ளே புகுந்து, சோறு சமைக்க ஆர்வமுடன் முனைந்தாள். இதற்கு இடையில் புதிய ஜமீனது ஆட்கள் அக்கிராமத்தினுள் புகுந்து, “சின்ன மருது இங்கே இருக்கிறாரா” என்று வீடு வீடாக நுழைந்து தேடி வந்தனர். கிழவியின் குடிசையை அவர்கள் அணுகும் சமயம். ஊரிலே தடபுடல் நடப்பதை அவ்வீரன் உற்று அறிந்தான். உடனே விரைந்து எழுந்தான்.

வீடு வீடாகப் பார்த்து வந்த அந்த ஆட்கள் கிழவியின் குடிசைக்கும் வந்தனர். உள்ளே புகும் போது அக்கிழவி வெளியே வந்து, “யார் நீங்கள்? திறந்த வீட்டில் நாய் நுழைவது போல் நுழைகின்றீர்கள், என்ன

கேடுகாலம் இது," என்று அதட்டினாள். அவர்கள் அது கேட்டு அஞ்சி, "அன்னாய்! இங்கே வேற்று மனிதன் யாரோ வந்தானே. எங்கே அவன்?" என்று கடுகடுத்துக் கேட்டனர்.

அவளோ, வேற்றுமனிதனா? என்ன பைத்தியம் உங்களுக்கு?" என்று செப்பிய வண்ணம், இங்குமங்கும் பார்த்தாள். வந்த மனிதனைக் காணவில்லை," கடவுள் என் வயிற்றிலே பாலை வார்த்தார்," என்று தன் மனத்தாடே எண்ணி மகிழ்ந்தாள். தேடிவந்த ஆட்களோ ஒருவரையும் அக்குடிசையில் காணாது, "கிளி பறந்து போய்விட்டது" என்று வருந்திச் சென்றனர்.

"நீர் ஆகாரம் மட்டும் காட்டில் கொடுத்தோம்; வீட்டிலே நேர்மையான அன்னம் படைக்க ஆசை கொண்டோம். அதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லை, இது கிடக்க. தேடிவந்தவர்கள் கையில் என் வீட்டிலே சிக்கியிருந்தால் அப்பாவம் என் தலையில் அன்றோ சுமரும், அப்பழிபாவம் நேராமல் மருதீசன் என்னைக் காத்தான்," என்று அக் கிழவி அகமிக மகிழ்ந்தாள்.

மூன்று நாழிகை முத்து மழை பொழிந்தது என்பார்கள். அவ்விதமே சிவ கங்கை ஜமீனை முன்னம் சிறிது காலம் பெரியமருது, சின்ன மருது என்னும் சோதரர் இருவர் சிறப்பாக, ஆண்டுவந்தனர். அந் நாளில் அவர்கள் அமைத்த ஆலயங்களும், சமைத்த அன்ன சத்திரங்களும, ஆற்றிய திருப்பணிகளும் அனந்தமாம.

தேசாபிமானம் மேலிட்டு அச் சோதரர் ஆங்கிலக் கும்பினியுடன் போராட நேர்ந்தது. அச்சமயத்தில் தான் சின்னமருது பாண்டியர் என்பார் குதிரை மீதேறி நாட்டைச் சுற்றி வேவு பார்த்து வந்தார். அச் சமயத்தில் நேர்ந்த நிகழ்ச்சிகளே அவை. பரிவீரன் அச் சின்ன மருது பாண்டியரே.

கண்மூடும் தறுவாயில் தாம் அளித்த மானியங்களைப் பறிக்காமல் இருத்தல் வேண்டும் என்று அம்மருது கோர, ஆங்கில தளகர்த்தனும் அவ்விதமே தனது உடைவாளைத் தொட்டு, சத்தியம் செய்து கொடுத்தான். அக் கிழவியின் வாரிசான ஒருவன் அந்த ஓலையைக் கண்டெடுத்து அந்த ஊரினை அடைந்தான்.

அந்த ஊர் இப்போது கூழூர் என வழங்கி வருகின்றது. காட்டில் இட்ட கூழ் கூட்டிம செல்வத்தைப் பாருங்கள். ●●●

ரூ. 1000 இனம்

தவறாத தந்திர சாஸ்திரம்

இதைப் பொய் என்று உலகத்தில் எவரும் நிரூபிக்க முடியாது. கீழே காணும் தந்திர ரக்ஷைகளை உபயோகித்து உடனடியான சாதகத்தைப் பெறுங்கள்.

பூரண திருப்தி ஏற்படாவிடின் பணம் வாபஸ் அளிக்கப்படும்.

1. **அன்பு தாயித்து**—நீங்கள் காதலிப்பவரை அடைய உதவும்.
2. **வியாபார தாயித்து** — வியாபாரத்தில் நஷ்டம் அடைந்துவரும் நபர்கள் இதை உபயோகித்தால் உடனடியான சாதகங்கள் அடைய முடியும்.
3. **ஆரோக்ய தாயித்து** — உடல் நலங்குன்றி அவதிப்படுகிறவர்கள் இதை உபயோகித்தால் மூன்றே நாட்களில் குணம் காணலாம்.
4. **வியாஜ்ய தாயித்து** — எதிராளியை வசீகரம் செய்யலாம். வெகு சீக்கிரத்தில் சாதகம் ஏற்படும்.
5. **மாணவர் தாயித்து** — கல்வி பெறுகவும், பரீக்ஷையில் பாஸ் செய்யவும இந்த அற்புத ரக்ஷையை உபயோகியுங்கள்.
6. **தாந்திரிக் கைக்குட்டை** — தாயித்தை முடிந்து பைக்குள் வைத்துக்கொள்ள இது உதவும். ரக்ஷையின் பலனை இம்முறை இரட்டிக்கிறது.

கீழ்கண்ட நற்சாக்ஷிப்பத்திரங்களை பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு
ரூ. 1000 இனம்

Mr. D. S. மொனி, தர்பான், நேடால்.
உங்கள் ரக்ஷை எனக்கு ஆச்சரியமான பலன்களை கொடுக்கின்றது.

Mr. ஷவின்கா சங்கரே, கட்டாக்.
நான் உங்கள் நெ. 1 ரக்ஷையை உபயோகித்ததில் எனக்குப் பூரண திருப்தி அளித்தது.

Mr, கிரெஸ்டி, 1, ஸையின், பெஹரின்.
நான் உங்களுடைய ரக்ஷைகளை உபயோகித்து பலன் பெற்றேன்.

விலை: தாயித்து ஒன்றுக்கு	...	ரூ	2—0—0
6 ரக்ஷைகளும் சேர்ந்து	...	ரூ.	8—0—0
அனுப்பும் செலவு	... ...	ரூ	0—8—0

குறிப்பு:— (i) இந்தியாவிற்கு வெளியே வி. பி. பி. ஆர்டருடன் தொகையும் அனுப்பவேண்டும். தபால் பில்லைகள் கரன்ஸிநோட்டுகள், எந்த நாட்டதும் ஒப்புக்கொள்ளப்படும்.

(ii) எல்லா கடிதப்போக்குகளும் ஆங்கிலத்திலேயே.

Putlighar Mystic Corporation
Putlighar Street. P. B. 27
(8 J) AMRITSAR.



ஜீவித லக்ஷியம்

கே. சுந்தராம்பாள்

இதற்குப்பின் வருஷாந்தரக்கொண்டாட்டம் வந்தது. நிகழ்ச்சிகளில் யாவரும் முழுக் கவனம் செலுத்தினோம். ஒருபெரியாரைத்தலைமைவஹிக்க ஏற்பாடு செய்திருந்தோம். சாதாரணமாக மாணவர்கள் உபாத்தியாயர்களைக் கேலிசெய்யும் சம்பாஷணை ஒன்று எல்லா ஸ்கூலிலும் நடந்துகொண்டிருந்தது. அந்தச்சமயம், பெண்கள் பகுதியில் நிகழ்ச்சிகளை ஹேமாதான் முன்னின்று தயாரித்தாள். கேலி நிகழ்ச்சி தயாரித்திருக்கிறாள் என்பது முதல்நாள்தான் எங்களுக்குத் தெரியும். ஆனால் விஷயம் இன்னது என்று தெரியாது, அதை அறியவும் ஒருவரும் முயற்சிக்கவில்லை. கொண்டாட்டத்தன்று, இரண்டுபெண்கள், இந்த வித்யாலயத்தில் படித்து வெளிவந்து கல்யாணமாகிச் சென்றவர்கள் மறுபடி சந்திக்கும்பொழுது தாங்கள் படித்த பள்ளிக்கூடத்தைப் பற்றி விசாரிப்பதுபோல், கேள்வியும் பதிலும் தயாரித்திருக்கிறார்கள்.

''ஏண்டி நம்ம வாத்தியார் வெங்கடேச் எப்படியிருக்கிறார்?''

"நாராயண ஏரிக்குப் போன பொழுது பர்ஸைத் தொலைத்தார் பாரு. அதற்காக அவரைப் பொக்கிஷ மந்திரியாகப் போடலாமென்று யோஜனை செய்து கொண்டிருக்கிறார்களாம்''

"கணேஷ் வாத்தியார் என்ன செய்கிறார்?"

"வருஷம் ஒரு நாற்காலி ஒடியும்படியாகப் போண்டா சாப்பிட்டு வருகிறார்''

"விச்வநாத்?''

"ஜீவிதலக்ஷியம், கொள்கை என்ற பாட்டை பாடிக்கொண்டிருக்கிறார்.''

"வரதன்?''

"அவரா எப்பொழுதும் போல் மேல் வேஷ்டி ஒரு பக்கம் தரையைப் பெருக்கிக் கொண்டிருப்பதினால் வித்யாலயத்தில் தோட்டியைக் கூட நிறுத்திவிட்டதாகக் கேள்வி''

இதுபோல் இன்னும் பல பேர்களைப் பல விதமாகச் சொல்லிவிட்டு. நம்ம டீச்சர்களெல்லாம் என்ன செய்கிறார்கள் என்ற கேள்விக்கு, அவரவர்கள் போகுமிடங்களுக்குச் சென்று விட்டார்கள்'' என்று முடிந்தது சம்பாஷணை.

வழக்கம்போல் விச்வநாத் இதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

"வெங்கடேசும் வரதனும் சண்டைக்கு ஆயத்தம் செய்துவிட்டார்கள். மானேஜர் இதை அனுமதித்தது தப்பு. எங்களையும் கலந்துகொண்டே ஏற்பாடு செய்திருந்தால் நாங்களும் தயார் செய்திருப்போம். விளையாட்டு என்றால் யாவரையும் சேர்த்திருக்க வேண்டும். பெண்கள் பகுதியில் ஒன்றுமே சொல்ல வில்லை. மேலும் வரதனைத் தோட்டி என்றுதான் சொல்ல வேண்டுமோ, வேறு பதம் கிடைக்கவில்லையோ, பார்: அன்றைக்கே, சூடு கொடுத்திருந்தால் இன்று இவ்வார்த்தை கேட்க நேர்ந்திருக்காது."

இன்று இதற்கு ஏதாவது வழி செய்துதானாக வேண்டும்'' என்றார்கள். வழக்கப்படி விச்வநாத் விட்டுவிடும்படி சொன்னான். அந்தச் சமயம் அவன் இஷ்டப்படி நடப்பதாகச் சொல்லிவிட்டு, பிறகு விச்வநாத் இல்லாத சமயமாகப் பார்த்து ஹேமா முதலிய நாலு உபாத்தினிமார்களை கூப்பிட்டனுப்பி, அவர்கள் செய்கைக்கு மன்னிப்புக் கோரும்படி கேட்டார்கள். "மானேஜர் அனுமதியின்பேரில்தான் செய்தோம். மன்னிப்புக் கோருவது முறையல்ல'' என்றாள் ஹேமா.

"மன்னிப்புக் கோரவில்லையென்றால் எங்கள் சொரூபத்தைக் காண்பித்துவிடுவோம், இதனால் என்னவந்தாலுமே'' என்றான் வரதன்.

"நாங்கள் தவறு என்று நினைத்துச் செய்யவில்லை. தவறு என்று நீங்கள் கருதினால் எங்களை மன்னித்துவிடுங்கள்'' என்றார்கள் மற்ற மூவரும்.

"எதற்காக மன்னிப்பு? நீங்களும் இந்நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கென்ன?'' என்றாள் ஹேமா.

"முன்கூட்டித் தெரிந்திருந்தால் உங்கள் வண்டவாளங்களையெல்லாம் இழுத்துவிட்டிருப்போம்'' என்றான் வெங்கடேச்.

"மானேஜரிடம் சொல்லுங்கள். அவர் சொன்னால் மன்னிப்புக் கோருகிறேன்'' என்றாள் ஹேமா.

"அதெல்லாம் முடியாது. மன்னிப்புக் கோரவில்லையென்றால், தெருவில் போகும்பொழுது பையன்களைவிட்டுக் கலாட்டா பண்ணச்செய்துவிடுவோம். கால் கட்டவிரலில் கல்லையெறிந்துவிட்டு ஜெயிலுக்குப் போகவும் நான் தயார்'' என்றான் வரதன்.

"அதையும் செய்து பாருங்கள். நீங்கள் ஜெயிலுக்குச் சென்றால் நான் ஆஸ்பத்திரிக்குச் செல்லுவேன், அவ்வளவுதானே. மிஸ்டர் வரதன், நமக்குள் அடிக்கடி இவ்விதம் மனஸ்தாபம் ஏற்படுத்திக்கொள்வதினால் லாபம் ஒருவருக்குமில்லை. சாதாரணமாகவே, நிகழ்ச்சிகள் தயாரிக்கும்பொழுது ஒருவருக்கொருவர் கேட்டுச் செய்திருந்தால் இப்பொழுது இந்தப் பிரச்னைக்கே இடமிருந்திருக்காது. நீங்கள் கக்ஷி பேதம்பண்ணி, எங்களை மட்டம்தட்டவேண்டுமென்று நினைத்து, போட்டி மனப்பான்மையில், ஒருவர் செய்வதை மற்றப்பெயர் தெரிந்துகொள்ளக்கூடாது என்று செய்ததின் பலன். சகோதரிகளாகப் பாவித்து நடந்தோமானால் எவ்வளவு நன்மை. பெண்களுக்கென்று தனி உலகம் சிருஷ்டிக்கப்படவில்லை. யுக யுகாந்தரமாக ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் இவ்வுலகத்தில் சகல காரியங்களும் நடைபெறுகின்றன. எந்த இடத்தில் எந்த வேலை பார்த்தாலென்ன? அவரவர் கடமையைஉணர்ந்துகொண்டு நடந்தால் பேசுவதற்கு விஷயமேது? நீங்கள் மானேஜருக்குப் புகார் செய்யுங்கள். அவர் சொற்படி நான் கேட்கத் தயார்.

"சரி அப்படியே செய்யலாம்'' என்றான் வெங்கடேச்.

"வேண்டாம். விஷயத்தை இத்துடன் விட்டுவிடுவோம். திரும்பத் திரும்ப விவகாரம் என்றால் ஸ்கூலின் பெயர் கெட்டுவிடும். "மிஸ். ஹேமா. என் கேள்வியை வாபஸ் செய்துகொள்ளுகிறேன்'' என்றான் வரதன்.

"தாங்க்ஸ்'' என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள் ஹேமா.

என்னடா ஆள் திடீர்னு ஸ்ருதி இறங்கிப் பேசிப்பிட்டானே என்று பார்த்தால் முதல் நாள் ஒரு விவகாரம் நடந்ததின் பலன் என்று தெரிந்தது.

"காதலைப்பற்றிய சர்ச்சை கிளம்பிற்று. ஆணும் பெண்ணும் சேர்ந்து பழகுவதினால்தான் காதல் ஏற்படுகிறது.'' என்றான் ஒருவன்.

காதல் என்பது தெய்வீகமானது. அதனால் பழகினவர்களிடமெல்லாம் காதல் உண்டாகாது என்பது விசுவத்தின் பதில்.

"பணக்காரன் ஒருவனையும், ஏழை ஒருவனையும், ஒரே சமயத்தில் ஒரு பெண் சந்திக்க நேரிடுகிறது. இருவரும் சமமாகப் பழகினார்கள் என்றாலும் குண விசேஷமும் அழகும் எளியவனிடத்துக் காணப்படுகின்றன. பேச்சுப் பழக்கம் எளியவனிடம்தான். ஆனால் அதே சமயம் பணக்காரன் அவளையடைய முயற்சிக்கிறான். வெற்றி யாருக்கு?' என்றான் பரமேசன்.

"உண்மைக் காதலுக்குப் பணம் பிரதானமாகாது.'' என்றான் விசுவம்.

"அது தவறு. பணத்தை வேண்டாமென்று சொல்லும் பெண்கள் நூற்றில் ஐந்து பெயராகத்தான் இருக்கமுடியும். உதாரணமாக, ஹேமாவை எடுத்துக்கொள்ளுவோம். விசுவநாத்தும் அவளுமே கல்யாணம் செய்துகொள்ளப்போகிறார்கள் என்று நினைக்கும்படியாக இருக்கிறது. ஆனால் வரதன் முயற்சி செய்தால் வெற்றிபெற மாட்டான், என்று சொல்ல முடியுமா?'' என்றான் ராமதுரை.

ராமதுரை வரதனுக்கு வலது கை. அதனால் இருவரும் கூடி யோசனை செய்து ஹேமாவைப் பிடிக்க வலை வீசத் தீர்மானித்து விட்டதினால் முன்கூட்டி யோசனை செய்து சண்டையை ஆரம்பிப்பதுபோல் ஆரம்பித்து, நயமாக வாபஸ் பெற்றதின் மர்மம் பின்னால் தெரியவந்தது. விசுவத்தின் பெற்றோர்களுக்கு ஒரு டீச்சரைச் சுற்றிக்கொண்டு திரிகிறான் விசுவநாத். கேலிக்கு இடமளிக்கிறது அவனது நடத்தை என்று கடிதம் எழுதிப் போட்டுவிட்டான் வரதன். மறுநாளே விசுவத்தின் தாயார் வந்துவிட்டாள், நிலைமை கேவலமாகவில்லை என்று அறிந்ததுமே ஒரே வகுப்பாயிருப்பதினால் கல்யாணத்தைப் பேசிவிட

லாம் என்று முடிவு செய்து பெண் கேட்கப்போக, ஒரே வகுப்பாயினும் உட்பிரிவில் வெவ்வேறு வர்க்கமென்றும் வயதில் ஹேமா விசுவத்தைவிட ஆறு மாதம் மூத்தவள் என்றும் தெரியவே, தம்பி என்ன செய்வது, வேறு பெண் பார்க்கிறேன் என்று சொல்லிப் போய்விட்டாள். இதுதான் சமயமென்று வரதன் ஹேமாவைக் கண்டால் மிகக் குழைவாகப் பேசுவது, சிறு சிறு வெகுமதி அனுப்புவது என்று ஆரம்பித்தவன் விசுவத்தின் தாயார் ஊருக்குச் சென்றதும். ஹேமாவிற்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான். தன் பாகத்திற்கு இவ்வளவு பணம், வீடு, இத்தனை நிலம் வருமென்பதை விபரமாக எழுதி. தான் அவளைப் பிள்ளைப் பருவத்திலிருந்தே காதலிப்பதாகவும் அவள் கவனத்தைக் கவரவேண்டியே, சண்டைபோடுவதுபோல் நடித்ததாயும், கல்யாணம் ஆன பின்பும் அவள் வேலைபார்க்க இஷ்டப்பட்டால் தான் தடுக்கப்போவதில்லை யென்றும், அவளை மிக மேன்மையாக நடத்துவதாகவும் மற்றும் அநேக நன்மொழிகளும் ஆசைமொழிகளும் எழுதி, கடிதம் அனுப்பிவிட்டான். ஹேமா அந்தக் கடிதத்தை விச்வநாதிடம் கொடுத்துவிட்டு,

"இதற்கு என்ன பதில் எழுதுவது?" என்று கேட்டிருக்கிறாள்.

அப்பொழுதுதான் விச்வநாத்திற்குப் பணம் பத்துவிதமும்செய்யும்என்றஉண்மை விளங்கிற்று. "உண்மையான காதல் என்றால் தனக்கு இஷ்டமில்லை என்ற பதிலை அனுப்பிவிட்டு, பிறகு இவனிடம் கடிதத்தைக் காண்பித்திருக்கவேண்டும், அப்படியில்லாது போனால்?" சுயமரியாதை தலை தூக்கிற்று.

"உன் மனப்படி பதில் எழுதேன்; நான் என்ன சொல்ல முடியும்?"

"என் மனதிற்கு நன்மை என்று எந்த விஷயம் தோன்றுகிறதோ அப்படியே பதில் எழுதிவிடுகிறேன். உங்களுக்கு அதனால்......"

"யாதொருவிதமான ஆக்ஷேபனையோ வருத்தமோ ஏற்படாது."

இது நடந்த மூன்றாவதுநாள் ஹேமாவினிடமிருந்து விச்வத்திற்குக் கடிதம் வந்தது. எப்பொழுதும்போல் லவ் லெட்டர் என்று ஆனந்தத்தில்தான் பிரித்தான்.

"மிஸ்டர் விச்வநாத்!

நமஸ்காரம்; நான் இப்படி கடிதம் எழுத நேர்ந்ததுபற்றி வருந்துகிறேன். கல்யாணத்திற்குச் சம்மதம் என்று வரதனுக்குப் பதில் எழுதிவிட்-



டேன். தங்களிடம் அன்புகொண்டது உண்மை. உங்கள் குணத்திற்கு அடிமையாயினேன். ஆனால் தாங்கள் சொல்வது எந்நிலையிலும் மனம் ஒரே தன்மையுடையதாக விருந்தால்தானே உண்மையான காதலாகும். உங்கள் தாயார் வந்து நமக்குள் சம்பந்தம் ஏற்படுத்துவது உசிதமல்லவென்று சொன்னதும், தவறான காரியத்தில் பிரவேசித்து அதனால் ஏற்படும் இன்ப துன்பங்களை நாமும் அனுபவித்து, பிறரையும் அனுபவிக்கும்படி செய்வதில் யாருக்கு என்ன பிரயோஜனம்? வறுமையின் துன்பத்தை, அதிலும் செல்வந்தர்களாக வாழ்ந்துவிட்டு, வறுமையின் ஆட்சியில் சிக்குண்டு வாழும் மனிதர்களின் கஷ்டத்தை அதை அனுபவித்தபேர்கள்தான் அறிய முடியும். அதன் கஷ்டத்தை அனுபவித்திருந்தால் காயிஸுக்காக லைலா உயிரைவிட்டிருக்கமாட்டாள். நெருங்கிப் பழகும் தன்மையில் ஒருவிதப் பாசம் ஏற்படுவது சகஜம். காதல் என்ற பெயரும் அதற்கு ஏற்படலாம். அந்தக் காதல் கைகூடச் சூழ்நிலை அநுகூலமளிக்காத நிலைமையிலும், "மனம், காதல்—இல்லை, சாதல்" என்ற மனப்பான்மையிருந்தால் அதுவே பூர்வ ஜன்மத்தின் தொடர்பாக அமைந்த தெய்வீகக் காதலாகும். என் நிலைமை, கொஞ்சகாலம் சுகபோகத்தில் வாழ்ந்துவிட்டு, பிறகு வறுமையின் ஆலிங்கனத்தில் கட்டுண்டு, பிரிக்கமுடியாத துன்பத்தில் உழலும் பொழுது, செல்வம் என்னை விடுதலைசெய்து அதன் ஆட்சிப் பீடத்தில்வைத்து மரியாதை செய்ய அழைக்கும்பொழுது, அழைப்பை மறுக்க என்மனம் இடந்தரவில்லை. ஏற்கவே விரும்பினது. இந்தவிதம் என் மனம் கூறியபடியினால், காதல் என்பதை எப்படி நிரூபணம் செய்யமுடியும்? நாம் எவ்வளவோ தடவை மணிக்கணக்காய்ப் பேசிக்கொண்டிருப்போம். வித்யாஸமான உணர்ச்சி வசப்பட்டு ஒருபொழுதும் பேசியதில்லை. உணர்ச்சி வசமாகும் பலவீனமுள்ள பெண்கள் இல்லையென்று நான் சொல்லவில்லை. உணர்ச்சியை அடக்குவதே பெண்மையின் இயல்பு. பலபல எழுதுவானேன்? காதல் என்ற பதத்திற்காக எதிர்கால வாழ்வைப் பயங்கரமாக்கிக்கொள்ள விரும்பாத நிலையில் இந்த முடிவிற்கே என்னால் வரமுடிந்தது. மன்னித்து விடுங்கள். உங்களுடைய நற்குணத்திற்கேற்ப லக்ஷியநோக்கங்கொண்ட சிறந்த மனைவி கிடைப்பாள். யாவரும், ஏன்? வரதனே வியக்கும் வகையில், தாங்கள் காதல் ஏமாற்றமென்ற மனப்பான்மையைக் காட்டிக்கொள்ளாமல் திருமணத்திற்கு இருந்துவிட்டே உங்கள் ஊருக்குச் செல்லவேண்டும். மறுபடி மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு, தங்கள்
பிரிய சகோதரி
ஹேமவதி

கடிதத்தைப் படித்ததும் அவன்விட்ட நீண்ட மூச்சானது, எதிர்பார்த்த விஷயந்தானே என்பதுபோலிருந்தது. பக்கத்திலிருந்த நான் "என்ன விஷயம்?" என்றேன்.

கடிதத்தைக் கையில் கொடுத்தான். ஆச்சரியம் என்னால் பேச முடியவில்லை. "விச்வம்" என்ற வார்த்தைதான் வெளிவந்தது.

"ஏன் பதறுகிறாய்? அவள்மீது எனக்குச் சற்றும் வருத்தமில்லை. ஆனால் இக் கடித விஷயம் நம்மிருவருள் மட்டும் இருக்கட்டும்" என்று சொன்னாலும், அவன் இதயத்திலிருந்த அடியின் வேதனை முகத்தில் பிரதிபலித்தது.

மறுநாள் வரதனுக்கும் ஹேமாவிற்கும் கல்யாணம் என்ற பேச்சுக் கிளம்பிவிட்டது. எப்படியப்பா மாறினாள், சதாசர்வகாலமும் உன்னுடன் தானே பேசிக்கொண்டிருந்தாள் என்ற நண்பர்களுக்குப் பதில் 'பேசிக்கொண்டிருந்தால் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்ற அர்த்தமா? இந்த மனப்பான்மைதான் நமது சமூகத்தை முன்னேறமுடியாமல் செய்துவிடுகிறது. அன்பு என்பது கடவுளிடத்தும், மக்களிடத்தும், தாய், சகோதரி யாவரிடத்தும் சமமாக ஏற்படுவது. ஆண் பெண் சேர்ந்து பழகினால் காதல் என்பது தான் முடிவா? ஏதோ அன்பாகப் பேசிக்கொண்டிருந்தோம் அதைத் தப்பாக எடுத்துக்கொண்டு கேட்டால் என்ன பதில் சொல்வது?' என்று சமாதானமாகவே பேசி, சர்வசாதாரணமாகவே நடந்துவந்தான்.

வரதன் ஹேமா நிச்சயதார்த்தம் முடிந்தபின்பு ஒருநாள் எங்கள் கோஷ்டியார் சேர்ந்து, ஒரு படம் பார்ப்பதாக ஏற்பாடு செய்திருந்தோம். எதிர்பாராத காரணத்தினால்மூன்று பெயர் வரமுடியவில்லை. ராமதுரை, விச்வம், வெங்கடேச், மூவர் மட்டும் போகும்பொழுது வரதனைத் தேடியிருக்கிறார்கள். அகப்படவில்லை. இவர்கள் மூவரும் படம்பார்த்துவிட்டு வெளியில் வரும்பொழுது வரதன்நிற்பதைக் கண்டதும் "எங்கேயடா போனாய்? உன்னைத் தேடினோமே." என்றான் வெங்கடேச்.

"ஆமாம் நீங்கள் தேடினது உண்மையான விஷயம்தான்" என்றான் வரதன்.

"பின் பொய்யா சொல்கிறேன்?"

"டேய், இந்தப் பசங்களுக்கு இவ்வளவு என்றால் எனக்கு எவ்வளவு இருக்காது? லார்ட் என்ற நினைப்பு அவர்களுக்கு." வரதனின் வார்த்தை பின் தள்ளி நடந்துவந்துகொண்டிருந்த விச்வத்தின் காதில் விழவே, அவன் மனம் வேதனையுற்றது என்றாலும், கேளாதுபோல் தள்ளிவந்துவிட்டான்.

நாங்கள் கூடிப்பேசும் இடத்திற்குச்சோம்பேறி மடம் என்று பெயர் வைத்திருந்தோம். அந்த இடத்திற்கு வேலையிலிருப்பவர், படிப்பவர், சும்மா இருப்பவர் யாவரும் வருவார்கள். வேடிக்கையாகச் சோம்பேறிமடத்துப் பிரசிடெண்ட், அஸிஸ்டெண்ட் காரியதரிசி, பொக்கிஷதார், "மெம்பர்கள்" என்று சிலபெயரைச் சொல்லிக் கூப்பிடுவதும் பழக்கம். அந்த இடத்திற்கு விச்வமும் ராமதுரையும் வந்தார்கள். முதல் நாள் வரதன்

சொன்னது தவறு என்று மடத்தில் கூடியிருந்தவர்கள், விச்வத்தினிடம் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது, வரதனும் வந்துசேர்ந்தான்.

"என்னமோ பிரமாத விஷயம்போல் பேசிக்கொண்டிருக்கிறீர்களே என்ன விஷயம்?" என்ருன் வரதன்.

"எல்லாம் பிரமாதம்தான். நேற்று நீ இவர்களுக்கெல்லாம் இவ்வளவானல் என்ருயே, அது என்ன அர்த்தம்? நீ பணக்காரன்தான்; நாங்கள் ஏழைகள்தான். ஆனல் நாங்கள் உன் வீட்டில் ஒரு வேளைச் சாப்பாட்டிற்குக்கூட உட்காரவில்லையே. பணக்காரனை நீ என்னிடம் கடன் வாங்கிக்கொண்டிருக்கிருயே தவிர, உன்னிடம் என்ருவதுநான் காலணு வாங்கியதுண்டா? ஒன்ருக நாம் ஹோட்டல் செல்லும்பொழுது உன்னிடம் என்ருவது கணக்குச் சொல்லியிருக்கிரேனு? மனிதன் வாழத் தெரிந்து வாழ வேண்டுமே தவிர வார்த்தைகளை அனுவசியமாகச் செலவழிக்கக்கூடாது. போதும் நம்முடைய சினேகம். உள்ளன்பில்லாத பணக்காரச் சிநேகிதம் மனவேதனைதான்" என்ருன் விச்வம்.

"அதிகமாகப் பேசாதே; உன்கடனை இப்பொழுதே தீர்த்துவிடுகிறேன்" என்ருன் வரதன்.

"ஓ! கொடுத்துவிடு; இரண்டு கைகளினுலும் வாங்கிக்கொள்ளுகிறேன். மரியாதை கொடுத்தது போதும்"

"என்ன மரியாதையைக் கண்டுவிட்டாய்? மரியாதை தெரிந்துதான் ஹேமாவிற்குக் கடிதம் எழுதினுயோ? நீ எப்படி எழுதலாம்"

"இதைப்பார்; அனுவசியமாகப் பெண்ணின் பெயரை இவ்விடத்தில் இழுக்காதே சிநேகித முறையில் கடிதம் எழுதுவதுபற்றி நீ என்ன சொல்லுவது?"

"நீ எழுதக்கூடாது"

"இனிமேல் தான் உன் மனைவி. உன் மனைவியான பின்பு எழுதக்கூடாது என்று சொல்லுவதை நான் கேட்கவேண்டியதுதான், அதுவரை."

"அவர்கள் வீட்டில் அதை விரும்பவில்லை. உன்னை இனி வீட்டில் நுழையவிடமாட்டார்கள்?"

"ஏன் அப்படி? இதோ இப்பொழுதே செல்லுகிறேன். என்ன சொல்லுகிருர்கள் பார்ப்போம்? நேற்றுச் சாயங்காலம்கூடச் சென்றிருந்தேன்!"

"நீ போகக்கூடாது நான் சொல்லுகிறேன்"

"தாராளமாகப் போவேன்; நீ என்ன சொல்லுவது?"

"ஹேமா உன் செயலை வெறுக்கிருள்"

"இதைப் பார் வீணுக வார்த்தை வளரும்படி செய்யாதே. இன்றுவரை நடப்பதைச் சொன்னேனுனல் உன் வாழ்க்கையின் கற்பனைக் கோட்டை சிதறித் தவிடுபொடியாகிவிடும்"

"அதைத்தான் சொல்லேன் பார்ப்போம்?"

"நீயானுல் சொல்லிவிடுவாய். நான் அவ்விதம் செய்யத் தயாராக இல்லை, பெண்குலம் போற்றப் படவேண்டியதே தவிர, போட்டியில் இழுத்துவிடுவதல்ல"

இந்த ரீதியில் கொஞ்சம் தர்க்கம் நடந்தது. வரதன் எங்கிருந்தோ பணத்தை வாங்கிவந்து விச்வத்தின் கடனுடன் எங்கள் யாவர் கடனையும் தீர்த்துவிட்டான். வரதன் சென்ற பின்பு,

"என்னப்பா விச்வம்? ஆணும் பெண்ணு சேர்ந்து வேலை செய்வதில் உன் ஜீவிதலக்ஷியம் எப்படி யிருக்கிறது பார்த்தாயா?" என்ருன் ராமதுரை.

"சம்பந்தமில்லாத விஷயத்தில் அனுவசியமாகப் பெண்ணின் பெயர் அடிபட்டது" என்ருன் வெங்கடேச்.

"ஆணும் பெண்ணும் கலந்து பழகியதில் காதல் போட்டி ஏற்பட்டு வெற்றியும் தோல்வியும் விளம்பரமானது, வரதன் தயவினுல்" என்ருன் ராமதுரை.

ஒன்றிற்கும் பதிலளிக்காமல் கண்களை மூடிய வண்ணம் சாய்மான நாற்காலியில் சாய்ந்துவிட்டான் விசுவம்.

நண்பர்களெல்லாம் வரதனைத் திட்டி விசுவம் ஊருக்குப் புறப்படுவதைத் தடுக்கும்படி சொன்ஞர்கள். அதன்படி மறுநாள் அவன் வீடு சென்று தான் ஆத்திரத்தால் மதிமயங்கிப் பேசிவிட்டதாகவும் தன்னை மன்னிக்கும்படியும் கல்யாணத்திற்கு இல்லாமல் போனுல் ஹேமாவிற்கும் தனக்கும் மிக வருத்தமாக இருக்குமென்றும் சொல்லிவிட்டு, "நானும் சொல்லுகிறேன். சற்றுப் பொறுத்து ஹேமாவையும் வரச்சொல்லுகிறேன். நீ போகக்கூடாது" என்று தடுத்து நிறுத்திவிட்டான். பிறகு ஹேமாவின் கண்ணீரானது கல்யாணத்திற்கு இருந்து தம்பதிகளை ஆசீர்வதித்து, வெகுமதியும் கொடுத்துவிட்டுப் பிறகுதான் விசுவம் ஊர்போகும்படி செய்தது. அப்பொழுது சென்றவன் பிறகு திரும்பவில்லை. நாங்களும் அப்படியே பிரிந்து வந்துவிட்டோம் பிறகு இன்றுதான் பார்க்கப்போகிறேம். மாளவி தன் லக்ஷியத்தை மாற்றிக்கொண்டாளா? விசுவன் மாற்றிக்கொண்டானு?! என்பதை அறிந்து கொள்ளவேண்டும்."

"நம் கதையும் முடிந்தது. வித்யாலமும் வந்துவிட்டது" என்ருன் ரகுநாத். வேண்டுமென்றே விச்வத்தின் பார்வையில் படாவண்ணம் உட்கார்ந்

தார்கள். பிரார்த்தனையிலிருந்து, கோலாட்டம், கும்மி, நடனம், தர்க்கம் யாவும் நடந்தன. பிறகு விச்வம் மேடையேறினான். ஸ்ரீனிவாஸன் முதலியவர்கள் என்ன பேசப்போகிறானென்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"சகோதர; சகோதரிகளே!

இவ்வித்யாலயத்தின் தலைவி ஸ்ரீமதி மாளவி தேவியார் ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஒரே இடத்தில் கல்வி கற்பதிலோ, உத்யோகம் செய்வதிலோ, நன்மை அதிகமா, தீமை அதிகமா? என்பதுபற்றிப் பேசும்படி கேட்டுக்கொண்டார். என் சிற்றறிவுக் கெட்டியவரை, அனுபவபூர்வமாகப் பார்த்தவைகளை வைத்துக்கொண்டு சொல்லுகிறேன். குற்றமிருந்தால் மன்னித்து விடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாலப் பருவத்தில் ஒன்றாகச் சேர்ந்து படிப்பதில் தூய அன்பும் சகோதர உணர்ச்சியும் ஏற்படுவது என்பது உண்மை. பெண்களுக்குப் பன்னிரண்டு வயதாகிவிட்டால் பிறகு ஆண்களுடன் சேர்ந்து படிப்பதில் அனேக தொல்லைகள் இருக்கின்றன. நல்ல தைரியமுள்ள பெண்ணாக இருந்தால், ஆண்களின் மத்தியில் அலக்ஷிய மனப்பான்மையில் யாவரும் சற்று அஞ்சும்படி நடப்பாள். அஃதில்லாத பெண்கள், ஒன்றும் சொல்லவும் முடியாமல், விடவும் முடியாமல் திண்டாடித் தவிப்பார்கள். யௌவன காலத்தில் இயற்கையை வெற்றி காண்பது சற்றுக் கடினம். அந்த நிலை இருபாலாருக்கும் சமமான நிலையே என்றாலும் பெண்ணிற்கு அடக்கம் உதவிசெய்கிறது. அப்படியிருந்தும் எவ்வளவோ இடங்களில் விஷயங்கள் தாறுமாறாக நடந்துவிடுகின்றன.

அதனால் எட்டாம் வகுப்புவரையிலும் சேர்ந்து படிக்கலாம். பிறகு பெண்கள்? பெண்கள் பாடசாலையில் படிப்பதே நன்மைதரும். காலேஜ் என்று ஏற்படும்பொழுதுதான் இவ்விஷயம் முக்கியமாகிறது. பெண்கள் காலேஜ்கள் நிறைய ஏற்படுத்தவேண்டும். பெண்கள் காலேஜ் பருவம் தான் சோதனைக்காலமான வயது.

ஒன்றாக உத்யோகம் பார்ப்பதும் இடைஞ்சலான விஷயம்தான். மணமான பெண்கள், முப்பது வயதைத் தாண்டின விதவை இவர்கள் சேர்ந்து வேலைபார்ப்பதினால் தவறு ஏற்பட இடமிருக்காது. எல்லோரும் சமம் என்பது இந்தியப் பண்பாகமுடியாது. விவாகரத்து என்பதைத் தமிழ்ப் பெண்மணிகள் அவ்வளவாக விரும்பாத நிலைமையில் சமபாவம் கொண்டாடுவது சரியாகாது.

இயற்கைக்கு இருபாலாரும் கட்டுப்படுவது என்பது சகஜமானாலும், பெண்தான் காட்டிக் கொடுக்கப்படுகிறாள். ஆண் தப்ப இடமிருக்கிறது. தப்பமுடியாத ருஜுவுடன் காட்சியளிக்கிறாள் பெண். இயற்கையின் நியதி மாறி நடக்குமானால், ஆண் பெண் சமமாகப் பழகுவதில் யாதொருவிதமான தப்பும் இருக்கமுடியாது. ஆனால் அது மலடி மகன் என்பதுபோலத்தான்.

இவ்விஷயங்களை ஆராய்ந்து அறிந்து பெண்களுக்கென்று எல்லா விஷயங்களிலும் தனியாக ஏற்பாடு செய்து நடத்திவருவதுபற்றி ஸ்ரீமதி மாளவிதேவியாருக்குச் சமூகம் நன்றி செலுத்த வேண்டும். கூடியசிக்கிரம் அவர் காலேஜில் பி. ஏ. வகுப்பும் ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன். மேலும் ஆண் பெண் கலந்து பழகுவதைப்பற்றிச் சொல்லிக்கொண்டே போனால் அனுமார் வால்போலாகி, கேட்பவர்களின் பொறுமையைச் சோதிப்பதாகும். இத்துடன் எனது சொற்பொழிவை முடித்துக் கொள்ளுகிறேன்"

"என்னடா! ஆள் அப்படியே இருக்கிறான். ஜீவித லக்ஷியம்தான் அடியுடன் மாறிவிட்டது" என்றான் வெங்கடேச்.

விழா முடிந்ததும், விச்வத்தின் முன் போய் நின்றார்கள் மூவரும்.

"ஹலலோ! ஸ்ரீனிவாஸ், வெங்கடேச்! நீங்கள் இவ்வூரில்தானிருக்கிறீர்களா? இவர் யார்?"

"அந்தநாளில் நாம் இருந்ததுபோல் இப்பொழுது ரகுநாத்" என்றான் ஸ்ரீனிவாஸ்.

"விச்வம், எங்களுடன் வா. சாவகாசமாய்ப் பேசலாம்" என்று சொல்லும்பொழுதே மாளவி தேவி அங்கு வந்ததைப் பார்த்த விச்வம்,

"மாளவிதேவி, இவர்கள் இருவரும் எனது பால்ய நண்பர்கள் ஸ்ரீனிவாஸ், வெங்கடேச். இவர் இவர்களுடைய இவ்வூர் நண்பர் ரகுநாத். ஸ்ரீனிவாஸ், வெங்கடேசு, இவர்தான் வித்யாலயத்தின் தலைவி, மாளவிதேவி." என்றான் விசுவம்.

"நமஸ்தே. நீங்கள், ஏழாம் வகுப்பு சரஸ்வதியின் தந்தைதானே?" என்றாள்.

"ஆமாம்".

"விச்வம், இவ்விடத்தில் எங்கே தங்கியிருக்கிறாய்?"

"இவர்கள் வீட்டிலேயே." என்று மாளவியைக் காட்டினான்.

"அப்படியானால் அவர்களிடம் சொல்லிவிட்டுப் புறப்படு"

"இப்பொழுது இவர்களுடன் சென்றுவிட்டுக் காலையில் வருகிறேன்" என்றான் விச்வம்.

"சாப்பிட்டுவிட்டுப் போகலாமே, அவர்களும் கூடச் சாப்பிடலாம்"

"அவர்கள் நமதுவீட்டில் சாப்பிடச் சந்தர்ப்பம் இருக்கிறது. இப்பொழுது சென்று வருகிறேன்" என்று புறப்பட்டான்.

"ஏண்டா பழி, உன் ஜீவித லக்ஷியம் தலைகீழாய் எப்பொழுது மாறியது? நீ இப்பொழுது எங்கே யிருக்கிருய்? என்ன செய்துகொண்டிருக்கிருய்?'' எனக் கேள்விகளை அடுக்கினுன் வெங்கடேச்,

"அவசரப்படாதே. பதினைந்து வருஷத்து விஷயங்களைச் சட்டெனச் சொல்லிவிடமுடியுமா? வீட்டில்போய் ஆர அமர உட்கார்ந்து பேசுவோம்''

"எது மாறினுலும் அமைதியான பேச்சுமட்டும் மாறவில்லை'' என்ருன் ஸ்ரீனிவாஸ்.

"சரி, இப்பொழுது நாம் யார் வீட்டிற்குப் போகிருேம்'' என்ருன் விச்வம்.

"அகாலத்தில் உங்கள் இருவர் வீட்டிலும் தொந்தரவு கொடுக்கவேண்டாம். என் வீட்டில் யாருமில்லை. நான் சாப்பிடும் ஹோட்டல் மிக நன்ருக இருக்கிறது. மூவரும் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வீட்டிற்கு வரவில்லையென்கிற தகவல் சொல்லிவிட்டு என் வீட்டிலேயே பேசி விட்டுத் தூங்கிவிடலாம்'' என்ருன் ரகுநாத்.

"சரியான யோஜனை. பெண்கலம் கோருகிருர்'' என்ருன் விச்வம்.

"சாப்பிட்டுவந்ததும், ஒருத்தர் புகைபிடிக்க ஆரம்பித்தார், ஒருவர் பொடி டப்பியை உறிஞ்சினுர். ஒருவர் புகையிலையைக் குதப்ப ஆரம்பித்தார். மூவரும் விச்வத்தை வேண்டினுர்கள். "இவையொன்றும் இதுவரை பழகவில்லை. மன்னிக்கவேண்டும்'' என்ருன்.

"அட, அந்த லக்ஷியமட்டும் மாறவில்லை போலிருக்கிறது. சபாஷ், மேலே விஷயத்தைச்சொல்லு''

"அப்படி பிரமாதமான விஷயம் ஒன்றுமில்லை. அந்தச்சமயம் நான் ஊருக்குவந்ததும் ரங்கூன் சென்றிருந்த மாமா வந்துசேர்ந்தார். நான் இண்டருடன் படிப்பை நிறுத்திவிட்டுச் சித்தப்பாவிற்கு உதவி செய்வதற்காக, வாத்தியார் உத்தியோகம் பார்க்கப்போனதற்காகக் கோபித்துக்கொண்டார். தம்முடனேயே, ரங்கூன் வரும்படி அழைத்தார். மனச்சாந்திக்குச் சரியான வழி யென்று கிளம்பிவிட்டேன். அங்கே அவர் பெண் மாளவி என் வயதுடையவள் என்னுடன் பி. எஸ். ஸி.யில் சேர்ந்தாள். இரண்டுபெயரும் பாஸ் செய்தோம். நான், மாமாவின் தொழிற்சாலையில் வேலை பழகிக்கொண்டேன். எம்.எஸ் ஸி. படிக்க ஆரம்பம் செய்தேன்.

அந்தச் சமயம் அவள் படிப்பை நிறுத்திவிட்டு, எங்களிருவருக்கும் மணமுடித்து விடுவது என்ற அபிப்பிராயத்திற்கு வந்தார். மாளவி யாவரிடத்திலும் தாராளமாகப் பேசிப் பழகுவாள். ஆண் பெண் சம உணர்ச்சி அவளிடம் தலைதூக்கி நின்றது. எதற்கெடுத்தாலும் ஆங்கிலேய நாகரிகத்தைக் கொண்டுவந்துவிடுவாள். 'அவர்கள் தாராளமாகப் பழகுவதினுல்தான் ஒருவர் மனதிலும் வித்யாசமான உணர்ச்சி தோன்றுவதில்லை. நாமும் அப்படிச்செய்தால் நம் நாடு முன்னேறும், என்று வாதம் செய்வாள். நமக்கு உதவியாக ஒருவரிருக்கிருர் என்று நினைத்தேன். மாமாவின் அபிப்பிராயத்திற்கு நான் எதிர்ப்பே சொல்லவில்லை. மாளவியைப்பற்றி மனதில் யாதொரு விதமான சலனமும் ஏற்பட்டதில்லை. இப்படியிருக்க ஒரு நாள் சாயங்காலம் என்னறைக்கு வந்தாள் மாளவி.

"மாளவி! என்ன விசேஷம் என்னைத் தேடி வந்துவிட்டாயே! என்றதற்கு.

"விசேஷத்துடன்தான் வந்திருக்கிறேன். அப்பா எனது கல்யாணத்தைப்பற்றிச் சொன்னுர்''

"கல்யாணம் செய்து கொள்ள வேண்டியது தானே?''

"செய்து கொள்ள வேண்டியது தான். அதற்கு உங்களுடைய உதவி தேவையாக இருக்கிறது''

"என்னுடைய உதவி தேவையா? உடனே சொல்லு. என்ன செய்யவேண்டும்?''

"எஸ். எஸ். எல். ஸியிலிருந்து என்னுடன் படித்து வரும் சுகுமார் என்பவரை..............'' என்று நிறுத்தினுள்.

"கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிருய்; இவ்வளவு தானே. அப்பாவிடம் சொன்னுல் உனக்கு மறுப்புக் கூறப்போகிருரா என்ன?''

"அப்படியல்ல. அவர் தந்தைக்கும், என் அப்பாவிற்கும் வியாபார விஷயத்தில் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரவே இல்லை. இன்று நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் கேட்கவில்லை. அவர் சொல்வதையே சொல்கிருர்'' என்ருள். கண்களில் நீர் நிரம்பியது.

விஷயம் விளங்கின பிறகு அவளைக் கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ள முயற்சிக்காமல், "சரி, நானே மாமாவிடம்சொல்லி ஏற்பாடுசெய்கிறேன். நான் ஏற்கனவே ஊரில் ஒரு பெண்ணை நிச்சயம் செய்திருப்பதாகச் சொல்லிவிடுகிறேன்'' என்றேன்.

"இந்த நன்றியை ஒருநாளும் மறக்கமாட்டேன்'' என்று கையெடுத்துக்கும்பிட்டுவிட்டுச் சென்ருள்.

மாமாவிடம் எவ்வளவோ மன்ருடி, "நான் ஊரில் ஒருபெண்ணிற்கு வாக்குக் கொடுத்துவிட்டேன்'' என்று பொய்சொல்லி, அவர் சம்மதம் பெற்றேன். அவளுக்கு ஏற்பட்ட சந்தோஷத்தின் முகமலர்ச்சி இன்றும் கண்முன் நிற்கிறது. அவன் வீட்டிற்கு என்னை அழைத்துப்போ; மற்ற வைகளை ஒழுங்கு செய்துவிடலாமென்று சொன்னதற்கு இரண்டுமாத லீவில் பெற்ருேருடன் இந்தியா சென்றிருப்பதாகவும் தான் கடிதம் எழுதுவதாகவும் சொன்னுள்.

நான்கு நாளைக்கெல்லாம், அவள் அறையில் அழுதுகொண்டு உட்கார்ந்திருந்தாள். விஷயம் என்னவென்று கேட்டதற்கு ஒரு கடிதத்தை என் கையில் கொடுத்தாள். அது சுகுமார் எழுதியது. தகப்பனாரின் அந்தியகால வாக்கை நிறைவேற்ற வேண்டி அவளது உறவினரின் ஒரு பெண்ணை மணந்து விட்டதாகவும், தங்களுடைய சிநேகிதத்தை விளையாட்டைப்போல் நினைத்து மறந்து என்னைக் கல்யாணம் செய்துகொண்டு சுகமாக இருக்கும்படியும், அவள் கல்யாணத்தில் கலந்து கொள்ள தான் பத்துநாளில் ரங்கூன் வரப் போவதாகவும் எழுதியிருந்தான். அந்தச் சமயம் அவள் மன நிலை எப்படி இருக்குமென்பது அறியாத விஷயமா? ''அழாதே மாளவி, தைரியமாகப் பழிவாங்கு'' என்று சமாதானம் சொல்லி வந்தேன். அவள் தந்தை என்னை வேண்டினார். சரியென ஒப்புக் கொண்டேன். அவள் கண்டிப்பாக மறுத்துவிட்டாள். தான் இனி ஆண்



பிள்ளை சகவாசமே ஏற்படுத்திக்கொள்ளப்போவதில்லை யென்றும், இந்தியா சென்று எம். ஏ. பாஸ் செய்து, தனியாகப் பெண்கள் வித்யாலயம் வைத்து நடத்தி, பெண்களை ஆண்கள் வலையில் விழாமல் தடுக்கப் பாடுபடப் போவதாகவும் சொல்லிவிட்டாள். அவள் தந்தையும் வேண்டிய பொருள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். ஏக புத்ரி விஷயம் இப்படியானதினால் மனம் ஒடிந்து நடமாடும் பிரேதமாக வாழ்ந்துவந்தார்.

சுகுமார் மாளவியைப் பார்க்கவந்தான். அந்த நாளில் ஹேமா சொன்ன காரணமே அவனும் சொன்னான். "பெண் உள்ளம் புரிந்துகொள்ளாத பேயன்" என்று திட்டினாள். தன்னால் ஒரு பெண்ணின் வாழ்வு பலியானதை அந்த மடையன் புரிந்துகொள்ளவில்லை. கடைசியாக மாளவி எந்த ஆண்பிள்ளையுடனும் அச்சமின்றிப் பழகி வந்தபடியினால், காதல் என்பதை அவனால் நம்பமுடியவில்லை யென்று சொல்லிச் சென்றான். அதுவே அவள் ஆண் வர்க்கத்தை வெறுக்கக் காரணமாயிற்று. நம் நாட்டுப் பழக்கவழக்கமே சிறந்தது என்ற முடிவிற்குவந்தாள். கூடியமட்டிலும் ஆண்பிள்ளை சகவாசமின்றியே வாழ்க்கை நடத்தி வந்தாள். நான் மட்டும் இரண்டு வருஷத்திற்கொருமுறை அவள் தகப்பனாரின் வேண்டுகோளுக்கிணங்கி, இந்தியா வந்து அவளைப்பார்த்து விட்டுச் செல்லுவேன். என்னிடம் மட்டும் மரியாதையாகவே நடந்து வந்தாள். இப்படி இருவரது லக்ஷியமும் ஜீவிதத்தைப் பாதிக்கும் முறையில் அமைந்தது. கடைசியில் சென்ற மாதம் அவள் தந்தை ஐந்து வருஷத்திற்கப்புறம் பெண்ணைப் பார்க்க இந்தியா வந்தாரே தவிர அவள் ரங்கூன் திக்கே திரும்பிப் பார்ப்பதில்லை.

தகப்பனார் படுத்த படுக்கையானதைப் பார்க்க மகளின் மனம் மாறுதலடைந்ததோ, பச்சாத்தாபம் கொண்டதோ தெரியவில்லை. எட்டு நாள் முன்பு அவள் தந்தையின் வேண்டுகோளுக்கிணங்கி என்னை மணப்பதாக நினைக்க வேண்டாமென்றும், என்னுடைய லக்ஷியம், குணம் எல்லாம் அவளுக்குப் பிடித்துப்போய் விட்டபடியினால்தான் ஒத்துக்கொண்டதாகவும், எனக்குச் சம்மதமானால் தந்தையின் கண் முன்பாகக்கல்யாணத்தை நடத்திவிடலாமென்றும் கடிதம் எழுதினாள். என் மனம் அவளை வெறுக்கவில்லை. அது போரும் என்று சம்மதித்து விட்டேன். என்னை வாக்குக்கொடுத்த பெண்ணை மணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்திய மாமாவிடம் உண்மையை ஒத்துக் கொண்டதுடன், மாளவி விவாகம் செய்து கொண்ட பின்பு நான் செய்து கொள்ளப் போவதாகவும் சொன்னதினால் தப்ப முடிந்தது. சுகுமாரின் செய்கையினால் மாளவியின் வாழ்க்கை சிக்கலானதுமே எனது லக்ஷியம் மாறிவிட்டது. என்றாலும், மாளவியின் விருப்பத்திற்காக இன்று சொற்பொழிவாற்றினேன். இன்று எட்டாம் நாள் வெள்ளிக்கிழமை எங்களுக்குக் கல்யாணம், வித்தியாலயத்தைச் சாவித்ரி தேவியிடம் ஒப்படைத்து விட்டு நாங்கள் மறுபடி ரங்கூன் சென்று ஜீவிதத்தின் லக்ஷியத்தைத் தொடங்கப் போகிறோம்"

"பெண்ணோ, ஆணோ, கடைசிவரை பிரும்மசரியத்தைக் கடைப் பிடித்தார்களென்பது, கட்டாயத்தினாலல்லாது சுயேச்சையாகச் செய்வது என்பது ஆயிரத்திலொன்றுதான் இருக்கமுடியும்" என்றான் வெங்கடேச்.

"சரி, இப்பொழுது அவளுக்கு வயதென்ன?"

"முப்பத்திரண்டு. அவளைவிட நான் மூன்றே நாள்தான் மூத்தவன்."

"கல்யாணம் பஹிரங்கமா? அந்தரங்கமா?" என்றான் ஸ்ரீனிவாஸ்.

"அந்தரங்கமா? லக்ஷாதிபதி.........தொழிற்சாலையின் அதிபர் ராமேசத்தின் ஏக புத்திரியின் கல்யாணம், வயது எவ்வளவானாலென்ன? கவர்னர், மந்திரிகள் விஜயம் செய்ய, அதிவிமரிசையாக ஜில்லா, ஏன் பாரததேசம் முழுவதுமே கொண்டாட நடக்கும். பணமில்லாதவர்களானால் தானே சங்கோஜப்பட வேண்டும். பணம் பதவி படைத்ததல்லவா?" என்றான் ரகுநாத்.

"இவ்வளவு அதிருஷ்டம் உன்னை எதிர்பார்க்க, அன்று நீ ஹேமாவைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால். நீ இருக்குமிடமே யாருக்கும் தெரிந்திருக்காது. அதுதான் எல்லாம் நன்மைக்கே என்று எவ்வித மனக் கஷ்டம் நேர்ந்தாலும் தைரியமாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள் பெரியோர்கள்."

"பழக்க வழக்கத்திற்கு விரோதமான லக்ஷியமெல்லாம் கடைசி வரை நீடித்து நிற்பதில்லை. இது அனுபவபூர்வமான உண்மை" என்றான் வெங்கடேச்.

மணம் முடிந்து விச்வமும் மாளவியும், ரங்கூன் புறப்படும் பொழுது வழியனுப்ப நண்பர்கள் யாவரும் வந்திருந்தார்கள். ஹேமாவும் வரதனும் கூட வந்திருந்தார்கள், ஒவ்வொருவரிடமும் இருவரும் பக்கத்தில் சென்று விடை பெற்ற பின்பு கடைசியாக ஹேமா, வரதன் பக்கமும் போய் விடை பெற்றார்கள்.

"லக்ஷிய மனைவியுடன் உலாவும் வாழ்க்கை வனத்தில் மணமுள்ள லக்ஷிய மலர்கள் உதிரட்டும்" என்று கை குவித்தாள் ஹேமா.

"கொள்கையுடையவனோ, இல்லாதவனோ, யாவருக்கும் மணவாழ்க்கைதான் ஜீவித லக்ஷியமாகிறது" என்று கைகூப்பினான் வரதன். ●



HVM. 141-172 TM

வேசையர்

பர்ல் பக்' (மூலம்)   சுஷீல் கஷ்யப்—மொழி பெயர்ப்பு   தி. சேஷாத்திரி—தழுவல்

சீன தேசத்திலே ஒரு கிராமம்; ஒரு பெரு நகரத்திற்குச் சமீபத்திலே இருந்தது அது. அதில் விங்ஸாஉ என்று சுமார் நாற்பது வயது உடைய பெண்மணி ஒருத்தி இருந்தாள். அவள் சாதாரணமான ஒரு குடியானவனுடைய மனைவி. அவளுக்கு மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் உண்டு. முதல் இரண்டு பிள்ளைகளுக்கும் ஒரு பெண்ணுக்கும் கலியாணம் ஆகிவிட்டது. மற்றொரு பிள்ளையும் பெண்ணும் மிகச் சிறியவர்கள்.

ஓர் இரவு அவள் வயலிலிருந்து முன்னமேயே வந்துவிட்டாள். வந்து சமையல் செய்துகொண்டிருந்தபோது அவள் கணவன் வந்து சேர்ந்தான். அவன் பெயர் லிங்தான். வரும்போதே அவன் "விங்ஸாஉ" என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தான்.

"என்ன திடீர் என்று அப்பாவுக்கு அம்மாமேல் ஆசை வந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே பெரிய பையன் ஏதோ காரணமாய் வெளியேறிவிட்டான்.

விங்ஸாஉவும் அடுப்பிலிருந்த சமையலான குழம்பை இறக்கிக்கொண்டே, 'எதுக்குச் சத்தம் போடுகிறீர்கள்? நான் என்ன செவிடா?, என்று சொந்தமாய் அலுத்துக்கொண்டாள்.

ஆவியிலிருந்து சிவந்த அவள் முகத்தில் ஏறி நின்ற பருவத்தையும் வயதாகியும் கிழமாகாத அவள் நாணத்தின் அடையாளத்தைத் தாங்கி உதட்டுக்குள் இருந்து முறுவலிக்கும் புன்முறுவலையும் ரசித்துக்கொண்டே லிங்தான் 'ஒரு சமாசாரம் அல்லவா சொல்லவந்தேன்!' என்றான்.

கட்டில்மேல் உட்கார்ந்த கணவனைப் பார்த்தாள் மனைவி. 'ஆமாம்! பெரிய சமாசாரம்! கறுப்புக்கோழி இன்றைக்கும் ஒரு முட்டை இட்டிருக்கும்! அதானே!' என்றாள்.

'இல்லைடி! எதற்கும் நாத்துக் கிழவிமாதிரி முந்திமுந்தி ஏதாவது சொல்லி வை. வடக்கே சண்டை வந்திருக்கிறதாம்; அதைச் சொல்லவந்தேன்......!'

இது புது விஷயம். அவள் மூளைக்குள் அதன் நீள அகலமோ பரிணாமமோ புகவில்லை. ஆனாலும் மிகவும் பயங்கரமான ஒரு விஷயம் என்றுமட்டும் அவள் புரிந்துகொண்டாள். அதை அவளுடைய செய்கைகள் தெரிவித்தன. அவள் அடுப்பில் மற்ற எந்தச் சாமானையும் வைக்காமலும் அடுப்பை அணைக்காமலும் கணவனுக்கு எதிரே வந்து நின்றுகொண்டாள்.

'ஆமாம் விங்ஸாஉ!' பலத்த சண்டையாம். எதிரிகளிடம் மிகவும் பலமான புதுப்புது ஆயுதங்கள் இருக்கின்றனவாம்.' பிறகு இருவரும் சற்று நேரம் பேசிக்கொண்டனர். கடைசியாக அதைப் பற்றி நமக்கென்ன! வாருங்கள், எல்லோரும் சாப்பிடலாம்!" என்று விங்ஸாஉ முடித்துவிட்டாள்.

2

காலம் வேகமாகச் சுழன்றது. அதைவிட வேகமாக ஜப்பானியர்கள் முன்னேறினர். அவர்கள் ஆயுதங்கள் கொடுமை புரிந்தன: அதைவிட அவர்கள் புரிந்த கொடுமை கொடுமை எனும் பதத்தின் பதத்தையே அழிப்பதாயிருந்தது. அதெல்லாம் பற்றி விங்ஸாஉ இன்னம் கேள்விப்படவில்லை. ஒரு நாள் அவள் ஏதோ சப்தத்தைக் கேட்டாள். வீட்டில் ஒருவருமே இல்லை. வாசலிலே வந்து நின்றாள். ஒரு பெரிய "வாத்து" — இரும்பு வாத்து— ஆகாயத்திலே பறந்து வந்தது. அவள் திறந்த வாயுடன் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அம்மம்மா! என்ன வேகம்! என்ன சத்தம். அதோ, அதோ, இதோ. குழந்தைகளும் வெளியே வந்து சத்தமிட்டனர்.

அது பறந்து சென்றது, அது என்ன? ஏதோ ஒன்று விழுகிறதே! வாத்து பறந்து கொண்டே முட்டையிடுகிறதா? ஒன்று இரண்டு மூன்று நான்கு......எல்லாம் வயலில் விழுந்தன! ஒரு 'முட்டை' இவளுடைய வயலிலேயே விழுந்தது? அவள் பார்த்தாள். போய்ப் பொறுக்கி எடுக்க வேண்டும். போகட்டும், இந்த 'வாத்து' பறந்து செல்லட்டும்.!

வாத்து மறைந்து விட்டது. ஆனால் இது என்ன? இடியா? இப்படி இடித்துக் கேட்டறியாள் அவள். பூமி வெடித்து விட்டதா? ஆகாயம் விழுந்து விட்டதா? ஆகாயம் எங்கே? பூமி எங்கே? அவள் நிலமே எங்கோ பறந்து செல்கிறதா? ஒன்றுமே புரியவில்லை. மண் பறக்கிறது. இடை

யிலே பறக்கும் மண்ணை இரும்பாகவும் பொன்னாகவும் ஆக்கிக் கொண்டு நெருப்பும் புகையும். மூன்று மைல்களுக்கப்பால் உள்ள நகரத்தில் அல்லவா திப்பற்றி விட்டது. இது என்னடா அதிசயம்!

அன்று இரவு லிங்தான் அவளைக் கூப்பிட்டு ஒன்றும் சொல்ல வில்லை. அவளே அவனைக் கேட்டுப் பல விஷயம் தெரிந்து கொண்டாள். அவள் ஏறிய புருவம் இறங்கவேயில்லை. வெளுத்த முகம் தன் சுயநிறத்தை அடையவே இல்லை.

மனிதர்கள் இப்படியுமா செய்வார்கள்! என்று அவள் அதிசயப்பட்டாள். அப்பாவி! இது மட்டுமா செய்வார்கள்! இன்னமும் செய்வார்களே!

3

ஒரு நாள் கணவனும் மனைவியும் வாசலில் உட்கார்ந்திருந்தனர். வாசலில் ஓடுபவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர், இருவரும்.

'இது என்ன இப்படி ஓடுகிறார்கள், ஆடு மாடு மாதிரி!' என்று கேட்டாள் மனைவி.

'ஆமாம். அதுதான் புரியவில்லை! என்னமோ உலகமே அஸ்தமித்துப் போய் விட்டாற் போல் அல்லவா ஓடுகிறார்கள்............!'

'நீங்க சொல்றீர்கள். அந்த எமன்கள் இருக்க விட்டால் தானே!' அவள் கற்பனையின் பலத்தால் அநேக பயங்கரச் செய்கைகளை அறிந்து வைத்திருந்தாள்.

அதே சமயம் பல மாணவர்கள் அங்கே வந்தனர். அவர்களும் நகரத்திலிருந்து வந்தவர்களே!!

'அதோ பாருங்கள்! எல்லாம் பால் வடியும் முகம். இங்கே கூப்பிடுங்களேன், சாயாவாவது கொடுக்கலாம்!'

அவர்களே வந்தார்கள்.

'ஏன் ஐயா நீங்கள் ஓடவில்லை? போங்கள். எங்கேயாவது ஓடி விடுங்கள். போகும் போது உங்கள் நிலத்தின் பயிரையும் அழித்துவிட்டுப் போங்கள்!' என்றனர்.

லிங்தான் கொஞ்சம் கண்களைக் குறுக்கினான். முகத்தில் உதடுகள் பிரிந்தன, அவர்கள் 'பாபம் இப்பொழுது நாங்கள் சொல்வது பரிகாசமாகத் தான் இருக்கும்!' என்று சொல்லியவாறே நகர்ந்தனர்.

பின்னல் சிலர் வந்தனர். 'ஐயா, பெண்களையாவது எங்கேனும் அனுப்பி விடுங்கள்! என்றனர்.

'என்னடா அசடர்கள் இவர்! பல நாளாய் வளர்ந்த இடத்தை விடுவதாம். கஷ்டப்பட்டு எழுப்பிய பயிரை எரிப்பதாம். மூடர்கள்! யார் ஆண்டால் என்ன? வரியைக் கொடுத்தால் போகிறது!' என்று சொல்லிக் கொணடிருந்தான் லிங்தான். லிங்ஸாஉம் 'ஆம்' என்று சொல்லிக் கொண்டிருந்தாள். இவர்கள் சொன்னது அவர்களுடைய இந்தத் தீர்மானத்தில் இடி விழுந்தது. எதிரிப் பிசாசுகள் பெண்கள் என்ற பெயரால் எதிர்ப்படும் எந்த உருவத்திடமும் ராக்ஷஸர்கள் போல் நடந்து கொள்கிறார்கள்!

லிங்ஸாஉ மூத்த பிள்ளையைக் கூப்பிட்டாள். 'அப்பா, உடனே உன் மனைவி, என் இரண்டாம் மருமகள், குழந்தைகள் எல்லோரையும் அழைத்துச் செல்!' என்றாள். அவள் கண்களில் நீர் மல்கிற்று. தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டது.

லிங்தான் சற்றே கண்களை மூடினான். இரண்டாம் மருமகள் அழகி. இளமங்கை. கருத்தரித்திருந்தாள். 'ஆமாம் அப்பா அழைத்துப் போ!' என்றான் அவனும்.

4

வீட்டில் கணவன் மனைவி; மாப்பிள்ளையின் தாய் மூவருமே தங்கியிருந்தனர். இரண்டு பிள்ளைகளும் பெண்களையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு சென்றிருந்தனர், எங்கோ விட்டு விட்டு வர.

திடீர் என்று ஆரவாரம் எழுந்தது. 'என்ன பேயர்கள் இந்தக் கிராமத்துக்கும் வந்துவிட்டனரா?'

லிங்ஸாஉ பதறினள். 'என்ன, குழந்தைகள் வேகமாகப் போயிருப்பார்களா?'

லிங்தான் யோசிக்க நேரம் தரவில்லை. "லிங்ஸாஉ! உடனே மச்சில் ஏறி ஒளிந்துகொள். சம்பந்தி அம்மாளையும் கூப்பிட்டுக்கொள். உடனே போ. மூச்சு விடாதே!"

லிங்ஸாஉ இந்தச் சந்தர்ப்பத்திலும் சிரித்தாள். சம்பந்தி அம்மாள் மச்சில் ஏற முடியுமா! என்ன சொல்கிறான் கணவன்!

அப்படியானால்?

அப்படியானால் கொல்லையில் அடர்ந்து படர்ந்திருக்கும் திராக்ஷைக் கொடியில் ஒளிந்துகொள்ளட்டும்!

லிங்ஸாஉ ஏறிப் படுத்துக்கொண்டாள் மச்சில். வெளியே சென்ற லிங்தான் சற்று நேரத்திலேயே திரும்பி ஓடிவந்தான் படபடப்பாக. அவனும் ஏறி மச்சில்வந்து அவள் பக்கத்தில் படுத்துக்கொண்

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும்
பிரகாசமாகவும் சலவை செய்கிறது !

S. 143-50 TM

ஸ்தாபிதம் 1920

தந்தி NASYAM, MADRAS.
RAJANCO, ARKONAM.

பல எக்ஸிபிஷன்களில்

தங்க, வெள்ளி மெடல்கள், ஸர்ட்டிபிகேட்டுகள் பரிசு பெற்றது. காரம், மணம், குணம், வாசனை எல்லாவற்றிலும் நிகரற்றது. பல நாட்கள் கெடாமல் நீடித்திருப்பது. இந்தியாவில் பல பாகங்களில் உடனுக்குடன் சப்ளை செய்யப்பட்டு நற்பெயருடன் விளங்கி வருவது

பி. வி. ராஜன் & கம்பெனியாரின்

அசல் பட்டணம் பொடி &
R. S. சுகந்த மூக்குத்தூள்

ஒரு தோலா முதல் எல்லா ரகம் டின்களிலும் பாக்கிங் உண்டு.

விலை விவரங்களுக்கு எழுதவும்

தயாரிப்பவர்கள்:- **பி. வி. ராஜன் & கம்பெனி**

பட்டணம் பொடி & R. S. சுகந்த மூக்குத்தூள், அரக்கோணம் (N. A. Dt.)

மதராஸ் ஆபீஸ்:— 44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

எமடோன்

பச்சிலைகளினால் தயாரிக்கப்பட்ட மருந்து உபயோகிப்பவர் எடையில் 5x10 ராத்தல் அதிகமாகவும், வயதில் 10x15 வருஷ இளமையையும், ரத்த விருத்தி, சிவந்த கன்னங்கள், உடலுக்கு வலு, வீர்யம், மூளைக் குளிர்ச்சி இவைகளை நிரந்தரமாக அடைவர். 24 மணி நேரத்தில் புத்துயிர் பெற்று அபூர்வமான மாறுதல்களையும் குணங்களையும் பெறுவர் உத்தரவாதமானது. பெரிய புட்டி விலை ரூ. 5-0-0, சிறிய புட்டி விலை ரூ. 3-0-0. தபால் செலவு 0-12-0.

BLEACH YOUR SKIN

அமரிக்கா, ஐரோப்பா முதலிய வெளி நாடுகளின் சாஸ்தீரியமான ஆராய்ச்சியின் கண்டுபிடிப்பு நம்முடைய இந்தியநாட்டின் புராதன சாஸ்திரங்கள்தான்.

"ஹேர்க்ரீம்" இதுவரையில் யாராலும் கண்டுபிடிக்கப்படாத ஓர் ஆபூர்வ தயாரிப்பு. கறுப்பாக உள்ள முகத்தின் சருமத்தை வெண்மையாகவும், வழவழுப்பாகவும் மாயமாகச் செய்கிறது. ரம்யமான வாசனையுடன் கூடியது. ஒரு பாட்டில் விலை ரூ. 5-0-0. அரை பாட்டில் விலை ரூ. 3-0-0. தபால் செலவு 0-12-0.

தாமத மாதவிடாய்

மென்ஸொலையன் விலையுயர்ந்த மருந்துகளினால் புது முறையில் தயாரித்தது. நின்றுபோனதும், தாமதமானதுமான எவ்வித மாதவிடாய்க் கோளாறுகளையும் 24 மணிநேரத்தில் தவறுமல் ஒழுங்குபடுத்துகிறது. விலை ரூ. 5—0—0.

மென்ஸொலையன் ஸ்பெஷல் இது மிகவும் சௌகர்யமாக, உடனே மாத விடாயைச் சரியாக்குகின்றது. விலை ரூ. 10—0—0.

எச்சரிக்கை: கர்ப்பிணிகள் இதைக் கண்டிப்பாய் உபயோகிக்கக்கூடாது.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்தான்,

ANGLO AMERICAN MEDICAL STORES, (c. m.) PULL BANGASH, DELHI. 6

டான். அவள் ஏதோ கேட்க ஆசைப்பட்டாள் அவன் அவள் வாயைத் தன் கைகளால் பொத்தி விட்டான்.

அவள் உள்ளத்தில் ஆவலின் தூண்டுதலால் பொங்கி எழுந்த கேள்விகளுக்கு உடனே பதில் கிடைத்துவிட்டது. பேயர்கள் அவர்கள் வீட்டிலேயே புகுந்துவிட்டனர்!

"இந்த வீட்டில் யாரும் பெண்கள் இல்லையா!" ஒருவன் கர்ஜித்தான். எல்லோரும் தேடினர்; எங்கும் தேடினர்; பாத்திரங்களை உடைத்தனர்; அதற்குள் பெண்களைத் தேடினர் போலும்! கதவுகள் உடைபட்டன. சுவர்களைச் சுட்டனர்; உள்ளே பெண்களை வைத்தா சுவர் கட்டியிருந்தது! பாவிகள்!

வீடு நிலைமாறிவிட்டது. லிங்ஸாஉ பதறினாள். இரு! அதோ கேள்,

யார் கூச்சலிடுகிறார்கள்? அந்தக் கிழவி. பாவி அவள் படுகிழவி. அவளிடம் என்ன செய்வார்கள்?

எல்லாம் ஓய்ந்தபிறகு இருவரும் கீழே இறங்கினர். வீட்டைப் பார்க்க முடியவில்லை. கொல்லையில் திராக்ஷைப் புதரில் கண்ட காட்சி லிங்ஸாஉவை அப்படியே அசத்தி உட்காரவைத்துவிட்டது! அந்தக் குடு குடு கிழம் பதினெட்டு வயதுப் பெண்ணாக இருந்து, அவர்கள் பல நாளாகப் பெண்தாகம் பிடித்துத் திரிந்தவர்களாக இருந்தாற்கூட அந்த நிலையிலிருக்க நியாயமில்லை. அந்தக் கிழவி இறந்துகிடந்தாள்.

5

மூத்தபையன் திரும்பி வந்தவுடனேயே தாய், 'அப்பா அவர்களை எங்கேவிட்டாய்?' என்று கேட்டாள். 'ஒரு வெள்ளைக்காரியிடம் ஒப்புவித்து வந்து இருக்கிறேன். அவள் பெரிய கட்டடத்தில் அநேகர் இருக்கிறார்கள். கவலையே இல்லை அம்மா' என்றான். 'அப்படியானால் சரி. என்னையும் அங்கேயே கொண்டு போய்விடு!' என்றாள் தாயும். தந்தையும், 'ஆம் அப்பா, உடனே அழைத்துப்போ!' என்றான்.

கணவனை விட்டு, கலியாணம் ஆன நாள் முதலாய், ஓர் இரவாவது தனியே படுத்தவள் இல்லை அவள். அவளுக்கு மனமே வரவில்லை. ஆனால் என்ன செய்வது? இஷ்டமிருந்தா எவ்வளவோ பேர் எவ்வளவோ வேலை செய்கிறோம்? பிராண ஹானிக்குப் பயந்து செய்வதைவிட மானபங்கத்துக்குப் பயந்து எவ்வளவு வேலை செய்ய வேண்டியிருக்கிறது? சம்பந்தி அம்மாளுக்கு நடந்ததை நினைத்தால் அவள் இனி ஒரு கணம் இங்கே தங்க முடியுமா? அவள் மகனுடன் கிளம்பிவிட்டாள். கால்கள் எழவில்லை. உடல் வியர்த்தது. கண்களை நீரும் மயக்கமும் மறைத்தன, அவள் தள்ளாடி நடந்தாள்.

* * *

அந்தக் கட்டடத்தில் அவர்கள் சேரும் போது இரவு ஆகி விட்டது. அங்கே அவள் தன் குழந்தைகளைப் பார்த்தாள். ஆனால் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தனர். எழுப்ப ஆசைப்பட்டாள். ஆனால் அந்த வெள்ளைக்காரப் பெண்மணி 'அம்மா' ராத்திரி தூங்கு, காலையில் பேசிக்கொள்ளலாம்! 'என்று சொல்லிவிட்டாள். அவளும் வேண்டா வெறுப்பாய் அங்கேயே தரையில் சுருண்டு படுத்தாள்.

6

காலையில் எழுந்தவள் தன் குழந்தைகளுடன் பேசினாள். பல செயல்களைச் சொன்னாள், சில நிகழ்ச்சிகளை மறைத்தாள். கண்ணீருகுத்துக் கொண்டே இடையில் சிரித்தாள். அவள் நிலை அவள் கையில் இல்லை. அவள் கண்டிராத, கேட்டுமிராத செயல்களை அன்று அவள் கண்ணால் பார்த்திருந்தாள். பெண், 'என் மாமியார் வரவில்லையா?' என்று கேட்டாள். லிங்ஸாஉ சற்று நேரம் விழித்தாள். பிறகு 'அவளா' அந்தக் கிழவி எப்படி இவ்வளவு தூரம் நடந்து வருவாள்?' என்றாள். பெண்ணும் சமாதானம் அடைந்தாள்.

லிங்ஸாஉ பலரைப் பார்த்தாள். ஜப்பான் வீரர்களின் கோரத்தின் சரித்திரம் அந்தக் கட்டடத்துக்குள்ளிருந்த ஒவ்வொரு லலிதமான மனித உருவத்தின் ஒவ்வொரு ரேகையிலும் அழுத்தமாய் எழுதப் பட்டிருந்தது. அவர்களுக்கு இடையே ஆறு பெண்கள் அவள் மனதைக் கவர்ந்தனர். அவர்கள் தோற்றமும் அழகும் வேஷமும் அவளை அச்சுறுத்தின. அவர்களுடன் யாரோ ஒரு பெண்மணி பேசிக்கொண்டிருந்தாள். லிங்ஸாஉவும் அங்கே சென்றாள்.

ஆம், அவர்கள் வேசையர். அதைக்கண்ட அவளுக்கு அவர்களுடன் பேசக்கூட மனம் வரவில்லை. 'இது வெள்ளையர் கோவில். இங்கேயும் வந்துவிட்டனர். இந்த முண்டைகள்!' லிங்ஸாஉவுக்கு என்னவோ வயிற்றைப் புரட்டிக்கொண்டுவந்தது. இந்தப் பிணங்களுக்கு மானமா போய்விடும் இப்படி ஓடிவர—சை அம்மா! இதுகளுக்கு வெட்கம் தான் இல்லை......... அவளுக்குத் தொடர்ந்து யோசிக்க முடியவில்லை.

ஆனாலும் அவர்கள் சொல்வதைக் கேட்டாள்.

'அம்மா நாங்கள் 'ஸோச்சு' என்ற ஊரில் வசித்துவந்தோம். நாங்கள் அறுபது பேர் அந்த இடத்தில் இருந்தோம். அங்கேயும் அவர்கள் வந்தனர். அந்தப் பேயர்களுக்குப் பெண்ணுருவம் தென்பட்டால் போதும். எண்ணிக்கையைப் பற்றியோ, உடல்நிலை, வயது எதைப்பற்றியும் எண்ணுவதில்லை. 500 சிப்பாய்கள் 60 பேருடைய உடலைக் கிளற ஆரம்பித்தனர். எப்படியோ நாங்கள் ஆறுபேர் உயிர்தப்பினோம்; ஓடினோம்.

தங்கியிருந்தால்...... செத்தபிறகும் விடமாட்டார்கள் அந்தப் பிசாசுகள்...... சுவரும் கரைந்தது இந்தக் கதையைக்கேட்டு. பெண்கள் கரையக் கேட்பானேன்?

லிங்ஸாஉ கூட 'கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும்!' என்றுள். அவர்கள் நாற்பத்தெட்டு மணி பட்டினிகிடந்த கதையைக் கேட்டு அவள் அழுதேவிட்டாள்.

7

இரவு எட்டுமணி. எல்லோரும் சாப்பிட்டுப் படுத்துக்கொண்டனர். அந்த வெள்ளைக்காரஸ்திரீ விளக்கை எடுத்துக்கொண்டு ஒவ்வொருவரிடமும் வந்தாள். 'அம்மா கடவுள் காப்பாற்றுவார்' என்றுள். அவளுக்குத்தான் என்ன அக்கரை! இதுவும் மனிதத் தன்மைதான்! லிங்ஸாஉ பார்த்துக் கேட்கிறுளே அதுவும் மனிதத்தன்மை தானு? அவள் மனம் தழுதழுத்தது.

திடீர் என்று ஆரவாரம். கதவு தட்டும்சத்தம்' யார்? ? எந்தக் கதவு? ? ?

வெள்ளைக்காரப் பெண்மணி எல்லோரையும் அடக்கினுள். எல்லோரும் எழுந்து ஓர் இடத்தில் கூடினர். பயமும் கலவரமும் பிய்த்துஎடுக்க ஆரம்பித்தன. ஒருவரை ஒருவர் பார்த்தனர். 'இங்கே எதற்கு வந்தார்கள்?' எதற்கு வருவார்கள் நாய்கள்? எல்லாம் எலும்பைத் தேடிக்கொண்டு தான்! வெள்ளைக்காரப் பெண்மணி திரும்பி வந்தாள். அவள் வாசலில் அவர்களுடன் பேசி விட்டுத் திரும்பியிருந்தாள்,

'அம்மா! என்ன சமாச்சாரம்?'
அவள் பேச வில்லை. முகம் பேயறைந்தாற் போல் இருந்தது.

'என்ன அம்மா? சொல்லுங்கள்!'

அவள் அப்படியே கால் தள்ளாட உட்கார்ந்து விட்டாள். வாசலில் கதவு தட்டியபடி இருந்தது. 'உடைத்து விடுவோம்,' என்ற சத்தமும் அலறி எழுந்து கொண்டிருந்தது.

'சொல்லித்தான் ஆகவேண்டும். "வாசலில் இருபது முப்பது சிப்பாய்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு ...."

'பெண் வேண்டுமாமா?,' லிங்ஸாஉ தான் பேசினுள். வெள்ளைக்காரப் பெண்மணி தலையைத் தூக்கினுள். அங்கே வெறுப்பே உரு எடுத்துத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது லிங்ஸாஉ முகத்தில்.

'ஆம்; சும்மா இருந்தால் கதவை உடைத்து விடுவார்கள். உள்ளே வந்தால் கேட்க வேண்டாம்................. பிறகு நான் எப்படிச் சொல்வேன் உங்களிடம்......?,

ஆம், அவளும் பெண்தானே! எப்படிச் சொல்வாள் மேலே!

'ஒரு கால் ஐந்தாறு பெண்கள் கிடைத்தால் போய் விடலாம்' என்று யாரோ ஒருத்தி சொன்னுள்.

'ஆம்.!'

சற்றுநேரம் மௌனம். மௌனமா அது? பயத்தின் கோர தாண்டவம். அதைக் கலைத்து எழுந்தது ஒரு குரல்—'சரி நாங்கள் அறுவரும் போகிறோம்!,

யார்? லிங்ஸாஉ திரும்பிப்பார்த்தாள்.

ஆம்! அந்த வேசையர் தாம்!

லிங்ஸாஉ மனம் வசமிழந்தது. கண்களில் துளிகள் சுழன்று நின்றன அவள் நிலைக்குவந்த போது அவர்கள் வாயிற்பக்கம் சென்றுகொண்டிருந்தனர். ஒருத்தி சொல்லிக்கொண்டே போனுள் —'வாங்களடி, மற்றவர்கள் மானத்துக்கு ஓடிவந்தவர்கள். நாம் பிராணனுக்கு ஓடிவந்தவர்தானே! அவர்கள் மானத்தைக் காப்பாற்ற நம் பிராணனை விடலாம்' என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

லிங்ஸாஉ பார்த்தாள் ஹரிக்கேன் வெளிச்சத்தில். அவர்கள் அவளுக்கு அப்பொழுது மானிடப் பெண்களாகவே தோன்றவில்லை. ஆறுபேரும் ஆறு தேவதைகளாகத் தோற்றமளித்தனர். இரண்டு நாளைக்குள் லிங்ஸாஉ மனிதத்தன்மையின் பல உருவங்களைப் பார்த்துவிட்டாள். ஆனுல் விஷத்துக்குள் அமுதமிருக்கும் விந்தையை இப்பொழுதே பார்த்தாள். அர்த்தமில்லாமல் கடவுள் உங்களைக் காப்பார்! என்று சொல்லிக் கொண்டாள்! ●

இலங்கை நேயர்களுக்கு

நாண்ய செல்வவணி சிரமத்திற்கு, "காவேரி" பிரதிகளை வி. பி. பி. யில் பெறலாம். தேவைக்கு எழுதவும்.

மானேஜர் "காவேரி"
பெஸண்ட் ரோடு—கும்பகோணம்

199330

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.